28°c
32°c
26°c
தெளிவான
காலநிலை
காணப்படும்

உதயன்

பக்கம் 24

விலை: யாழ்.– 20/= வன்னி – 20/= கொழும்பு – 30/=
சுடர்: 29 கதிர்: 189 வள்ளுவர் ஆண்டு: 2045
வைகாசி 20, செவ்வாய் 03.06.2014

03 JUN 2014

# பொலிஸ் அதிகாரங்களை ஒருபோதும் பகிர முடியாது

## அதைவிடுத்தே ‘13’ஐ நடைமுறைப்படுத்தலாம்
## மோடியின் வலியுறுத்தலுக்கு கொழும்பு தெளிவான பதில்

யாழ்ப்பாணம், ஜூன் 03
மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்கள் பகிரப்படுவதை ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை. 13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தம் நடைமுறைப்படுத்தப்படுமானால் அதை விடுத்து ஏனைய அம்சங்களே நடைமுறைப்படுத்தப்படும் என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது இலங்கை அரசு.
அண்மையில் இந்தியா சென்றிருந்த இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம், '13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தத்தை நடைமுறைப்படுத்தி, அதற்கு அப்பாலும் சென்று தீர்வு காண வேண்டும்' என்று அந்த நாட்டின் பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தி இருக்கும் நிலையிலேயே இலங்கை அரசின் நிலைப்பாட்டை அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்துள்ளார் அமைச்சரவைப் பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல.
கடந்த மே மாதம் 26 ஆம் திகதி இடம்பெற்ற இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பதவியேற்புக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சென்றிருந்தார். இதன் போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றிருந்தது.
இந்தச் சந்திப்பில் 13 ஆவது திருத்தம் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் என் றும், அதற்கு அப்பால் சென்று தீர்வு காணப்பட வேண்டும் என்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் தெரி வித்திருந்தார். மேலும் காணி, பொலிஸ் அதிகாரங்களும் பகிரப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தார்.
ஆனாலும் இந்தச் சந்திப்புத் தொடர்பில் இலங்கை அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில் 13 ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்தப்படுவது தொடர்பில் எதுவும் கூறப்பட்டிருக்கவில்லை. ஆனாலும் இந்திய வெளிவிவகாரச் செயலாளர் சுஜாதா சிங் வெளியிட்ட செய்திக் குறிப்பில் மேற்படி விடயம் உள்ளடக்கப்பட்டிருந்தது.
இந்தநிலையில், 13 ஆவது திருத்தத்தின் முக்கிய சரத்தான காணி, பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு பகிரும் விடயத்தில் இலங்கை

21ஆம் பக்கம் பார்க்க

### கல்வி அமைச்சு, திணைக்களம் ஒரே கட்டடத்தில்

யாழ்ப்பாணம், ஜூன் 3
வடக்கு மாகாண கல்வி அமைச்சு மற்றும் வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் ஆகிய இரண்டும் எதிர்காலத்தில் ஒரே கட்டடத்தில் அமையவுள்ளன. அந்தக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த வடமாகாண கல்வி

— 21ஆம் பக்கம் பார்க்க

டில்லிக்கும் கொழும்புக்கும் மீண்டும் மோதல் நிலையா?

பக்கம் 12

# காணி அபகரிப்பை எதிர்த்து மக்கள் நேற்றுக் கிளர்ச்சி

## கடும் எதிர்ப்பால் காணிகளை அளவிடும் பணிகள் முடங்கின

அச்சுவேலி, ஜூன் 3
அச்சுவேலி மற்றும் நுணாவில் பகுதிகளில் பொதுமக்களின் காணிகள் இராணுவத் தேவைகளுக்காக சுவீகரிக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று அறவழிப் போராட்டம் நடத்தப்பட்டது. சுவீகரிக்கப்படும் காணிகளை அளவீடு செய்யும் பணிகள் நேற்று நடைபெறவிருந்த நிலையில் மக்களின் போராட்டத்தால் அவை கைவிடப்பட்டுள்ளன.
அச்சுவேலிப் பகுதியிலும், அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவு தலைமை அலுவலக கட்டடத் தொகுதி மற்றும் அதனை அண்டியுள்ள சுமார் பத்து ஏக்கர் வரையான காணிகளை நிரந்தரமாக சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில்



21ஆம் பக்கம் பார்க்க

### ஜனாதிபதி ஆணைக்குழு மட்டக்களப்புக்கு பயணம்

காணாமற் போனோர் தொடர்பில் 177 பேரின் விசாரணை மேற்கொள்ள

யாழ்ப்பாணம், ஜூன் 03
காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு எதிர்வரும் 6 ஆம் திகதி மட்டக்களப்புக்கு பயணம் மேற்கொண்டு 177 பேரிடம் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

21ஆம் பக்கம் பார்க்க

### வீட்டுக்குள் புகுந்த இளைஞர் சரமாரியாகக் கத்திக் குத்து

கேப்பாபிலவில் குடும்பஸ்தர் சாவு; குடும்பத் தகராறால் ஆவேசம்

முல்லைத்தீவு, ஜூன் 3
வீடு ஒன்றுக்குள் புகுந்த இளைஞர் ஒருவர், அங்கிருந்த 3 பிள்ளைகளின் தந்தை ஒருவரைச் சரமாரியாகக் குத்திக்

21ஆம் பக்கம் பார்க்க

### கடற்றொழில் அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு செய்யவில்லை

நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகள் ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 03
யாழ். மாவட்டத்தின் கடற்றொழில் அபிவிருத்திக்காக 2 ஆயிரத்து 233 மில்லியன் ரூபா தேவை என்று மதிப்பீடு செய்யப்பட்டு, கடற்தொழில் நீரியல் வள அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்ட திட்ட அறிக்கைக்கு 'இதுவரையில் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.
போரால் பாதிக்கப்பட்ட தமிழர்

21ஆம் பக்கம் பார்க்க

### தொடர்கிறது காணி சுவீகரிப்பு

ஒருங்கிணைப்புக் கூட்டத்தின் தீர்மானத்தையும் மீறி

யாழ்ப்பாணம், ஜூன் 3
யாழ். மாவட்டத்தில் காணி சுவீகரிப்புக்கு விடுக்கப்பட்ட அறிவித்தல்களை அரசு திரும்பப் பெற வேண்டும் என்று ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையிலும், காணிகள் சுவீகரிப்பு நடவடிக்கைகளை நிறுத்துவதற்குரிய எந்தவொரு அறிவித்தலும் யாழ். மாவட்டச் செயலகத்தால் இதுவரை விடுக்கப்பட வில்லை. அதனால் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் யாழ். மாவட்டத்தில் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.
யாழ். மாவட்டத்தில் இராணுவ முகாம் அமைப்பதற்காக பொது மக்களின் காணிகளை சுவீகரிப்பதற்கான அறிவித்தல்கள் விடுக்கப்பட்டிருந்தன. இவ்வாறு

21ஆம் பக்கம் பார்க்க

### தமிழக மீனவர்களுக்கு 14 நாள்கள் மறியல்



மன்னார், ஜூன் 3
தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து கடந்த சனிக்கிழமை இரவு கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இராமநாதபுரத்தைச் சேர்ந்த 29 மீனவர்களையும் இம்மாதம் 16 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார் மன்னார் மாவட்ட

21ஆம் பக்கம் பார்க்க

### எமது பூர்வீக நிலங்களை மீட்க நடவடிக்கை எடுங்கள்

முதலமைச்சரிடம் கண்ணீருடன் கோரினர் கொக்குத்தொடுவாய் புளியமுனை மக்கள்

முல்லைத்தீவு, ஜூன் 3
தமது மூதாதையர் விவசாயம் செய்து எமது வளர்ச்சிக்கு ஆதாரமாக இருந்த பாரம்பரிய நிலங்களை மீட்டுத்தாருங் கள் – இவ்வாறு கண்ணீர் மல்க வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனிடம் கோரினர் கொக்கிளாய் புளியமுனை மக்கள்.
நேற்று முல்லைத்தீவு மாவட்ட மக்களின் குறைகளை கேட்டறியும் நோக்குடன் ஒருநாள் பயணமாக அங்கு சென்றிருந்த

21ஆம் பக்கம் பார்க்க

### அரசியல் தலையீட்டை நிறுத்தக்கோரி பல்கலை ஆசிரியர் பணிப்புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 3
பல்கலைக் கழகங்கள் மீதான அரசியல் தீலையீட்டை நிறுத்துமாறு கோரியும், வேறு பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தும் யாழ்ப்பாணப் பல்கலைகழகம் உட்பட நாடளாவிய ரீதியில் அனைத்துப் பல்கலைக்க ழக ஆசிரியர்கள் இன்று ஒருநாள் அடையாள பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். இந்தத் தகவலை அனைத்துப் பல்கலைக்கழகங்களினதும் ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.
பல்கலைக்கழகங்களில்துணைவேந்தர் நியமனம் மாத்திரமன்றி பேரவை உறுப்பினர்

21ஆம் பக்கம் பார்க்க

# இலங்கைத் தமிழரின் நலன்களில் அக்கறை கொண்டுள்ளது இந்தியா

## யாழ்.இந்தியத் துணைத்தூதரகத்தின் பிரதானி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 3

இந்திய அரசு இலங்கைத் தமிழர்களின் நலனில் அக்கறை கொண்டு பல்வேறு செயல் திட்டங்களை முன்னெடுத்து வருகிறது. அந்தவகையில் வடக்கு மாகாணத்துக்கு 125 பில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார் யாழ்.இந்தியத் துணைத் தூதரகத்தின் பிரதானி ஜஸ்ரின் மோகன்.

பனை அபிவிருத்தி சபையின் ஆராய்ச்சி மாநாடு நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

"இரு நாட்டு அரசுகளதும் கூட்டு முயற்சியால் இலங்கையில் பல அபிவிருத்திகளை இந்தியா மேற்கொண்டுள்ளது. வடக்கு மாகாணத்திலும் பல அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில், அச்சுவேலியில் அமைக்கப்படும் கைத்தொழில் பேட்டைக்கு 220 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இன்னும் 2 மாதங்களில் அது ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதனால் யாழ்ப்பாண மக்களுக்கு அதிக வேலை வாய்ப்புகள் வழங்கப்படும்.

குருநகரில் 166 மில்லியன் ரூபா செலவில் மீன்பிடி வலைத் தொழிற்சாலை அமைத்துக் கொடுக்கப்பட்டது. அதற்கு ஜப்பானில் இருந்து உயர்தர இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதனால் 5 மடங்காக தொழிற்சாலையில் நன்மை அதிகரித்துள்ளது.

இலங்கைத்தமிழர்களுக்காக பல வளர்ச்சி திட்டங்களை இந்திய அரசு மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக வடக்கு மாகாணத்துக்கு மட்டும் 125 பில்லியன் ரூபா செலவு செய்திருக்கின்றோம். இவற்றில் 100 பில்லியன் ரூபா ரயில் புனரமைப்புக்கு வழங்கப்பட்டுள்ளது.

> "விவசா யம் கைத்தொழில், கல்வி எனப் பல்வேறு துறைகளின் அபிவிருத்திக்காக உதவிகளை இந்தியா வழங்கி வருகிறது. இந் திய அரசில் எவ்வாறான மாற் றங்கள் ஏற்பட்டாலும் உதவி கள் தொடர்ந்து இலங்கைத் தமிழர்களுக்காக வழங்கப் படும்"

தற்போது பளை வரை வந்துள்ள ரயில் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் யாழ்ப்பாணம் வரை வரும். அடுத்த 3 மாதங்களில் காங்கேசன்துறைக்கும் விஸ்தரிக்கப்படும். இவற்றை விடவும் 50 ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. கடந்த வருடம் 10 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. இந்த வருடம் 16 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவுள்ளன. இதற்காக 35 பில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டது.

12 பில்லியன் ரூபாவில் 10.5 பில்லியன் நேரடியாக பயனாளிகளிடம் வழங்கப்பட்டுள்ளது. இதனைவிடவும் விவசாயம் கைத்தொழில், கல்வி எனப் பல்வேறு துறைகளின் அபிவிருத்திக்காக உதவிகளை வழங்கி வருகிறது. இந்திய அரசில் எவ்வாறான மாற்றங்கள் ஏற்பட்டாலும் உதவிகள் தொடர்ந்து இலங்கைத் தமிழர்களுக்காக வழங்கப்படும்"- என்று தெரிவித்துள்ளார்.

(ற-14)

# யாழ். கல்வி வலயத்தில் நியமனம் வழங்கப்படும்

## ஆசிரியர்களின் கோரிக்கைகளை ஏற்று கல்வி அமைச்சின் செயலாளர் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 3

வெளிமாவட்டங்களில் சேவைக் காலத்தை நிறைவு செய்த ஆசிரியர்கள் தமது வதிவிடமாக உள்ள யாழ். கல்வி வலயத்தில் நியமனம் வழங்கப்பட வேண்டும் என்று விடுத்திருந்த கோரிக்கையை அடுத்து அவர்கள் அனைவரும் யாழ். கல்வி வலயத்துக்கே இடமாற்றம் செய்யப்படவுள்ளனர் என்று தெரிவித்துள்ளார் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன். அதற்கான தரவுகளை வலயத்துக்கு அனுப்புப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

வெளிமாவட்டங்களில் சேவைக் காலத்தை நிறைவு செய்த ஆசிரியர்களில் ஒரு பகுதியினர் வலிகாம வலயத்துக்கு உட்பட்ட பகுதிகளை வசிப்பிடமாகக் கொண்டவர்கள். அவர்கள் வலிகாம வலயத்தில் உள்ள பாடசாலைகளில் பணியை ஏற்றுள்ளனர்.

ஏனையவர்களே யாழ்.வலயத்தில் நியமனம் பெறுவதில் சிக்கல் ஏற்பட்டிருந்தது. யாழ். கல்வி வலயத்தில் மேலதிக ஆசியர்கள் உள்ளனர் என்று தெரிவித்து அவர்களுக்கான நியமனம் மறுக்கப்பட்டிருந்தது. குறித்த ஆசிரியர்கள் தம்மை யாழ்.வலயத்தில் உள்ள பாடசாலைகளுக்கு நியமிக்குமாறு கோரி வந்த நிலையில், தமது கோரிக்கை ஏற்கப்படாது விட்டால் கல்வி அமைச்சின் முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றையும் நடத்தப் போவதாகவும் கூறியிருந்தனர்.

இந்த நிலையில் அவர்கள் யாழ். கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் நியமிக்கப்படவுள்ளனர் என்று, கல்வி அமைச்சின் செயலாளர் நேற்றுத் தெரிவித்தார். அவர்களது தரவுகளை மாகாணக் கல்வித் திணைக்களத்திலிருந்து யாழ். வலயத்துக்கு அனுப்பும் பணிகள் இடம்பெறுகின்றன. விரைவில் அவர்களுக்கான பாடசாலைகள் வழங்கப்பட்டு விடும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ற-4)



வரலாற்று சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகை அம்மன் வருடாந்த பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு கடல் தீர்த்தம் எடுக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. (ஐ-102)

# இலங்கையின் ஸ்திரத்தன்மை மோடியால் சீர்குலையுமாம்

## எச்சரிக்கின்றார் விமல் வீரவன்ஸ

கொழும்பு, ஜூன் 3

இந்தியாவின் புதிய பிரதமர் நரேந்திர மோடியால் இலங்கையின் அரசியல் ஸ்திரத் தன்மைக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்று எச்சரித்துள்ளார் அமைச்சர் விமல் வீரவன்ஸ.

மோடியும் அவரது புதிய அரசும் 13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அழுத்தம் கொடுப்பதுடன், இந்தப் பிரச்சினை தொடர்பில் இலங்கைக்கு அழுத்தங்களை பிரயோகித்து வருகின்றது என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொரளை எல்விட்டிகல தொடர்மாடியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் அங்கு மேலும் கூறியதாவது.

"மோடி 13ஆவது அரசியல் அமைப்புத் திருத்தத்திற்கு அப்பால் சென்று தீர்வை வழங்குமாறு கூறியுள்ளார். அதனால் அரசு அதனை வழங்க வேண்டும். இல்லாவிட்டால் ஆட்சியை விட்டு செல்ல வேண்டிய நிலைமை ஏற்படும். இவற்றினால் மக்கள் மத்தியில் கிளர்ச்சிகள் ஏற்பட்டு அரசுக்குப் பாதிப்புகள் ஏற்படும் என்று எதிர்க்கட்சிகள் எண்ணிக் கொண்டிருக்கின்றன.

பிரதமர் மோடி இலங்கை தொடர்பில் சாதகமாக செயற்படுவார் எனச் சிலர் எண்ணுகின்றனர். போர் நடைபெற்ற காலத்தில் இந்தியாவில் பாரதிய ஜனதா ஆட்சியில் இருந்திருந்தால் போருக்கு எதிராக அழுத்தங்கள் அதிகரித்திருக் கும். காங்கிரஸ் ஆட்சியில் இருந்ததால் அழுத்தங்களை சமாளிக்க முடிந்தது.

இலங்கை மக்களே நாட்டுக்கு எது நல்லது என்பதையும், 13ஆவது அரசியல் அமைப்புத் திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதா இல்லையா என்பதை தீர்மானிப்பார்கள்.

இந்தியா உட்பட ஏனைய நாடுகள் சில இலங்கையில் ஆட்சி மாற்றத்தை எதிர்பார்த்துள்ளன. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் இந்த ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த அந்த நாடுகள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

தென்னாபிரிக்கா ஏற்கனவே இலங்கைக்கான சிறப்பு தூதுவர் ஒருவரை நியமித்துள்ளது. இந்தியாவும் இலங்கைக்கான சிறப்பு தூதுவர் ஒருவரை நியமிக்கவுள்ளது. இந்தியா, தென்னாபிரிக்கா உட்பட ஏனைய நாடுகளை கையாளும் போது உரிய முனைப்புகளுடன் அரசு செயற்பட வேண்டும்"-என்று தெரிவித்துள்ளார்.

(ற)


முத்தான 3 வாய்ப்புகள் எம்மிடம் மட்டுமே...

* U.K இல் 2 வருட உழைக்கும் விசா,
2 வருட படிக்கும் விசா– IELTS தேவையில்லை.
O/L உம் வேண்டாம் ஒரு மாதத்தில் பறக்கலாம்.

* கனடா படிக்க உழைக்க 2 வருட விசா:
2 ½ மாதத்தில் முடிவு தெரிந்துவிடும்.
படி முறைகள் பட்டவர்த்தனம்

* எண்ணி 2 வாரத்தில் செங்கென்
நாடுகள் பிரான்ஸ், ஜேர்மனி,
இத்தாலி, சுவிஸ்... பறக்கலாம்.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9016, 021 568 9090
(48692) (6.4) www.thisaivisa.com




# இலங்கைக்குப் பதிலடி கொடுக்க இந்திய மத்திய அரசு தயங்காது

## மீனவர் கைது குறித்து எச்சரிக்கின்றார் பா.ஜ.க. மாநில துணைத் தலைவர்

புதுக்கோட்டை, ஜூன் 3

தமிழக மீனவர்களைக் கைது செய்யும் நடவடிக்கை தொடர்ந்தால், இலங்கைக்குப் பதிலடி கொடுக்க மத்திய அரசு தயங்காது என்று எச்சரிக்கை விடுத்துள்ளார் பா.ஜ.க. மாநில துணைத் தலைவர் எச்.ராஜா.

புதுக்கோட்டையில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களைச் சந்தித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளமை கண்டிக்கத்தக்கது. எதையும் பேச்சு மூலமும், நல்லிணக்கம் மூலமும் தீர்க்க வேண்டும் என்று கருதித்தான் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியா அழைக்கப்பட்டு, அவருடன் பேச்சு நடத்தப்பட்டது. அதற்குள் தமிழக மீனவர்கள் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளனர். இதேநிலை நீடித்தால் இலங்கைக்கு புரியும் மொழியில் பதிலடி கொடுக்க மத்திய அரசு தயங்காது. தமிழக முதல்வர் பிரதமரை சந்தித்து தமிழகத்துக்கு கூடுதல் நிதி தேவை என்று கோரினால் நிச்சயம் பிரதமர் அதிக நிதி ஒதுக்கு வார்"-என்று தெரிவித்துள்ளார்.

(ப)

## புகைத்தல், மதுபாவனைக்கு எதிரான கொடிவாரம்

### வாழ்வின் எழுச்சித் திணைக்களத்தால் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், ஜுன்.3
'நாட்டைக் கட்டியெழுப்பி போதைப்பொருள்களைஒழித்து வாழ்வை எழுச்சி பெறச் செய்வோம்' என்ற தொனிப் பொருளில் புகைப்பிடித்தல் மதுபாவனைக்கு எதிரான கொடி வாரம் வாழ்வின் எழுச்சித் திணைக்களத்தால் யாழ். மாவட்டத்திலும் அனுஷ்டிக்கப்பட்டு வருவதாக சமுர்த்தி உதவி ஆணையாளர் கமகேஸ்வரன் தெரிவித்தார்.
ஒவ்வொரு ஆண்டும் புகைப்பிடித்தல், மதுபாவனை என்பவற்றுக்கு எதிரான கொடி வாரம் மே மாதம் 31 ஆம் திகதி முதல் ஜுன் மாதம் 15 ஆம் திகதி வரையில் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இந்தக் காலப் பகுதியில் சில சமுர்த்தி வங்கிச் சங்கங்களினூடாகவும் நிதி சேகரிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.
கொடி வாரத்தில் சேகரிக்கப்படும் நிதி அந்தந்தப் பிரதேச செயலகங்களிலுள்ள சமுர்த்திப் பயனாளிகளுக்கே பயன்படுத்தப்படும். பாடசாலைகளில் கற்கும் வறிய மாணவர்களுக்கு உதவிக் கொடுப்பனவாகவும், பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள் மற்றும் விசேட தேவையுடையோருக்கு வாழ்வாதார உதவிகளாகவும் சேரிக்கப் படும் நிதி பயன்படுத்தப்படும்.
எனவே ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவு ரீதியாகவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற கொடி வாரத்துக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (வ-5)

## வடக்கு, கிழக்கின் பனை வளத்தில் 3 வீதம்கூட பயன்பாட்டில் இல்லை

### பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.ஜீன்.3
வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் தேசிய பொருளாதாரமே பனை வளத்தில் தங்கியுள்ளது. ஆனால் 3 வீதமான பனை வளத்தைக் கூட நாம் பயன்படுத்துவதில்லை என்று பனை அபிவிருத்திச்சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.
பனை அபிவிருத்தி சபையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் முதல் முறையாக பனை ஆராய்ச்சி மாநாடு நேற்று வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.
இந்த நிகழ்வில் தலைமையுரை நிகழ்த்திய அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்:-
"எமது முன்னோர்கள் பனையை நம்பி வாழ்ந்திருக்கிறார்கள். உணவுக்காக மட்டுமல்லாது மருத்துவத் தேவைகளுக்கும், தங்களுடைய வீட்டின் அடிப்படை தேவைகளுக்காகவும் பயன்படுத்தி இருக்கிறார்கள்.
ஆனால் கற்பகதருவான பனைவளத்தை வளப்படுத்துகின்ற நிலைப்பாட்டில் கடந்த காலத்தில் இருந்து இன்று வரை முன்னேற முடியாதவர்களாகவே இருக்கின்றோம்.
வடக்கு, கிழக்கு மாகணத்தின் தேசிய பொருளாதாரமாக பனை வளத்தில் சுமார் 11 மில் லியன் பனைகள் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. ஆனால் அதில் 3 வீதமான பனை வளத்தைக் கூட நாம் பயன்படுத்தவில்லை.
எமது முன்னோர்கள் பனை சார் உற்பத்தியாக ' 801 பொருள்களை பயன்படுத்தி வந்ததாகவும் கூறப்படுகிறது.
இன்று இதில் சில உற்பத்திகளுடன் மட்டுமேநாங்கள் இருக்கிறோம். எமது முன்னோர்கள் பனைசார் உணவுகளை உண்டுவந்ததால் நீண்ட காலம் உயிர் வாழ்ந்தார்கள் என்பதும், காவியங்கள், ஓலைச்சுவட்டில் வரைந்து ஆவணப்படுத்திய வரலாறுகளும் உள்ளன.
இன்று பங்கஸ் கிருமித்தாக்கத்தால் பனை உற்பத்திகள் மூலம் கைப் பணிகளை மேற்கொள்ள முடியாத நிலையில் இருக்கிறோம். முன்னோர்கள் அழகுசாதனங்கள், மனையியல் பொருள்கள் என காலத்துக்கு ஏற்ப இதை பயன்படுத்தி வந்துள்ளனர்.
தற்போது பனை வளத்தின் ஊடாக 4 ஆயிரம் தொடக்கம் 9 ஆயிரம் வரை வருமானம் பெறக்கூடியவர்களாகவும் உள்ளனர். தரமான பொருள்களை உற்பத்தி செய்வதன் ஊடாக உள்ளூர், வெளியூரில் சந்தை வாய்ப்பை பெறக்கூடியதாக இருக்கும். அத்துடன் பனை வளமும் மேம்படுத்தப்படும்" என்று தெரிவித்தார்.
பனை அபிவிருத்தி சபையின் முதலாவது தலைவர் நித்தியானந்தா ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட இந்த அரங்கில் பாரம்பரிய கைத்தொழில்கள் அபிவிருத்தி அமைச்சர், டக்ளஸ் தேவானந்தா, இந்தியத் துணைத் தூதரகத்தின் பிரதானி ஜஸ்ரின் மோகன், அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் மற் றும் பல்கலைக்கழக் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் வியாபார நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், சிறுசுவடுகள் கட்டமைப்பின் உறுப்பினர்கள் உட்பட பாடசாலை மாணவர்களும் கலந்துகொண்டனர். (வ-14)



விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதைக் காணலாம்

## நடமாடும் வாகனம் மூலம் தேசிய விதைகள் விற்பனை

தென்மராட்சி, ஜுன் 3
விவசாய அமைச்சின் பேராதனை விதை நடுகைப் பொருள்கள் அபிவிருத்தி நிலையத்தினர் தேசிய விதை விற்பனையைப் பிரபல்யப்படுத்தும் வாரத்தை நேற்றுத் திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 7ஆம் திகதிவரை அனுஷ்டிக்கவுள்ளனர்.
"உண்மையான இலங்கையின் சுவை" என்னும் தொனிப்பொருளில் நடத்தப்படும் இந்த நிகழ்வில் விவசாயத் திணைக்களத்தால் உற்பத்தி செய்யப்பட்ட தரமான தேசிய விதைகளை நடமாடும் வாகனம் மூலம் விற்பனை செய்யவுள்ளனர்.
நடமாடும் விற்பனை வாகனம் நாளைமறுதினம் காலை 8 மணிக்கு சாவகச்சேரி பொதுச் சந்தைக்கு வருகை தரவுள்ளது.
தென்மராட்சி பிரதேச விவசாயிகள் இந்த நடமாடும் சேவையில் தமக்குத் தேவையான விதைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## தானியங்கி விமானம் யாழ்ப்பாணத்தில் மீட்பு



மாதிரிப் படம்

மீட்கப்பட்ட தானியங்கி விமானம்

யாழ்ப்பாணம், ஜுன் 3
தன்னியக்க கருவி (ரிமோட்) மூலம் இயங்கும் சிறிய வகை விமானம் ஒன்று கமரா பொருத்தப்பட்டுள்ள நிலையில் யாழ்.நகரில் உள்ள தனியார் விடுதி ஒன்றின் முன்பாக விழுந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.
இது குறித்து விடுதி உரிமையாளர் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து அங்கு வந்த பொலிஸார் அந்த விமானத்தை மீட்டுச் சென்றனர்.
குறித்த சிறியரக தானியங்கி விமானம் நேற்றுக்காலை 6 மணியளவில் விடுதி முன்பாக விழுந்துள்ளது. இதேவேளை, தானியங்கி விமானம் ஒன்றை தமது தேவைக்காக யாழ். நகர்ப் பகுதியில் பறக்கவிட்டதாகவும் அது காணாமற்போயுள்ளது என்றும் தெரிவித்து தொலைத் தொடர்பு நிறுவனம் ஒன்று யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். சம்பவங்கள் குறித்து மேலதிக விசாரணைகளை தாம் மேற் கொண்டு வருவதாகவும் யாழ். பொலிஸார் தெரிவித் தனர். (ஜ-106)

## கஷ்டப்பிரதேசத்தில் பணி நிறைவு செய்த ஆசிரியருக்கு இடமாற்றத்துக்கு அனுமதி

யாழ்ப்பாணம் 03
கஷ்டப்பிரதேசத்தில் சேவைக் காலத்தை நிறைவு செய்து, யாழ். வலயத்துக்கு இடமாற்றம் வழங்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைப்படி இடமாற்றம் வழங்க வடமாகாணக் கல்வி மற்றும் பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் உறுதியளித்துள்ளார் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்ட தலைவர் தேவராசா செந்தூரன் தெரிவித்தார்.
வடமாகாண கல்வி அமைச்சின் செயலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற சந்திப்பின் போதே அவர் இவ்வாறு வாக்குறுதி அளித்தார் என்று செந்தூரன் தெரிவித்தார்.
கஷ்டப்பிரதேசத்தில் ஆசிரியர் சேவைக்காலத்தை நிறைவு செய்த ஆசிரியர்களுக்கான இடமாற்றம் இதுவரையில் வழங்கப்படவில்லை. எனவே தமக்கான இடமாற்றத்தை வழங்குமாறு கோரி கடந்த மாதம் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.
இந்த ஆர்ப்பாட்டத்தின் பின்னர் வடமாகாண கல்வி மற்றும் பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் சத்தியசீலனுடனான சந்திப்பு இடம்பெற்றது. இதன்போது அவர், ஜுன் மாதத்துக்குள் இடமாற்றம் வழங்குவதாக வாக்குறுதி அளித்திருந்தார்.
எனினும் அதற்கான உத்தியோகபூர்வ பதில் கிடைக்காததால் நாம் இன்று (நேற்று) மீண்டும் போராட்டம் நடத்த திட்டமிட்டிருந்தோம்.
இந்த நிலையில் எம்முடன் தொடர்புகொண்டு யாழ்.வலயத்திற்குள் இடமாற்றம் வழங்குமாறு கோரிய ஆசிரியர்கள் 22 பேருக்கும் யாழ்.வலயத்துக்குள் இடமாற்றம் வழங்குவதாக சத்தியசீலன் வாக்குறுதி அளித்தார் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்ட தலைவர் மேலும் கூறினார். (ஜ-106)

> "
> **நேற்று போராட்டம் நடத்தவிருந்த நிலையில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலர் இந்த உறுதிமொழியை வழங்கினார்**

## வீதிகளுக்கு மக்கள் பங்களிப்புடன் மின்னொளி

யாழ்ப்பாணம், ஜுன் 3
அரியாலைப் பகுதிக்கு மக்கள் பங்களிப்புடன் வீதிகளுக்கு மின் வெளிச்சம் வழங்குவதென நல்லூர்ப் பிரதேசசபை வெள்ளிக்கிழமை நடை பெற்ற கூட்டத்தில் தீர்மானித்தது.
பிரதேச சபைத் தவிசாளர் ப.வசந்தகுமார் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மக்கள் பங்களிப்புடன் வீதிகளுக்கு வெளிச்சம் வழங்கும் நடவடிக்கைக்காக இந்த வருடம் ரூபா இரண்டு மில்லியன் ஒதுக்கப் பட்டுள்ளதாக சபைத் தவிசாளர் தெரிவித்தார்.
அதைத் தொடர்ந்து பிரதேச சபை உறுப்பினர் ஸ்ரீகணேசன் கூறுகையில்:-
போரில் மோசமாகப் பாதிக்கப்பட்ட அரியாலைப் பகுதியில் தற்போது பெருமளவு மக்கள் மீளக் குடியமர்ந்துள்ளனர். ஏனைய பகுதிகளைப் போன்று அங்கு வீதி விளக்குகள் அமைக்கப்படாமையால் மக்கள் இருளில் பல்வேறு கஷ்டங்களின் மத்தியிலேயே வீதிகளில் நடமாட வேண்டியுள்ளது.
பாம்புகளின் தொல்லையும் அதிகரித்துள்ளது. இம்முறை அரியாலைப் பிரதேசத்துக்கு அதிகமான மின் குமிழ்களை வழங்க வேண்டும் என்று கேட் டுக் கொண்டார். (வ-7)

# வல்லை இராணுவ முகாமை பெரும் படைத்தளமாக்க முயற்சி

கரணவாய்,ஜூன்.3
வல்லை இராணுவ முகாமை பெரும் படைத்தளமாக விஸ்தரிக்கும் முயற்சியில் இராணுவத்தினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.
போர் இடம்பெற்ற காலத்தில் வல்லைச் சந்தியில் இராணுவச் சோதனை முகாம் அமைக்கப்பட்டு சோதனைகளும், வாகனப் பதிவுகளும் இடம்பெற்று வந்தன. போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதை அடுத்து சோதனை நடவடிக்கைகள் தளர்த்தப்பட்டு இராணுவமுகாமும் சந்திகோயில் வீதிப் பக்கமாக பின்நகர்த்தப்பட்டது.
பின்னர் பருத்தித்துறை பிரதான வீதியின் பகுதியில் சிறிய முகாமாக அமைக்கப்பட்ட குறித்த முகாமை தற்போது விஸ்தரிக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.
கனரக வாகனங்கள் மூலம் தினமும் கொண்டுவந்து இறக்கப்படும் உபகரணங்களைக் கொண்டு குறித்த புதிய படைமுகாம் விஸ்தரிக்கப்படுகின்றது. இடம்பெயர்ந்த மக்களுக்கென தற்காலிகக் கொட்டகை அமைப்பதற்கு வழங்கப்பட்ட பொருள்களைக்கொண்டே படைமுகாம் அமைக்கப்படுகின்றது.
அதுமட்டுமல்லாது முன்னைய காலங்களில் வீதியோரங்களில் நடப்பட்டிருந்த சவுக்கு மரங்களையும் படையினர் வெட்டித் தமது தேவைகளுக்குப் பயன்படுத்துகின்றனர்.
இதேவேளை-புதிய படை முகாமில் காலை, மாலை வேளைகளில் இராணுவத்தினருக்கான பயிற்சி வழங்கப்படுவதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இதனால் இந்த முகாம் படையினருக்காக நிரந்தர பயிற்சி முகாமாக ஆக்கப்படுமோ என்று மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.
இதேவேளை படையினரின் இந்த விஸ்தரிப்பு நடவடிக்கைகளால் அந்தப் பகுதிகளில் சிறுபோக விவசாய நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்திவந்த நிலப்பரப்பும் பறிபோகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (வ-108)

# இலங்கையரின் நகைகளை திருப்பிக் கொடுக்க கேரளா நீதிமன்றம் உத்தரவு

அகமதாபாத், ஜூன்.3
தங்க ஆபரணங்கள் அணிந்து கொண்டு வெளி நாட்டவர்கள் இந்தியாவுக்குள் வருவதைத் தடுக்கும் சட்டம் ஏதுமில்லை என்று தீர்ப்பளித்த கேரள மேல் நீதிமன்றம், இலங்கை சுற்றுலா பயணிகளிடமிருந்து பறிமுதல் செய்த தங்க சங்கிலியை திருப்பிக் கொடுக்குமாறு தீர்ப்பளித்துள்ளது.
கொழும்பு, காலி வீதியைச் சேர்ந்த விக்னேஸ்வரன் சேதுராமன் என்பவர் தாக்கல் செய்த மனுவை விசாரித்த நீதிபதி பி.என்.ரவீந்திரன் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளார்.
கடந்த பெப்ரவரி மாதம் 22ஆம் திகதியன்று கொழும்பிலிருந்து கொச்சின் சர்வதேச விமான நிலையத்தைச் சென்றடைந்த மனுதாரர், 10.5 பவுண் நிறையுள்ள ஒரு தங்கச் சங்கிலியை அணிந்திருந் தார். சுங்க அதிகாரிகள் அதைப் பறிமுதல் செய்ததுடன் 5,000 ரூபா தண்டமும் விதித்தனர்.
அதனை எதிர்த்து மனுதாரர் கேரள மேல்நீதிமன்றில் சட்டத்தரணி அஸ்வின் கோபகுமார் ஊடாக மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார். அதில் அணிந்து வந்த தங்க நகையைப் பறிமுதல் செய்ததும், தண்டம் விதித்ததும், சட்ட விரோதமானதும், எதேச்சதிகரமானதும் அநீதியானதும் என்று கூறப்பட்டிருந்தது.
மனுதாரர் தங்கச் சங்கிலி வைத்திருப்பதை வெளிப்படுத்தாதது சட்டவிரோதமானது எனவும் அதனாலேயே அதனைப் பறிமுதல் செய்தோம் எனவும் சுங்க அதிகாரிகள் சார்பில் வாதிட்ட சட்டத்தரணி வாதிட்டார்.
இரண்டு பக்க வாதங்களையும் கேட்ட நீதிமன்றம், பயணி, தங்க நகையை வெளிப்படையாக அணிந்து வந்ததால் அதை வெளிப்படுத்த வேண்டிய கடப்பாடு இல்லை என்று தீர்ப்பளித்து, பறிமுதல் செய்த நகையை திருப்பிக் கொடுக்கும்படி தீர்ப்பளித்தது. அத்துடன் தண்டமும் இரத்து செய்யப்பட்டது. (வ)

# விவசாய விதைகளுக்கான தேசிய வாரம் கடைப்பிடிப்பு

வவுனியா, ஜூன் 3
விவசாயிகளுக்கு சிறந்த விதைகளை பெற்றுக் கொடுக்கும் நோக்கிலான தேசிய விதைகளை பிரபல்யப்படுத்தும் வாரமாக நேற்றிலிருந்து எதிர்வரும் 8 ஆம் திகதி வரை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக வவுனியா பிரதி விவசாயப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.
இந்தக் காலப் பகுதியில் " உண்மையான இலங்கையின் சுவை" என்னும் தொனிப் பொருளில் வவுனியாவில் அமைந்துள்ள விதை மற்றும் நடுகைப் பொருள்களுக்கான பிராந்தியப் பிரதி விவசாயப் பணிப்பாளர் பணிமனையில் கண்காட்சியும் விற்பனையும் நடைபெறுகிறது.
இது குறித்துக் கருத்துத் தெரிவித்த வவனியா மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் சி.வி சத்தியமூர்த்தி,
எமது மாவட்டங்களை பொறுத்த வரையில் இங்கு வசிக்கின்றவர்கள் கூடுதலானவர்கள் விவசாயத்தை நம்பியே வாழ்கின்றனர். எனவே அவர்களுக்கு சிறந்த - தரமான விதைகளை பெற்றுக் கொடுப்பது அவசியமானது.
எனவே எல்லா விவசாயிகளுக்கும் ஒரே நேரத்தில் சிறந்த விதைகள் கிடைக்கும் வகையில் விவசாய அமைச்சினால் தேசிய விவசாய வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.
இந்தக் காலப் பகுதியில் கிராமங்கள் ஊடாக தரமான விதைகள் விநியோகம் செய்யும் செயற்பாடும் இடம் பெறும். வவுனியா மாவட்டத்தில் நெடுங்கேணி, ஓமந்தை, கனகராயங்குளம், வவுனியா, வவுனியாவடக்கு, வவுனியாதெற்கு, செட்டிகுளம் ஆகிய விவசாய திணைக்களப் பிரிவுகளில் புதிய தரமான விதைகளை விநியோகம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன - என்றார். (ஐ-402)

## மோடியின் வருகை இலங்கையின் பொருளாதாரத்துக்கு நன்மையாம்

### மத்திய வங்கி ஆளுநர் கருத்து

கொழும்பு, ஜூன் 3
இந்தியப் பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்றுள்ளமை இலங்கையின் பொருளாதாரத்துக்கு நன்மையை ஏற்படுத்தும் என்று மத்திய வங்கி தெரிவித்துள்ளது.
மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் சர்வதேச வர்த்தக சஞ்சிகை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே இதனை குறிப்பிட்டுள்ளார்.
இந்தியாவின் அரசியல் மாற்றமானது, புதிய தொழில் வாய்ப்புக்கள் மற்றும் முதலீட்டு வாய்ப்புக்களை ஏற்படுத்தும் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.
இதன் மூலம் அந்நிய செலாவணி அதிகரிக்கும் என்றும் மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்தார். (வ)

# தமிழர் பிரச்சினைக்கு மத்திய அரசு உதவுக

சென்னை, ஜூன் 3
தமிழகத்தில் நிலவும் முக்கிய பிரச்சினைகளுக்கும் இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வைப் பெற்றுத் தருமாறு கோரி தமிழக சட்ட மன்றத்தின் எதிர்க்கட்சி தலைவரும் தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின்தலைவருமானவிஜயகாந்த் இந்தியப் பிரதமருக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.
தமிழக மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் விஜயகாந்த் அந்தக் கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார்.
இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் ஏனைய மக்களைப் போன்று அனைத்து உரிமைகளுடனும் வாழ்வதற்கேற்ற சூழலை மத்திய அரசு உருவாக்க வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (வ)

# கிளிநொச்சியில் நடைபெற்ற புகைத்தல் எதிர்ப்புப் பேரணி



பேரணியில் கலந்துகொண்டோர்

கிளிநொச்சி, ஜூன் 3
சர்வதேச புகைத்தல் மது எதிர்ப்பு தினத்தையொட்டிய பேரணி ஒன்று கிளிநொச் சியில் நேற்று நடைபெற்றுள் ளது.
பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம் கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் ஏற்பாடு செய்யப்பட்ட விழிப்புணர்வு பேரணி நேற்று முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி நீதிமன்றம் முன்பாக ஆரம்பமாகி, கரைச்சிப் பிரதேச செயலகம்வரை சென்று நிறைவு பெற்றுள்ளது.
கடந்த 31 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படும் சர்வதேச புகைத்தல் மது ஒழிப்பு தினத்தில் நாட்டை கட்டியெழுப்பி போதைப் பொருளை ஒழித்து வாழ்வை எழுச்சி பெறச் செய்வோம் என்ற தொனிப் பொருளில் மதுபோதையைத் தவிர்த்து மனித மகத்துவத்தை உணருங்கள், உன்னை அணு அணுவாக கொல்லும் உயிர் கொல்லி சிகரெட், புகைத்தல் புற்று நோயை உண்டாக்கும், மது உயர்ந்த மனித விழுமதிப்பைக் குறைக்கும், உழைக்கும் மனிதனின் சம்பளத்தை கரைக்கும்.
போன்ற வாசகங்களை ஏந்தியவாறு கரைச்சிப் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொது மக்கள் ஆகியோர் பேரணியில் கலந்துகொண்டிருந்தனர். (வ-55)


## துயர் பகிர்கின்றோம்

எமது நிறுவனத்தின் பணியாளர் செல்வி க. சுஜித்தா அவர்களின் அன்புத் தந்தை

**சோமசுந்தரம் கனகசபாபதி**

அவர்களின் மறைவையிட்டு ஆறாத் துயரில் ஆழ்ந்திருக்கும் அவருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

140, பலாலி வீதி,
திருநெல்வேலி.
(48701) (10)

எம். இராஜநாயகம் அன்ட் கம்பனி
பட்டயக் கணக்காளர்கள்,
நிறுவன உரிமையாளரும், பணியாளர்களும்.

## மரண அறிவித்தல்



**தவமணி இராஜேஸ்வரன்** (ஓய்வு பெற்ற ஆசிரியை)

கோப்பாய் வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற ஆசிரியை தவமணி இராஜேஸ்வரன் நேற்று (02.06.2014) திங்கட்கிழமை அதிகாலை காலமானார்.
அன்னார் ஓய்வுபெற்ற அதிபர் வைரமுத்து கந்தையா - ஆசிரியை நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும் ஓய்வுபெற்ற படவரை கலைஞர் ஆன சின்னத்தம்பி இராஜேஸ்வரனின் அன்பு மனைவியும், கிரிஷாந்தாவின் அன்பு தாயும், கிறிஸ்ரின்றாஜின் (UK) அன்பு மாமியும், அஸ்வினி, லக்ஷ்வினி ஆகியோரின் பேர்த்தியும், யோகமணி,மனோன்மணி, ஜெயமணி ஆகியோரின் அன்பு சகோதரியும் காலஞ்சென்ற தர்மரட்ணம், சற்குணபாலன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (02.06.2014) திங்கட் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கோப்பாய் வடக்கு,**
**கோப்பாய்.**

**தகவல்**: மனோன்மணி (சகோதரி)
ஓய்வுபெற்ற ஆசிரியை கோப்பாய்
கிறிஸ்தவக் கல்லூரி.

## வன்னி விளாங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் விழா 06.06.2014



அம்மன் அடியார்களே வன்னி விளாங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் 06.06.2014 வெள்ளிக்கிழமை வழமை போல் நடைபெற இருப்பதால் அடியார்கள் கலந்து கொண்டு அம்பாளின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

குறிப்பு - *பொங்கல் தினத்தன்று வியாபாரம் செய்ய விரும்புவோர் 04.06.2014 நண்பகல் 12.00 மணி தொடக்கம் தங்கள் பெயர்களை பதிவு செய்து முழுப்பணத்தையும் செலுத்தி பற்றுச்சீட்டு பெற்றுக் கொண்டால் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள் என்பதை அறியத் தருகின்றோம்.*

**இங்ஙனம்: ஆலயத் திருப்பணிச் சபை**
**வன்னி விளாங்குளம்**
**மாங்குளம்.**

# பாடசாலை சேவை வாகனங்களை ஒழுங்குபடுத்துவதற்கு குழு நியமனம்

## 31 ஆம் திகதிக்குள் அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவு

கொழும்பு,ஜூன் 3

பாடசாலை சேவையில் ஈடுபடும் வாகனங்கள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்துவதற்கு 14 பேர் கொண்ட ஆணைக்குழுவொன்றை தனியார் போக்குவரத்துத்துறை அமைச்சர் சி.பி.ரட்ணாயக்க நியமித்துள்ளார்.

தனியார் போக்குவரத்து அமைச்சர் என்ற ரீதியில் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய தேவை எமக்கு உள்ளது.

அதற்கமைய பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும், பாடசாலைச் சேவையில் ஈடுபட்டுள்ளவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையிலும் இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-



சி.பி.ரட்ணாயக்க

இந்த ஆணைக் குழு தனியார் போக்குவரத்து சேவைகள் அமைச்சின் செயலாளர், தனியார் போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர், மோட்டார் வாகனத் திணைக்கள அதிகாரிகள், கல்வி அமைச்சின் பிரதிநிதிகள், போக்குவரத்து அமைச்சின் பிரதிநிதிகள், நீதி அமைச்சின் பிரதிநிதிகள், பாடசாலைகளின் பிரதிநிதிகள், பாடசாலை வான் சேவையில் ஈடுபடுபவர்களின் பிரதிநிதிகள் உட்பட 14 பேரைக் கொண்டதாக நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவினர் பாடசாலை வான் சேவை தொடர்பான சகல விடயங்கள் குறித்தும் ஆராய்ந்து எதிர்வரும் ஜூலை மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அறிக்கையொன்றை சமர்ப்பிக்கவுள்ளனர்.

இந்த அறிக்கை பொது மக்களுக்கு பகிரங்கப்படுத்தப்பட்டு கருத்துக்கள் பெறப்பட்டு உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

பாடசாலை சேவையில் ஈடுபடும் வான்களின் தரங்கள், சாரதிகளின் உடற்தகுதி, மாணவர்கள் அமர்ந்து செல்லக்கூடிய இருக்கை வசதிகள், வாகனத்தில் காணப்படும் காற்றோட்ட வசதிகள், முதலுதவிப் பெட்டிகள் உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து இந்த ஆணைக்குழு ஆராய்ந்து அறிக்கையொன்றைத் தயாரிக்கவுள்ளது. பாடசாலைச் சேவையில் ஈடுபடும் வான்களை இலகுவாக அடையாளம் காணத்தக்க வகையில் மஞ்சள் நிற வர்ணம் பூசுவதற்கு தீர்மானித்துள்ளோம்.

இது தொடர் பில் இதுவரை இணக்கப்பாடு எட்டப்படவில்லை. முதற்கட்டமாக பாடசாலைச் சேவையில் ஈடுபட்டுள்ள வாகனங்கள் அனைத்துக்கும் ஸ்டிக்கர் ஒன்றை ஒட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது -என்றார். (ச)

# பௌத்த சாசன அமைச்சு இனி ஜனாதிபதியின் கீழ்

கொழும்பு,ஜூன் 3

பௌத்த சாசன மற்றும் சமய விவகார அமைச்சு ஜனாதிபதியின் கீழ் கொண்டுவரப்பட உள்ளது என்று நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து தகவல்கள் கிடைத்துள்ளன என்று சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பௌத்த சாசன மற்றும் சமய விவகார அமைச்சு தற்போது பிரதமரின் கீழ் இயங்கி வருகின்றது.

அண்மைக் காலமாக நாட்டில் இடம்பெற்று வரும் மத முரண்பாடுகள் மற்றும் மதங்களுக்கு இடையிலான பிரச்சினைகளுக்கு தீர்வு காண உரிய நடவடிக்கை எடுக்கப்படாமை ஆகிய காரணிகளை கருத்தில் கொண்டே அமைச்சுப்பதவியைத் தன் வசம் எடுத்துக் கொள்ள ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.



மஹிந்த ராஜபக்ஷ

இதேவேளை, பௌத்த சாசன மற்றும் சமய விவகார பிரதி அமைச்சுப் பதவி பொதுமக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு வழங்கப்படலாம் என்று கூறப்படுகிறது. (ச)

# சிறையிலிருந்து விடுதலையாகும் கைதிகளுக்கு ஐம்பதாயிரம் ரூபா

## அதற்கான நிதியும் ஒதுக்கீடு என்கிறார் சந்திரசிறி கஜதீர

கொழும்பு,ஜூன்3

நீண்ட காலமாக சிறைகளில் தண்டனை அனுபவித்து விடுதலையாகும் கைதிகளுக்கு 50 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்க திட்டமிட்டுள்ளது என்று சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்தார்.

ஊடகமொன்றுக்கு அளித்த நேர்காணல் ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தக் கொடுப்பனவு விரைவில் வழங்கப்பட உள்ளது. சிறைச்சாலை பயிற்சிகளை பூர்த்தி செய்து நன்னடத்தையுடன் செயற்படும் நபர்களுக்கு இவ்வாறு கொடுப்பனவு வழங்கப்படும்.

இந்த ஆண்டில் ஆயிரம் கைதிகளுக்கு இவ்வாறு கொடுப்பனவு வழங்கப்பட உள்ளது.

இதற்கான நிதி ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பணத்தை கைதிகள் எவ்வாறு பயன்படுத்துகின்றார்கள் என்பது குறித்து கண்காணிக்கப்படும்.



சந்திரசிறி கஜதீர

இந்தக் கொடுப்பனவு கைதிகளின் வாழ்க்கையை மேம்படுத்தும் நோக்கில் வழங்கப்பட உள்ளது.

சிறையிலிருந்து விடுதலையாகும் கைதிகள் பணக் கஷ்டத்தால் மீண்டும் களவு மற்றும் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபடுகின்றனர்-என்றார். (ச)

# மீன்பிடி வலை உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை

## ஆராய்கிறது அமைச்சு

கொழும்பு, ஜூன்,3


உள்ளூர் மீன்பிடி வலை உற்பத்தியை அதிகரிப்பதற்கு மீன்பிடி மற்றும் நீர்வள அபிவிருத்தி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த நாட்டில் மீன்பிடி வலைகளை உற்பத்தி செய்யும் தொழில்துறையை அபிவிருத்தி 'செய்வதற்கு இந்திய அரசின் உதவிகள் கிடைத்துள்ளன என்று மீன்பிடி மற்றும் நீர்வள அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது குருநகர், லுணுவில, வீரவில ஆகிய பிரதேசங்களில் மீன்பிடி வலைகளை உற்பத்தி செய்யும் மூன்று தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன என்று அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த தொழிற்சாலைகளில் ஆண்டொன்றில் 720 மெ. தொன் நிறை கொண்ட மீன்பிடி வலைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. எனினும் உள்ளூர் மீனவர்களின் தேவையைப் பூர்த்தி செய்ய அந்த உற்பத்திகள் போதுமானதாக இல்லை என்று அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

உவர்நீர் மற்றும் நன்னீர் மீன் தேவையை நிறைவு செய்ய நிலவும் மீன்பிடி வலைகளுக்கான தேவையை எதிர்வரும் ஆண்டுகளுள் பூர்த்தி செய்யும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ச-22)



இந்து சமுத்திர டூனா ஆணைக்குழுவின் 18 ஆவது சர்வதேச அமர்வு நேற்றுமுன்தினம் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமானது. இதன்ஆரம்ப நிகழ்வில் ஆணைக்குழுவின் செயலர் ரண்டோட் பிலிட், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் ராஜித சேனாரட்ணவுக்கு நினைவுச் சின்னம் வழங்கினார். அருகில் அமைச்சர்கள் பஸில் ராஜபக்ஷ, ஜீ.எல்.பீரிஸ் ஆகியோர் காணப்படுகின்றனர்.

# நான்கு மாதங்களில் மட்டும் 35 கைதிகள் தப்பியோட்டம்

## சிறைச்சாலைகள் தலைமையகம் தகவல்

இந்த ஆண்டின் கடந்த நான்கு மாத காலத்துக்குள் சிறைச்சாலைக் காவலர்கள் அறியாத விதத்தில் 35 கைதிகள் சிறைச்சாலைகளில் இருந்து தப்பிச் சென்றுள்ளனர் என்று சிறைச்சாலைகள் தலைமையகம் தெரிவித்துள்ளது.

சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் கவனவீனமே அவர்கள் இவ்விதம் தப்பிச் செல்லக் காரணம் என்று சிறைச்சாலை ஆணையாளர் சந்திரரத்ன பல்லேகம தெரிவித்தார்.

இவ்விதம் தப்பியோடியுள்ள சிறைக் கைதிகள் கைது செய்யப்படும் வரை சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அவர் கூறினார்.

வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த வேளைகளிலேயே இந்தக் கைதிகள் தப்பிச் சென்றுள்ளனர் என்று அவர் தெரிவித்தார். (ச-22)

# நாட்டின் மீன் உற்பத்தி 2016 இல் அதிகரிப்பு

## தொழில்நுட்ப கருவிகளால் மீன் வளங்கள் அழிவு

கொழும்பு,ஜூன் 3

இலங்கையின் மீன் உற்பத்தி 2016 ஆம் ஆண்டாகும்போது 686.000 மெற்றிக் தொன்களால் அதிகரிக்கும் என்று கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்து சமுத்திர டூனா ஆணைக்குழுவின் 18 ஆவது சர்வதேச அமர்வு நேற்றுமுன்தினம் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமானது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

> மீன்பிடிப்பதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்களால் அதிகளவிலான மீன்கள் வீணாக அழிக்கப்படுகின்றன.

ஆரம்ப காலம் முதல் இந்து சமுத்திர மீன் வளத்தை நாம் தேவைக்கு ஏற்ப பயன்படுத்தி வந்தோம். எனினும் தற்போது மீன்பிடிப்பதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்களால் அதிகளவிலான மீன்கள் வீணாக அழிக்கப்படுகின்றன. அதனால் மீன் வளம் பாதிக்கப்படுகின்றது.

கடற்றொழில் துறை மேம்பாட்டுக்காக மேற்கொண்டு வருகின்ற நடவடிக்கைகளின் பயனாகக் கடந்த சில வருடங்களாகத் தனிநபர் மீன் நுகர்வு அதிகரித்துள்ளது. இதன் பயனாகத் தற்போது தனி நபரின் அன்றாட மீன் நுகர்வு 45 கிராம்களாகக் காணப்படுகின்றன. அதனை உலக சுகாதார ஸ்தாபனத்தின் பரிந்துரைக்கு அமைய 60 கிராம்கள் வரை அதிகரிப்பதை இலக்காகக் கொண்டுள்ளோம். தற்போது 500,000 மெற்றிக் தொன்களாகக் காணப்படுகின்ற மீன் உற்பத்தி 2016 ஆம் ஆண்டில் 686, 000 மெற்றிக் தொன்கள் வரை அதிகரிக்கப்படும்- என்றார். (ச)

# மரத்துடன் லொறி மோதி 3 பேர் சாவு

கொழும்பு,ஜூன் 3

அரலகங்வில பகுதியில் நேற்று திங்கட்கிழமை காலை மரத்துடன் லொறியொன்று மோதி விபத்துக்குள்ளானதில் 3 பேர் உயிரிழந்துள்ளதுடன் 11 பேர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நித்திரையின்மை காரணமான அசதியுடன் சாரதி லொறியை செலுத்தியதாலேயே இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் பொலநறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# கல்முனை பிரதேச செயலகத்தில் பெரும்பான்மை இன அதிகாரி

## ஏற்றுக்கொள்ள முடியாது என்கிறார் ரவூப் ஹக்கீம்

அம்பாறை.ஜூன் 3

கல்முனை பிரதேச செயலராக பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மொகான் விக்கிரம ஆராச்சி நியமிக்கப்பட்டமை கண்டிக்கத்தக்கது. நூறு வீதம் தமிழ்பேசுபவர்களைக்கொண்ட கல்முனை பிரதேசத்தில் தற்போது கல்முனை முஸ்லிம் பிரதேச செயலகத்துக்கு சிங்கள பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீ[illegible] தெரிவித்தார்.

இதுகுறித்து அ[illegible] மேலும் தெரிவித்ததாவ[illegible]

முஸ்லிம் பெரும்பான்மை பிரதேசம் ஒன்றின் நிர்வாக அதிகாரியை நியமிக்கும் விடயத்தில் எம்முடன் கலந்தாலோசிக்காமல் இரகசியமாக நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த நியமனத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது.

கல்முனையை பொறுத்தவரை நூறு வீதம் தமிழ் பேசுபவர்களைக் கொண்ட பிரதேசமாகையால் காலம் காலமாக பிரதேச செயலராக தமிழ் பேசும் உயர் அதிகாரிகளே நியமிக்கப்பட்டு வந்துள்ளனர்.


கல்முனை பொலிஸ் நிலையத்துக்கு மட்டுமே சில நேரங்களில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் நியமிக்கப்பட்டு வந்துள்ளனர். தற்போது பொலிஸ் நிலையத்துக்கு கூட தமிழ் பேசும் பொலிஸ் உயரதிகாரி ஒருவரே நியமிக்கப்பட்டுள்ளார்.



ரவூப் ஹக்கீம்

நூறு வீதம் தமிழ் பேசுபவர்களைக் கொண்ட கல்முனை பிரதேசத்தில் தமிழ் பேசும் அதிகாரிகள் மூலமாக மக்கள் தமது அன்றாட தேவைகளை இலகுவாகப் பூர்த்தி செய்து கொள்ள முடிந்தது.

தற்போது கல்முனை முஸ்லிம் பிரதேச செயலகத்துக்கு சிங்கள பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தஒருவர்நியமிக்கப்பட்டிருப்பதை ஏற்றுக்கொள்ள முடி யாது. இந்த விடயம் குறித்து எமது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சகிதம் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரை சந்தித்து விளக்கம் கோரவுள்ளோம். இதன்போது தமிழ் பேசும் பிரதேச செயலர் ஒருவரையே கல்முனை பிரதேச செயலகத்துக்கு நியமிக்க வேண்டும் என்று வலியுறுத்துவோம்-என்றார். (ச)



தீக்கிரையான ஒட்டோ

# இனம்தெரியாதோரால் தீக்கிரையான ஓட்டோ

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செம்மண்ணோடை கிராமத்தில் உள்ள ஒருவருக்குச் சொந்தமான ஓட்டோ நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 2 மணிக்கு இனம்தெரியாதோரால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது என்று வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

செம்மண்ணோடை, தக்வா பள்ளி, குறுக்கு வீதியில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவராக தொழில் புரியும் ஏ.எஸ். சலீம் என்பவருக்குச் சொந்தமானஒட்டோவே இவ்வாறு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இந்தச்சம்பவம்தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# மகாஜனாக் கல்லூரியின் மாணவர்கள் போராட்டம்

## அதிபரை இடமாற்றுமாறு வலியுறுத்தி

மட்டக்களப்பு.ஜூன் 3

மட்டக்களப்பு மகாஜனாக் கல்லூரிக்குள் அதிபரும், ஆசிரியர்களும் நுழைய முடியாத வாறு வெளிவாசல் 'கேற்'றுக்குப் பூட்டுப் போட்டு பெற்றோரும், மாணவர்களும் நேற்று திங்கட்கிழமை காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தகுதி இல்லாத அதிபரையும் குறிப்பிட்ட சில ஆசிரியர்களையும் இடமாற்றுமாறு கோஷம் எழுப்பியவாறு பெற்றோரும் மாணவர்களும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் பாடசாலையின் முன்னேற்றத்துக்கு அதிபர் தடையாக உள்ளதுடன், தற்போதைய அதிபரின் நடவடிக்கையால் பாடசாலையின் கல்வி சீரழிந்து செல்கின்றது என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.



ஆர்ப்பாட்டத்தி[illegible] [illegible]ாணவர்கள்

ஆர்ப்பாட்டம் நடைபெற்ற இடத்துக்குச் சென்ற மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் கே.பாஸ்கரன், மட்டக்களப்பு வலய நிர்வாகத்துக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் குருகுலசிங்கம் ஆகியோர் பெற்றோருடன் கலந்துரையாடியுள்ளனர். அதனையடுத்து அவர்கள் மாணவர்களை பாடசாலையினுள் செல்லுமாறு கேட்டுக் கொண்டதையடுத்து ஆர்ப்பாட்டம் கைவிடப் பட்டது.

இதேவேளை-பாடசாலையிலுள்ள விஞ்ஞான ஆய்வுகூடம் ஒன்றை உள்ளூர் அரசியல்வாதி ஒருவரைக் கொண்டு திறந்து வைக்க வேண்டும் என்பதில் பாடசாலை அபிவி ருத்திச் சங்கத்தைச் சேர்ந்த சிலர் ஆர்வம் காட்டியதாலேயே குழப்ப நிலைமை உருவானது என்று அதிபரும், ஆசிரியர்களும் தெரிவிக்கின்றனர்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இரகசியமாக பெற்றோரை அழைப்பித்து பொய்யான கருத்துக்களைக் கூறி பெற்றோரைத் தூண்டிவிட்டு நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட வைத்துள்ளனர்.

இதற்குக் கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த ஒரு சில அதிகாரிகளும் உடந்தையாக உள்ளனர் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மட்டக் களப்புக் கிளைச் செயலர் பி.உதயரூபன் தெரிவித்தார். (ச)

# திருட்டில் ஈடுபட்ட இருவர் கைது

அம்பாறை, அட்டாளைச்சேனை, மீனோடைக்கட்டு பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் இருவரை அக்கரைப்பற்று பொலி[illegible]ஸார் கைது செய்துள்ளனர்.

அட்டாளைச்சேனை, மீனோடைக்கட்டு, 9ஆம் பிரிவு பள்ளிவாசல் குறுக்கு வீதியிலுள்ள வீடொன்றில் சுமார் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை திருடப்பட்டுள்ளன என்று வீட்டு உரிமையாளரால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

அதனையடுத்து சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகத்தில் பேரில் இருவரை கைதுசெய்துள்ளனர். (ச)

## மரண அறிவித்தல்

### சபாபதி தியாகராசா

(இளைப்பாறிய பிரதம லிகிதர் -பெருந்தெருக்கள் திணைக்களம்)



ஆலங்குளாய், சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், அராலி மத்தி வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதி தியாகராசா 01.06.2014 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதி-தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா- பறுவதபத்தினி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கனகம்மாவின் பாசமிகு கணவரும், சிவபாலன் (UK) சிவராஜன் (பிரான்ஸ்), சிவநேசன், சிவரஞ்ஜனி, சிவரஞ்ஜன் (UK), சிவகுமார் (UK) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுபத்திரா (UK), சந்திரமலர் (பிரான்ஸ்), ஜெகதீஸ்வரி, Dr.சிறிபவானந்தராஜா (பிரதிப் பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), கலாஜினி (UK), சுகந்தா (UK) ஆகியோரின் அன்பு மாமனாரும், மகாலட்சுமி, காலஞ்சென்ற இராசலட்சுமி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான கந்தையா-இரத்தினம் தம்பதியரின் அன்பு மைத்துனரும், தர்சினி, தர்சன், சிவவைஷ்ணவி, சிவநிஷா, வினோதா, இஷாணி, லக்ஷன், துர்கவி, ஜதீசன், லஷ்சுமி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.06.2014) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அராலி புனாவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முருகமூர்த்தி பாடசாலை முன்வீதி,
அராலி மத்தி, அராலி.

தகவல் :
குடும்பத்தினர்.

(48876) (7.6.3)

# காய்க்கத் தொடங்கின பேரீச்சை மரங்கள்



பேரீச்சை மரம்

மட்டக்களப்பு.ஜூன் 3

மட்டக்களப்பு,காத்தான்குடி பிரதான வீதியிலுள்ள பேரீச்சை மரங்கள் காய்க்கத்தொடங்கியுள்ளன.

காத்தான்குடி, 6ஆம் குறிச்சி மற்றும் ஹிஸ்புல்லாஹ் மண்டபத்துக்கு முன்பாகவுள்ள பேரீச்சை மரங்களே இவ்வாறு காய்க்கத் தொடங்கியுள்ளன.

பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ்வின் முயற்சியால் காத்தான்குடி பிரதான வீதியை அழகுபடுத்துவதற்காக பேரீச்சை மரங்கள் நடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## பதின்னான்காம் ஆண்டு நினைவில்...





திதி :
03.06.2014

சின்னத்துரை கனகசபை
(ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி)

சிதம்பரப்பிள்ளை விசாலாட்சி
(அம்மம்மா)

பாசமுடன் எம்மை அரவணைத்து
பார் புகழ வாழ வைத்த எங்கள் அன்புள்ளங்களே
உங்கள் ஆசியை வேண்டி நிற்கும்.

"ஈஸ்வரி இல்லம்"
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### திருமதி இராசம்மா செல்லத்துரை



மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், நுணாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா செல்லத்துரை 01.06.2014 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் செல்லத்துரையின் அன்பு மனைவி ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.
தொ.பே: 077 954 9336

(43654)(5.6)

தகவல்:
பிள்ளைகள்,பேரப்பிள்ளைகள்.

## சமய சந்நிதிகளில்

புலோலி, ஜூன் 3
புலோலி ஸ்ரீ பர்வத வர்த்தனி அம்பாள் சமேத ஸ்ரீ பசுபதீஸ்வரர் தேவஸ்தான (பருத்தித்துறை சிவன் கோயில்) மஹோற்சவம் எதிர்வரும் 19 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.
எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு சப்பரத் திருவிழாவும் 3 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த் திருவிழாவும், 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தோற் சவமும் இடம்பெறும். (ஓ)

* * *

வட்டுக்கோட்டை, ஜூன் 3
வட்டுக்கோட்டை, துணவி தெவிண்டைப்பிராய் முருகமூர்த்தி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நேற்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.
தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும் மஹோற்சவத்தில் எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 7 மணிக்கு சப்பரத்திருவிழாவும் 11 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம் பெறும்.
14 ஆம் திகதி சனிக்கிழமை 8 மணிக்கு சங்காபி ஷேகமும் இடம்பெறும். (ஓ)

* * *

வரணி, ஜூன் 3
வரணி கும்பிட்டான்புலம் திருவருள்மிகு கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 தினங்கள் உற்சவம் இடம்பெறும்.
எதிர்வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் வியாழன் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.
மஹோற்சவ பிரதம குரு சிவஸ்ரீ. பி.கிருபாகரக் குருக்கள் தலைமையில் உற்சவ கிரியைகள் இடம்பெறும். (ஒ-22)

# கொட்டடி சனசமூக நிலையம் நடத்திய புத்தாண்டு விழா


விழாவில் நடன நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 3
யாழ்ப்பாணம் கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கமும் சனசமூகநிலையமும் இணைந்து நடத்திய புத்தாண்டு விழா கடந்த சனிக்கிழமை கொட்டடி சனசமூக நிலைய முன்றிலில் நடைபெற்றது.
கிராம முன்னேற்றச் சங்கம் சனசமூக நிலையம் ஆகியவற்றின் தலைவர் கலாநிதி நா.தனேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக வணிகத் துறைத் தலைவர் பேராசிரியர் க.தேவராஜா மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.
முன்னதாக விருந்தினர்கள் சீனிவாசகம் வீதியில் இருந்து மங்கள வாத்தியம், பாண்ட் வாத்தியங்கள் சகிதம் ஊர்வலமாக விழா மேடைக்கு அழைத்து வரப்பட்டனர்.
தலைமையுரையைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினர்களான யாழ்.மாவட்ட ஓய்வுபெற்ற கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ந.அ.ஜெயராஜன் யாழ்.இந்துக் கல்லூரி அதிபர் வி.கணேசராசா, யாழ்.மாநகர சபை பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர் எஸ்.லோகசிவம், கிராம அலுவலர் திருமதி நசிகலா விஜயரட்ணம் ஆகியோரின் உரைகள் இடம் பெற்றன.
நிகழ்வில் சமூகத் தொண்டாற்றிய 12 சேவையாளர்களுக்கு "சமூகதிலகம்" விருது வழங்கி பிரதம விருந்தினர் கௌரவித்தார்.
பொது அறிவுப் போட்டி, புலமைப் பரிசில் பரீட்சை ஜி.சீ.ஈ. சாதாரண தர, உயர்தர பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்கள் மற்றும் மரதன்ஓட்டப்போட்டிகளில்வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு இடம் பெற்றது. யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி மாணவிகளின் கலை நிகழ்வுகள், ஐங்கரன் இசைக் குழுவினரின் வசந்த ராகங்கள், இசை நிகழ்வு ஆகியனவும் இடம்பெற்றன. நிகழ்வில் பெருமளவு மக்கள் கலந்து கொண்டனர். (வ-7)

## கரவெட்டிப் பிரதேசத்தில் மலேரியா விழிப்புணர்வு நடவடிக்கைகள்

கரணவாய், ஜூன் 3
மலேரியா நோய்த் தொற்றுக்குள்ளான ஒருவர் இனங்காணப்பட்டதை அடுத்து அதனைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் கரவெட்டி பிரதேச மலேரியா தடுப்புச் சங்கத்தினர் ஈடுபட்டுள்ளனர்.
கரணவாய், காவில் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு மலேரியாத் தொற்று ஏற்பட்டுள்ளமை பரிசோதனைகள் மூலம் கண்டறியப்பட்டது.
அதனை அடுத்து இது தொடர்பான கரவெட்டி மலேரியா தடுப்புப் பிரிவினர் நோய்த் தாக்கத்துக்குள்ளானவரை சிகிச்சைக்குட்படுத்தி கண்காணித்து வருகின்றனர்.
குறித்த நோய் ஏனையோருக்கும் பரவாமல் இருப்பதற்காக கரணவாய், கரவெட்டி, கரணவாய் கிழக்கு, நெல்லியடி, நாவலர் மடம், கரவெட்டி மேற்கு உட்பட்ட பகுதிகளில் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதுடன் நோயைக் கட்டுப்படுத்துவதற்கான எதிர்ப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கரவெட்டிப் பிரதேச மலேரியாத் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர். (வ-108)


## கேள்வி பத்திரங்கள் கோருவதற்கான அறிவித்தல்
## சந்தை கட்டட கடைத்தொகுதி
## மாந்தை மேற்கு பிரதேசசபை - அடம்பன்.

கீழ்குறிப்பிடப்படும் சந்தைக் கடைத் தொகுதியில் அமைந்துள்ள வியாபார நிலையங்களை வாடகைக்கு விடுவதற்கு உப அலுவலக பிரிவினுள் வசிக்கும் பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

இக் கேள்விப்பத்திரங்கள் 04.06.2014 தொடக்கம் 25.06.2014 ஆம் திகதி வரை பிற்பகல் 02.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு கேள்விகள் 25.06.2014 பிற்பகல் 2.30 மணிக்கு மாந்தை மேற்கு பிரதேச சபை பிரதான அலுவலகத்தில் வைத்து திறக்கப்படும். இச் சந்தர்ப்பத்தில் கேள்வியாளர்கள் அல்லது அவரது அனுமதிக்கப்பட்ட பிரதிநிதிகள் உடன் இருக்க அனுமதிக்கப்படுவார்கள்.

அவ்வியாபார நிலையங்களுக்கான மாதாந்த வாடகை விலை மதிப்பீட்டு திணைக்களத்தால் நிர்ணயிக்கப்படும் தொகைக்கேற்ப சித்திபெறும் விண்ணப்பதாரியிடமிருந்து பிரதேசசபையால் அறவிடப்படும். அத்துடன் காலத்திற்கு காலம் விலை மதிப்பீட்டு திணைக்களத்தால் நிர்ணயிக்கப்படும் வாடகை செலுத்தபட வேண்டும்.

கோரும் ஒவ்வொரு வியாபார நிலையங்களுக்கும் தனித்தனியாக மீளளிக்க முடியாத கேள்விப்பத்திர கட்டணத்தையும் மீளளிக்கத்தக்க கேள்விவைப்பு பணத்தையும் மாந்தை மேற்கு பிரதேசசபை பிரதான அலுவலகத்தில் 04.06.2014 ஆம் திகதி தொடக்கம் 25.06.2014 வரை காலை 9.00 தொடக்கம் பிற்பகல் 2.30 மணிவரை செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டையும், கேள்விப் பத்திரங்களையும், மேலதிக விவரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பிட்ட ஒரு கேள்விதாரர் குறிப்பிட்ட ஒரு வியாபார நிலையத்திற்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும். கேள்விப்பத்திரம் பெறுவோர் விண்ணப்பத்துடன் தாம் வதியும் இடத்தின் வதிவிடச்சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

சித்திபெறும் கேள்விதாரர் குறிப்பிட்ட தவணை அடிப்படையில் கேள்வித் தொகையை செலுத்தி மாந்தை மேற்கு பிரதேசசபையின் தவிசாளர் அவர்களுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இரு வாரத்திற்குள் வியாபாரம் தொழில் ஆரம்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறு ஆரம்பிக்காவிடில் ஒப்பந்தம் இரத்துச்செய்யப்பட்டு அடுத்தநிலையிலுள்ள கேள்விதாரருக்கு கடை அனுமதி வழங்கப்படும்.

குத்தகைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வியாபாரம்/தொழில் குத்தகைக்கு எடுத்துகொண்டவர்களை தவிர வேறொரு நபருக்கு இக்கடையினை வாடகைக்கோ அல்லது குத்தகைக்கோ கொடுக்க இயலாது. மாதாந்த கட்டுப்பணம் எமது மாந்தை மேற்கு பிரதேசசபையால் காலத்திற்கு காலம் குத்தகை விதிக்கமைவாக அறவிடப்படும்.

ஒப்பந்தத்திற்கான முத்திரை செலவுகளையும் சித்திபெறும் கேள்விதாரர் ஏற்றுக்கொள்ள வேண்டும். சித்திபெற்ற கேள்விதாரரால் பிரதேசசபைக்கு செலுத்தப்பட்ட கேள்வித்தொகை எச்சந்தர்ப்பத்திலும் மீளளிப்பு செய்யப்படமாட்டாது.

கோரப்படும் ஒவ்வொரு வியாபார நிலையத்திற்குமான கேள்விப்படிவங்கள் உரியமுறையில் தயாரிக்கப்பட்டு உறையிலிட்டு "தவிசாளர் .மாந்தை மேற்கு பிரதேச சபை, அடம்பன்" என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது மாந்தை மேற்கு பிரதேசசபை பிரதான அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியிலோ 25.06.2014 ஆம் திகதி பிற்பகல் 2.30 முன் இடப்படல் வேண்டும்.

வியாபாரநிலையங்களை பார்வையிட விரும்புவோர் அலுவலக நேரத்தில் செயலாளர், மாந்தை மேற்கு பிரதேசசபை அவர்களுடன் தொடர்புகொண்டு பார்வையிடலாம்.

ஒவ்வொரு வியாபார நிலையத்திற்குமான கேள்விப்பத்திரக் கட்டணமாக ரூ.1,000.00, கேள்விவைப்புத் தொகையாக ரூ 10,000.00 செலுத்தப்படல் வேண்டும்.

| இல | விடத்தல் தீவு கடை இலக்கம் | ஆண்டாங் குளம் கடை இலக்கம் | இரணை இலுப்பைக் குளம், மடு கடை இலக்கம் | விடத்தல் தீவு சந்தைக் கட்டட ஆகக்குறைந்த கேள்வித் தொகை (ரூ) | ஆண்டாங்குளம் சந்தைக் கட்டட ஆகக்குறைந்த கேள்வித் தொகை(ரூ) | இரணைஇலுப்பைக்குளம், மடு ஆகக்குறைந்த கேள்வித் தொகை (ரூ) |
|---|---|---|---|---|---|---|
| 01 | 01 | 01 | 01 | 100,000.00 | 150,000.00 | 125,000.00 |
| 02 | 02 | 02 | 02 | 100,000.00 | 150,000.00 | 125,000.00 |
| 03 | 03 | 03 | 03 | 100,000.00 | 150,000.00 | 125,000.00 |
| 04 | 04 | 04 | 04 | 100,000.00 | 150,000.00 | 125,000.00 |
| 05 | 05 | 05 | 05 | 100,000.00 | 150,000.00 | 125,000.00 |
| 06 | 06 | 06 | 06 | 100,000.00 | 150,000.00 | 125,000.00 |
| 07 | 07 | 07 | 07 | 100,000.00 | 150,000.00 | 125,000.00 |

மாந்தை மேற்கு பிரதேச சபை,
அடம்பன்.
03.06.2014

சு.வரப்பிரகாசம்,
தவிசாளர்,
மாந்தை மேற்கு பிரதேசசபை.

(C/13966)(10.6)


## அபிவிருத்தியில் பின்தங்கிய கிரர்மம்

முல்லைத்தீவு, ஜூன் 3
புதுக்குடியிருப்பு செயலர் பிரிவிலுள்ள தேவிபுரம் கிராமம் அபிவிருத்தியில் பின்தங்கி இருப்பதாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.
சுமார் 300 குடும்பங்கள் வசிக்கும் இந்த கிராமத்தில் மக்களின் போக்குவரத்து மிகவும் சிரமமான நிலையில் காணப்படுகின்றது. இங்கு வசிக்கும் மக்கள் சுமார் நான்கு கிலோ மீற்றர் தூரத்தை கால்நடையாகவே பயணிக்க வேண்டிய நிலையில் உள்ளனர். தமது உற்பத்திப் பொருள்களைக் கொண்டு சென்று விற்பனை செய்வதிலும் இவர்கள் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
புதுக்குடியிருப்பு ஊடாக செந்தூரன் சிலையடியை ஊடறுத்து தேவிபுரம் சென்றடையும் வீதி புனரமைப்புச் செய்யப்பட்டு வரும் அதே வேளை தேவிபுரம் வீதி புனரமைப்புச் செய்யப்படவில்லை. இங்கு வாழ்கின்ற மக்கள் தமது மருத்துவ வசதிக்கு புதுக்குடியிருப்புக்குச் செல்ல வேண்டிய நிலையில் வீதி புனரமைக்கப்படாமையால் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன. (க-500)

## மொழி பெயர்ப்பாளராக சத்தியப் பிரமாணம்



வடமராட்சி, ஜூன் 3
பருத்தித்துறை புலோலி மத்தியைச் சேர்ந்த முருகுப்பிள்ளை தர்மலிங்கம் நீதி அமைச்சினால் தமிழ்-ஆங்கில மொழி பெயர்ப்பாளராக நியமிக்கப்பட்டு, பருத்தித்துறை மாவட்ட நீதிபதி ஜே.கஜநிதிபாலன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.
நெல்லியடி மத்திய கல்லூரியின் பழைய மாணவரான இவர் திட்டம் செயற்படுத்தல் அமைச்சின் திட்டம் செயற்படுத்தல் அலுவலராக நியமனம் பெற்று சில வருடங்கள் கடமையாற்றிய பின்னர் சமூக சேவை அமைச்சில் இணைந்து முதலாம்தர சமூக சேவை அலுவலராகப் பணியாற்றி ஓய்வு பெற்றார்.
சர்வதேச லயன்ஸ் கழகத்தின் அங்கத்தவரான இவர், 2004-2005 ஆம் ஆண்டு காலப் பகுதியில் வடமராட்சி லயன்ஸ் கழகத் தின் தலைவராக இருந்தவேளை சிறப்பாகச் செயற்பட்டு சுனாமிப் பேரலையால் பாதிப்புற்றோருக்கும் மற்றும் வறியோர்களுக்கும் கழகத்தின் ஊடாகப் பெரும் பணியாற்றினார்.
அத்துடன் மேலைப் புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத்தின் தலைவராகப் பணியாற்றிய இவர் தற்போது அதன் காப்பாளராக இருந்து வருகின்றார். (ஓ-173)

# உங்கள் குடும்ப முன்னேற்றத்துக்கான மாத சஞ்சிகை

# ஜீன் மாத இதழ் வெளிவந்துவிட்டது




தந்தையர்தின சிறப்புப் பேட்டி



## பத்து வகை போட்டிகள்

அரசியலோ பாலியலோ கலக்காத ஒரு பரிணாமப் படைப்பு

- பட்டுச் சேலை கட்டுரைப் போட்டி
- குறுக்கெழுத்துப் போட்டி
- பேசும் படப் போட்டி
- விளையாட்டு அறிவுப் போட்டி
- பொது, சமய அறிவு, விவேகப் போட்டி
- வரைதல் போட்டி
- சொற்றொடர் ஆக்கப் போட்டி
- தரம் 4, 5 இற்கான கணித புதிர் போட்டி
- தரம் 5 இற்கான ஓவியக் கட்டுரைப் போட்டி
- மழலைகளுக்கான வர்ணம் தீட்டும் போட்டி

200,000/-

இலவச பிறந்தநாள் மற்றும் திருமண வாழ்த்துக்கள்

## இவ்விதழை அலங்கரிப்பவை






**இன்னும் பல சுவாரஸ்யமான அம்சங்களுடன் தற்பொழுது அமோக விற்பனையில்**

**உங்கள் பிரதிகளை பத்திரிகை முகவர்களிடமும் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்**

விநியோகத் தொடர்புகளுக்கு: யாழ். - 0776569617 / 077 1945812 கொழும்பு - 0718 628379 / 011 5737592

விளம்பர தொடர்புகளுக்கு: 0718 628 384

(C/14435)

## 'உமா' இன எள்ளால் சிறந்த பயன் கிடைக்கும்

### யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் தெரிவிப்பு

அச்சுவேலி, ஜூன் 3.
"யாழ். மாவட்டத்தில் எள்ளுப் பயிர்ச் செய்கையில் "உமா" இனம் சிறந்த விளைச்சலை தருவதோடு யாழ். மாவட்டத் தின் காலநிலைக்கு ஏற்றதொன்றுமாகும். விவசாயிகள் "உமா" இனத்தை பயன்படுத்தி எள்ளுச் செய்கையை மேற்கொள்ளலாம்.



கோப்புப்படம்

இந்த வருட சிறுபோக எள்ளுப் பயிர்ச் செய்கை உத்தேச இலக்கை எட்ட முடியவில்லை. கடும் வறட்சி நிலையால் எள்ளுப் பயிர்ச் செய்கையின் அளவு குறைவடைந்துள்ளது. இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட விவசாயத் திணைக் களப் பணிப்பாளர் இ. சிறிபால சுந்தரம்.

இது தொடர்பாக பணிப்பாளர் மேலும் தகவல் தெரிவிக்கையில்:-

"எள்ளுப் பயிர்ச் செய்கையின் இந்த வருடத்துக்கான உத்தேச இலக்கு 950 ஹெக்ரெயர் என்று தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், குறித்த இலக்கை எட்ட முடியவில்லை. குறைந்த அளவிலேயே செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பெரும் போக பயிர்ச் செய்கையை அடுத்து எள்ளுச் செய்கைக் காக நிலத்தை தயார் செய்வதற்கு முடியவில்லை. இதற்குக் காரணம் எதிர்பாராத வறட்சி நிலையாகும். இதனால் விவசாயிகளுக்கு வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் "உமா" ரக எள்ளு சிறந்த விளைச்சலைக் கொடுப்பதோடு காலநிலைக்குத் தாக்குப் பிடித்து வளரக் கூடியது மாகும். எனவே, யாழ். மாவட்ட விவசாயிகள் மரபு வழி இனங்களை பயன் படுத்துவதைத் தவிர்த்து "உமா" இனத்தை பயன்படுத்தலாம். இந்த இனம் ஓங்கி உயர்ந்து வளர்வதோடு நல்ல விளைச் சலையும் கொடுக்கின்றது என்று தெரிவித்தார். (வ-11)

## 'கள்ளமாக' எடுத்து வரும் மணல் மலிவு விலையில்

குடத்தனை, ஜூன் 3
வடமராட்சி கிழக்கு மணற்காடு மண், தற்சமயம் வரணிப் பகுதியில் மலிவு விலையில் தாராளமாக விற்பனை செய்யப்படுகின்றது.

இந்தப் பகுதி யில் சட்ட விரோதமாக ஹன்ரர் வாக னங்களில் ஏற்றப்படும் மண் குடத்தனை-வரணி பாதையூடாகக் கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்படுகின் றது. முன்னர் இரவு வேளைகளில் மட்டும் இடம் பெற்றுவந்த இந்தச் சட்ட விரோத மண் வியாபாரம் தற்சமயம் பகல் வேளைகளில் குறித்த ஹன்ரர் வாகனாங்கள் மூலம் பகிரங்கமாக ஏற்றி வரப்பட்டு அவை குறிப்பிட்ட மக்கள் வசிக்காத பிரதேசங்களில் பறிக்கப் பட்டு பின்பு மீண்டும் அவை தேவையானோருக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

குறிப்பிட்ட விதத்தில் ஏற்றி வரப்பட்ட ஒரு தொகுதி மண் வரணி வடக்கு பிரதேசத்தில் பறிக்கப்பட்டி ருந்த நிலையில், வேறு ஒரு குழுவினர் அம் மண் தொகுதியை இரவிரவாக ஏற்றிச் சென்ற சம்பவம் கடந்த வாரம் இடம்பெற்றது.

முன்பு மண் பறித்த நபர்கள் அடுத்த நாள் வந்து பார்க்கும் போது மண் அவ்விடத்தில் காணப்படாமையால் அவ் விடத் தில் நின்று ரகளை செய்த துடன் சம்பந்தப்பட்ட மண் யார் வீட்டிலாவது இருக்கலாம் என சந்தேகித்து அருகாமையில் உள்ள பல வீடுகளிலும் புகுந்து தேடுதல். நடத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-122)

## சேமிப்புத் திட்டத்தின் வருட வட்டி குறைப்பு

### சாவகச்சேரி வணிகர் மன்றத்தின்

தென்மராட்சி, ஜூன் 3
சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் சேமிப் புத் திட்டத்துக்கு வழங்கப்படும் வருட வட்டி வீதம் குறைக்கப் பட்டுள்ளதாக மன்றத் தலை வர் வ.ஸ்ரீபிரகாஸ் அறிவித்துள்ளார்.

வெள்ளிக்கிழமை நடைபெற்ற மன்ற நிர்வாக சபைக் கூட்டத் தில் இவ்வாறு முடிவு செய்யப் பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

மன்றத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சேமிப்புத் திட்டத்துக்கு வணிகர்கள் நாளாந்தம் , வாராந்தம், மாதாந்தம் எனத் தமது பங்களிப்பின் மூலம் நிதியைவழங்கி வருகின்றனர். இந்த நிதிக்கு வருடாந்தம் 15 வீத வட்டி வழங்கப்பட்டது. இந்த நிதியில் கடன்பெறும் அங்கத்தவர்களின் நலன்கருதி நேற்று முன்தினம் தொடக்கம் சேமிக்கப்படும் தொகைக்கு வழங்கப்படும் வட்டி வீதத்தை 12 வீதமாகக் குறைப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை மன்றத்தால் மாணவர்களுக்கு வழங்கப் படும் கல்வி நிதியத்துக்கு செலுத் தப்படும் நிதிகளுக்கான வட்டிவீதம் தொடர்ந்து முன் னரைப் போலவே இருக் கும்- என்றார். (வ-9)

## தேடுவாரற்று வீசப்பட்ட நிலையில் நினைவுக்கல்



சாவகச்சேரி, ஜூன் 3
50 வருடங்களுக்கு முன்னர் சாவகச்சேரி மகளிர் கல்லூரி கட்டடத் திறப்பு விழாவில் திரை நீக்கம் செய்யப்பட்ட நினைவுக்கல் தேடுவாரற்று வீசப் பட்டுள்ளமை குறித்து பொது மக் கள் கவலை தெரிவித்தனர்.

சாவகச்சேரியில் உள்ள பிரபல பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் கட்டப்பட்ட கட்டடம் அப்போதைய ஆளுநர் சோல் பரி பிரபுவால் திரைநீக்கம் செய்யப்பட்டது.

குறித்த கட்டடம் 2000 ஆம் ஆண்டு நடைபெற்ற போர் வேளையில் குண்டு வீச்சால் சேதமடைந்த போதிலும் நினைவுக்கல் தூக்கி வீசப்பட்டு எறியப்பட்ட போதிலும் சேதமடையாமல் காணப்பட்டது.

அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் வே. குமாரசாமி மற்றும் சோல்பரிப்பிரபு ஆகியோரை நினைவுகூரக்கூடிய நினைவுக் கல்லை கல்லூரி நிர்வாகம் பாதுகாக்காமல் வெயில் மழையில் அநாதரவாக விட்டுள்ளமை குறித்தும் கவலை தெரிவிக்கப்பட்டது. (வ)

## இளைஞர் பங்களிப்புடன் வீதிப் புனரமைப்பு

வரணி, ஜூன் 3
வரணி வடக்கு சிமிழ் கண்ணகைபுரம் பிரதேச இளைஞர்களின் பங்களிப்புடனான வீதி புனரமைப்புப் பணி தற்போது இடம்பெற்று வருகின்றது.

சாவகச்சேரி பிரதேச சபையின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் அந்தப் பகுதியின் வீதி புனரமைப்பு இடம்பெற்று வரும் அதே வேளை, குறித்த வேலையை பிரதேச இளைஞர்கள் பொறுப் பேற்று தமது சிரமதான பங் களிப்பு மூலம் மேற்கொள்ளப் படும் வேலைக்கான கொடுப் பனவை அவர்கள் பெறாமல் அதற்குரிய நிதியை குறித்த வீதி அமைந்திருக்கும் பகுதி யில் உள்ள சிமிழ் அம்மன் ஆலயத்தின் கட்டடப் பணி களுக்கு வழங்க உள்ளதாக குறித்த பிரதேச சனசமூக நிலைய‌த் தலைவர் தெரிவித்தார்.

வரணி வடக்கு ஸ்ரீ கணேசா சனசமூக நிலையம் இந்த ஒப்பந்த வேலையை பொறுப் பேற்று நடைமுறைப்படுத்தி வருகின்றது. (வ-122)

## வியாபாரப் போட்டியால் சிரமத்தில் மக்கள்

தென்மராட்சி, ஜூன் 3
சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு அருகில் உள்ள இரு உணவகங்களினால் மேற் கொள்ளப்படும் வியாபாரப் போட்டி காரணமாக அக் கடைகளுக்கு முன்பாக நடந்து செல் வோர் கடைகளுக்கு முன்பாக நிற்போரால் சிரமங்ளுக்கு உள்ளாக்கப்படுவதாகத் தெரிவிக் கப்படுகிறது.

இரு பகுதியினரும் பொருள் களை கொள்வனவு செய்ய தமது கடைக்கு வருமாறு அழைக் கும் அதேநேரத்தில் வீதியில் செல்வோர் மீது சிலேடை வச னாங்களைப் பிரயோகிப்பதாக வும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் அவ்வழியே செல் லும் மாணவிகள், யுவதிகள், நோயாளர்கள், பார்வையாளர் கள் பொது மக்கள் மன உளைச் சலுக்கு உள்ளாவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வீதியில் வரும் வாகனாங்களை மறிப்பதற்காக கடை முன்பாக நிற்பவர்களே பொது மக்கள் மீது தரக் குறைவான வார்த்தை களைப் பிரயோகிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. உரிய அதி காரிகள் இந்த விட யத்தில் நட வடிக்கை மேற்கொள்ளு மாறும் கோரிக்கை விடப் பட்டுள்ளது. (வ-9)

## கொக்குவில் பொதுச் சந்தைப் பகுதி வளாகத்தில் வங்கி, உபதபாலகம்

### இடவசதி வழங்க நல்லூர்ப் பிரதேச சபை தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூன் 3
கொக்குவில் சந்தைப் பகுதி யில் வங்கி மற்றும் உப தபால கம் அமைப்பதற்கு இடவசதி களை வழங்க நல்லூர்ப் பிர தேச சபை தீர்மானித்துள்ளது.

வெள்ளிக்கிழமை நடைபெற்ற பிரதேச சபைக் கூட்டத்தில் உப தபாலகம் அமைப்பது தொடர் பான விடயங்கள் உறுப்பினர் களால் முன்வைக்கப்பட்டன.

> வங்கிக் கிளையொன்றையும் சந்தைப் பகுதியில் அமைக்கக் கோருவதாகவும் இது தொடர்பாக இரு சாராருடனும் கலந்துரையாடப்பட்டது.

வங்கிக் கிளையொன்றையும் சந்தைப் பகுதியில் அமைக்கக் கோருவதாகவும் இது தொடர் பாக இரு சாராருடனும் கலந் துரையாடி அவர்களுக்குத் தேவையான அளவு இடவசதி களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதேச சபைத் தவிசாளர் ப. வசந்த குமார் தெரிவித்தார்.

மக்களின் முக்கிய தேவை களாக உள்ள வங்கி மற்றும் உப தபாலகம் அமைக்க சபை உறுப்பினர்கள் ஏகமனதாக தீர்மானித்தனர். (வ-7)

## வரணி மருத்துவமனை புனரமைப்புக்கு நிதி

வரணி, ஜூன் 3
வரணி பிரதேச மருத்துவ மனை மருத்துவர் தங்கும் விடுதி மற்றும் அம்புலன்ஸ் தரிப்பிடம் என்பவற்றின் புனர மைப்பு தொடர்பில் யாழ். மாவட்ட சுகாதார திணைக்களத்தால் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மருத்துவருக்கான விடுதி புனர மைப்பு தொடர்பில் ரூபா 3 லட் சத்து 25 ஆயிரம் ரூபாவும், அம்புலன்ஸ் தரிப்பிடம் புனர் மைப்பு மற்றும் அதனுடன் இணைந்த சாரதி தங்கும் ஓய்வு அறை புனரமைப்பு தொடர்பில் ரூபா 6 லட்சம் ரூபா வும் ஒதுக்கப்பட்டுள்ளது. இவை குறித்து மருத்துவமனை நோயாளர் நலன்புரி சங்கம் விடுத்த வேண்டுகோளை அடுத்தும், வடமாகாண சுகா தார சேவைகள் அமைச்சர் மருத்துவர் ப. சத்தியலிங்கம் மற்றும் அமைச்சின் செய லாளர் ஆர். இரவீந்திரன் ஆகி யோரை குறித்த சங்கத்தினர் நேரில் சந்தித்து விடுத்த வேண்டுகோளை அடுத்தும் இவ்விதம் நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டன.

குறித்த வேலைகள் தொடர்பான ஒப்பந்த வேலையை குறித்த மருத்துவமனை நோயாளர் நலன்புரி சங்கமே பொறுப் பேற்றுள்ளமை குறிப்பிடத்தக் கது. (வ-122)

## 9 முக்கிய வீதிகளை புனரமைக்க நடவடிக்கை

தென்மராட்சி, ஜூன் 3
சாவகச்சேரி நகர சபையின் ஆறாம் வட்டாரத்தில் முக்கியமான ஒன்பது வீதிகளை நகர சபை யின் நான்காண்டு அபிவிருத் தித் திட்டத்தின் கீழ் புனரமைப்ப தென முடிவு செய்யப்பட்டது.

நகர சபை உறுப்பினர் ந. திருக் குமரனின் ஏற்பாட்டில் ஆறாம் வட்டார அபிவிருத்தி தொடர் பான கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற போது பெரும் எண் ணிக்கையான மக்கள் கலந்து கொண்டு வட்டாரத்தில் மேற் கொள்ள வேண்டிய அபிவிருத் தித் திட்டங்கள் தொடர்பான விவரங்களை முன்வைத்தனர்.

நகர சபைத் தலைவர் இ. தேவ சகாயம்பிள்ளை தலைமை யில் நடைபெற்ற கூட்டத்தில் மக்களால் முன்வைக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களில் முன்னுரிமை அடிப்படையில் 9 வீதிகளைப் புனரமைப்புச் செய் வதற்கு தலைவர் உறு தியளித்துள்ளதாக மக்கள் தெரிவித்தனர். (வ-9)

# 14 வருடங்கள் கடந்தும் நிரந்தர நியமனம் இல்லை

## வன்னிப்பகுதி தொண்டர் ஆசிரியர்கள் தொடர்ந்து புறக்கணிப்பு

கிளிநொச்சி.ஜூன் 3

வன்னிப் பகுதிப் பாடசாலைகளில் கடந்த 14 வருடங்களுக்கும் மேலாக தொண்டர் ஆசிரியர்களாகச் சேவையாற்றிய எமக்கு நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கப்படாது புறக்கணிக்கப்பட்டு வருகின்றோம் என்று வன்னி மாவட்ட ஆசிரிய உதவியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் வன்னி உதவி ஆசிரியர் ஒன்றியம் வடமாகாணக்கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவுக்கு அனுப்பிவைத்துள்ள மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த 2013.07.01 ஆம் திகதி முதல் தொண்டர் ஆசிரியர்க்ளுக்கு ஆசிரிய உதவியாளர் என்னும் பெயரில் நியமனம் வழங்கப்பட்டு பத்தாயிரம் ரூபா சம்பளம் மட்டும் வழங்கப்பட்டு வருகின்றது.

கடந்த காலங்களில் பாடசாலைகளில் நிலவிய ஆசிரியர்

> தொண்டர் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட நியமனத்தில் கூட வன்னிப் பகுதித் தொண்டர் ஆசிரியர்கள் எவருக்குமே நியமனம் வழங்கப் படாது புறக்கணித்து ஒதுக்கப்பட்டுள்ளனர்.

பற்றாக்குறையால் தொண்டர் ஆசிரியர்களாக சேவையாற்றியவர்களுக்கு நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டது.

ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்ட அந்தக் காலப் பகுதியில் சேவையாற்றிய வன்னிப் பகுதித் தொண்டர் ஆசிரியர்கள் பலருக்கு சகல தகுதிகள், கல்வித் தகைமைகள் இருந்தும் குறித்த பாடசாலையில் வெற்றிடம் இல்லை என்று நியாயமற்ற காரணங்களைக் கூறி நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை.

இது தொடர்பில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுக்குச் சுட்டிக்காட்டி மேன்முறையீடுகள் செய்யப்பட்ட போதிலும் கோரிக்கைகளைப் பரிசீலித்து அடுத்துவரும் காலங்களில் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கப்படும்போது விடுபட்ட ஆசிரியர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கப்படும் என்று கூறப்பட்டது. எனினும் இன்றுவரை அந்தக் காலப் பகுதிகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கப்படவில்லை.

அந்தக் காலப் பகுதிகளில் எம்முடன் தொண்டர் ஆசிரியர்களாக இருந்து நிரந்தர ஆசிரியர் நியமனம் கிடைத்தவர்கள் இப்போது ஆசிரியர் சேவை தரம், பதவி உயர்வுகளையும் சம்பள உயர்வுகளையும் பெற்று அதிபர்களாகவும் உள்ளனர்.

ஆனால் இப்போதும் நிரந்தர ஆசிரியர் நியமனமின்றி தொண்டர் ஆசிரியர்கள் உள்ளனர்.

கடந்த 2009 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வடக்கு மாகாணத் தொண்டர் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட நியமனத்தில் கூட வன்னிப் பகுதித் தொண்டர் ஆசிரியர்கள் எவருக்குமே நியமனம் வழங்கப்படாது புறக்கணித்து ஒதுக்கப்பட்டுள்ளனர்.

எனவே தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க தாங்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ச-426)



கைப்பற்றப்பட்ட வலைகள்

# சட்டவிரோத வலைகள் பயன்படுத்தி மீன்பிடி

## மன்னாரில் 6 மீனவர்கள் கைது

மன்னார், ஜூன் 3

மன்னார் மாவட்டத்தில் தடை செய்யப்பட்ட மீன்பிடி வலைகளைப் பயன்படுத்தி மீன் பிடியில் ஈடுபட்ட 6 மீனவர்களுடைய 15 வலைத்தொகுதிகளை கடற்றொழில் பரிசோதகர்கள் பறிமுதல் செய்துள்ளனர் என்று மன்னார் மாவட்ட கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் வி.எஸ்.மெரான்டா தெரிவித்தார்.

தங்கூசி வலைகளை பயன்படுத்தி மீன்பிடிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் மன்னார் மாவட்டத்தில் பல இடங்களில் இரகசியமான முறையில் தடை செய்யப்பட்ட வலைகளை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவதாக எமக்கு தகவல் கிட்டியது என்று அவர் கூறினார்.

பள்ளிமுனை, கோந்தைப்பிட்டி, வங்காலை போன்ற கடற்கரைப் பகுதிகளில் மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள், கடற்றொழில் பரிசோதகர்கள் இது குறித்து சோதனைகளை மேற்கொண்டனர்.

இதன்போதே தடை செய்யப்பட்ட தங்கூசி வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட 6 மீனவர்களுடைய 15 வலைத்தொகுதிகள் பறிமுதல் செய்யப்பட்டன என்று அவர் தெரிவித்தார். இந்த வலைத் தொகுதிகள் மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்களத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளதோடு, குறித்த 6 மீனவர்களிடமும் வாக்கு மூலத்தை பதிவு செய்து வருகின்றோம் என்று அவர் தெரிவித்துள்ளார். (ச-56)

# மரத்தளபாட நிலையத்தில் பரவியது தீ



தீக்கிரையான மரத்தளபாட நிலையம்

மன்னார்.ஜூன் 3

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியில் அமைந்துள்ள மரத்தளபாட விற்பனை நிலையமொன்றில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை ஏற்பட்ட தீ விபத்தில் விற்பனை நிலையத்தின் ஒரு பகுதி தீக்கிரையாகியுள்ளது என்று மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னார்-தலைமன்னார் பிரதான வீதிக்கு அருகாமையில் அமைந்துள்ள பொது விளையாட்டு மைதானத்துக்கு முன்பாக உள்ள மரக்காலையிலேயே தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த மரக்காலையில் நேற்று முன்தினம் பணியாளர்கள் இல்லாமையால் அயலவர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையிலே குறித்த தீயை அணைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

எனினும் அதற்கு முன்னரே தீ முழுமையாக பரவி குறித்த நிலையத்தின் ஒரு பகுதியில் இருந்த மரம் சீவும் 2 இயந்திரங்கள் உட்பட பல லட்சம் ரூபா பெறுமதியான தளபாடப் பொருள்கள் எரிந்து சேதமடைந்துள்ளன என்று குறித்த நிலையத்தின் உரிமையாளர் தெரிவித்தார். தீ ஏற்பட்டதற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என்று பொலிஸார் கூறினர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ச-56)

# கடற்றொழில் செய்ய அனுமதி வழங்குங்கள்

## இரணைமாதா நகர் மக்கள் வேண்டுகோள்

கிளிநொச்சி.ஜூன் 3

கிளிநொச்சி, இரணைதீவுப் பகுதியில் கடற்றொழில் செய்வதற்கான அனுமதியை வழங்க வேண்டும் என்று இரணைமாதா நகர் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி, இரணைதீவு பகுதியில் இருந்து கடந்த 1992 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து முழங்காவில், இரணைமாதா நகரில் வசித்துவரும் சுமார் 314 குடும்பங்கள் தமது சொந்த இடமான இரணைதீவுப் பகுதியில் சென்று கடற்றொழிலைச் செய்வதற்கும், அங்குள்ள தமது பூர்வீகக் காணிகளைச் சென்று பார்ப்பதற்கும் அனுமதி பெற்றுத் தரப்பட வேண்டும்என்று அவர்கள்கோரிக்கை விடுத்துள்ளனர்.

> பூர்வீகக் காணிகளைச் சென்று பார்ப்பதற்கும் அனுமதி பெற்றுத் தரப்பட வேண்டும்.

முழங்காவில், இரணைமாதாநகர் கிராமத்தில் அண்மையில் பூநகரிப் பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே இந்தப் பகுதி மக்கள் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்தக் குடும்பங்கள் கடந்த 1992 ஆம் ஆண்டு இரணைதீவுப் பகுதியிலிருந்து கடற்படையினரால் வெளியேற்றப்பட்டதிலிருந்து இந்தத் தீவு கடற் படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-55)

# புதிய கட்டடத்தில் வைத்தியசாலை

கிளிநொச்சி.ஜூன் 3

கிளிநொச்சி, பூநகரி பிரதேச வைத்தியசாலை கடந்த வெள்ளிக்கிழமை முதல் புதிய கட்டடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது.

கிளிநொச்சி ,பூநகரி வைத்தியசாலை கடந்த 2010 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்தும் வாடியடியில் உள்ள தனியார் வீடொன்றில் நான்கு ஆண்டுகளாக எதுவித அடிப்படை வசதிகளும் இன்றி இயங்கி வந்துள்ளது.

பூநகரி வைத்தியசாலை கட்டடம் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலையில் அதனை விடுவிக்க முடியாமல் கணவாய்ப் பள்ளம் என்னும் இடத்தில் புதிய கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டடம் கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாக திறந்து வைக்கப்படாமல் இருந்து வந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் இந்த வைத்தியசாலை புதிய கட்டடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-55)

# குளங்களில் விடப்பட்டன மீன் குஞ்சுகள்

வவுனியா, ஜூன் 3

வவுனியா மாவட்ட நீர்ப்பாசன திணைக்களமும், வவுனியா மாவட்ட நீர் வளர்ப்பு அதிகார சபையும் இணைந்து வவுனியாவில் பல்வேறு குளங்களில் மீன் குஞ்சுகளை விட்டுள்ளன.

பெரிய சிற்பி குளத்தில் 20,000 மீன் குஞ்சுகளும், சின்னசிற்பி குளத்தில் 22,000 மீன் குஞ்சுகளும், புளியங்குளத்தில் 21,500 மீன் குஞ்சுகளும், ஆனைவிழுந்தான் குளத்தில் 20,000 மீன் குஞ்சுகளும் விடப்பட்டுள்ளன. நீர்வளர்ப்பு அதிகார சபையால் திலாப்பியா, கட்லா, றோகு ஆகிய வகைமீன் குஞ்சுகள் இவ்விதம் குளங்களில் விடப்பட்டுள்ளன. (ச-402)

# நோயாளர்களை உரியமுறையில் தாதியர்கள் கவனிப்பதில்லை

## பெரிய பண்டிவிரிச்சான் மக்கள் கவலை

முருங்கன், ஜூன் 3

பெரிய பண்டிவிரிச்சான் வைத்தியசாலையில் கடமையாற்றும் தாதியர்கள் நோயாளர்களை உரிய முறையில் கவனிப்பது இல்லை என்று நோயாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்திலுள்ள பெரிய பண்டிவிரிச்சான் வைத்தியசாலைக்கு நாளாந்தம் கீரிசுட்டான், தட்சனார் மருதமடு, முள்ளிக்குளம், பாலம்பிட்டி, பண்டிவிரிச்சான் கிழக்கு, மேற்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் சிகிச்சைகளுக்காக வருகின்றனர்.

இந்த வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் ஒருவர் இதுவரை நியமிக்கப்படவில்லை. மன்னாரில் இருந்து ஒரு மருத்துவர் குறிப்பிட்ட தினங்களில் வைத்தியசாலைக்கு வந்து வைத்திய சேவையை வழங்கி வருகின்றார். வைத்தியர் இல்லாத நேரங்களில் தாதியர்களே வைத்தியர்களாகச் செயற்படுவதுடன், நோயாளர்களுடன் அநாகரிகமான முறையில் நடந்து வருகின்றனர் என்று மக்கள் கூறுகின்றனர்.

வைத்தியசாலையில் சீரான வைத்திய சேவையைப் பெற முடியாததால் தொலைவிலுள்ள மன்னார் மற்றும் முருங்கன் மாவட்ட வைத்தியசாலைகளுக்குச் செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை நிலவுவதாக மக்கள் கூறுகின்றனர்.

கடந்த 29 ஆம் திகதி கடும் வயிற்றுக்குத்துக் காரணமாக வைத்தியசாலைக்குச் சென்ற நோயாளர் ஒருவருக்கு அங்கிருந்தவர்கள் எந்தவித சிகிச்சையும் அளிக்கவில்லை. அதனால் பெரும் அசௌகரியங்களைத் தாம் எதிர்நோக்கியதாக அந்த நோயாளி தெரிவித்தார்.

இதேவேளை- அண்மையில் கீரிசுட்டான் பகுதியில் பாம்புக் கடிக்கு இலக்காகிய ஒருவரை இந்த வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போது அவருக்கு உரிய சிகிச்சை வழங்கப்படாமையால் அவர் உயிரிழந்துள்ளார்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இந்த வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் ஒருவரை நியமித்து பணிகள் சீராக இடம்பெற உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச-108)

# கொமர்ஷல் வங்கியின் நிதி உதவியுடன் சுற்றாடலுக்கு இசைவான படகு தயார்



இலங்கையின் புதிய கண்டுபிடிப்பாளர் ஒருவரின் கனவு, கொமர்ஷல் வங்கியின் உதவியோடு இவ்வாரம் நனவாகியுள்ளது. இந்திரசிறி கருணாதிலக்க என்ற புதிய கண்டுபிடிப்பாளரின் புதிய உருவாக்கமான சுற்றாடலுக்கு இசைவான படகு பேரை வாவியில் வெள்ளோட்டம் விடப்பட்டதன் மூலம் அவரது நீண்டநாள் கனவு நனவாகியுள்ளது.

இலங்கையின் புகழ்பூத்த கண்டுபிடிப்பாளரான காலஞ்சென்ற தேசமான்ய ராய் விஜேவர்தனவின் குடும்பத்தவர்கள் இந்த படகின் முதலாவது பயணிகளாக இணைந்து கொண்டனர்.

நதீயாத்திரா என்று பெயரிடப்பட்டுள்ள இந்த சுற்றாடலுக்கு இசைவான படகு 12 அடிகள் நீளமானதாகும். 2012ம் ஆண்டு ராய் விஜேவர்தன தர்ம நிதியத்தால் அறிமுகம் செய்யப்பட்ட புதிய கண்டுபிடிப்பாளர்களுக்கான முதலாவது விருதை இந்தப் படகு வென்றெடுத்துள்ளது.

வர்த்தக ரீதியான உற்பத்திக்கு சாதகமான இதன் மாதிரிகள் அன்று சமர்ப்பிக்கப்பட்டன. அதன் பிறகு இலங்கை கண்டுபிடிப்பாளர்களின் ஆணையகம் மற்றும் கொமர்ஷல் வங்கி என்பன வழங்கிய ஒத்துழைப்பின் மூலம் இந்தப் படகு கட்டி முடிக்கப்பட்டு வெள்ளோட்டம் விடப்பட்டுள்ளது.

இந்த வாழ்நாள் விருதுக்கான பிரதான அனுசரணையாளராக கொமர்ஷல் வங்கி ஒரு மில்லியன் ரூபாவை வழங்கியிருந்தது.

வர்த்தக நோக்கில் தனது கண்டுபிடிப்பை பூரணப்படுத்த கருணாதிலக்கவுக்கு கை கொடுத்தது. நீலம் மற்றும் வெள்ளை நிறங்களுடன் நான்கு பேர் அமர்ந்து பயணம் செய்யக் கூடியதாக உருவாக்கப்பட்டுள்ள இந்தப் படகின் பரீட்சார்த்த ஓட்டம் மே மாதம் 22ஆம் திகதி இடம்பெற்றது.

15 குதிரை வலுகொண்ட மோட்டர் இதில் பொருத்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்துக்கு ஆதரவு வழங்கிய மூன்று நிறுவனங்களினதும் பிரதிநிதிகள் முன்னிலையில் இந்த வைபவம் இடம்பெற்றது. இந்தப் படகு நீர் நிலைகளில் பயணம் செய்கின்ற போது அலை அதிர்வுகளை எழுப்பி ஆற்றங்கரைகளையும், ஆற்றுப் படுகைகளையும் குழப்பாத மற்றும் பாதிக்காத வகையில் பயணம் செய்யும். இதுதான் இந்த சுற்றாடலுக்கு இசைவான படகின் விஷேட அம்சமாகும்.

இந்த வைபவத்தில் உரை நிகழ்த்திய கொமர்ஷல் வங்கியின் பிரதான நிதி அதிகாரியும், வங்கியின் கூட்டாண்மை சமூகப் பொறுப்பு நிதியத்தின் உறுப்பினர்களுள் ஒருவருமான நந்திக புத்திபால புதிய கண்டுபிடிப்புக்கள் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு மிகவும் முக்கியமானவை என்று கூறினார்.

அந்த வகையில் கண்டுபிடிப்புக்களை ஊக் குவிக்கும் ராய் விஜேவர்தன நம்பிக்கை நிதியத்துடன் இணைந்து செயலாற்று வதில் கொமர்ஷல் வங்கி மிக்க மகிழ்ச்சி அடைகின்றது என்று அவர் கூறினார். (த)

# ஏ.எம்.டபிள்யூவின் சிறந்த விநியோகஸ்தர் மாநாடு 2013




இலங்கையின் கூட்டாண்மைத் துறையில் முன்னோடியாகத் திகழும் அசோசியேட்டட் மோட்டர்வேய்ஸ் நிறுவனத்தின் ரிடிரெடிங் டயர் பிரிவின் சிறந்த 30 விநியோகஸ்தர்களை கௌரவிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்படும் ஒன்றுகூடல் மாநாடு அண்மையில் மவுண்ட் லேவ்னியா ஹோட்டலில் இரு தினங்களாக நடைபெற்றது. இந்த நிகழ்வின் பிரதான நோக்கம், ரிடிரெடிங் துறையைச் சேர்ந்த சிறந்த 30 விநியோகஸ்தர்களை கௌரவிக்கும் வகையில் அமைந்திருந்தது.

இந்த நிகழ்வின் பிரதம அதிதியாக ஏ.எம்.டபிள்யூ குழுமத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான சமந்த ராஜபக்ஷ கலந்து கொண்டார். இவருடன் நிறுவனத்தின் பணிப்பாளர்களும் பங்குபற்றியிருந்தனர். சுமார் 1000க்கும் மேற்பட்ட விநியோகஸ்தர்களிலிருந்து 30 விநியோகஸ்தர்கள் வரை தமது குடும்ப அங்கத்தவர்கள் சகிதம் இந்த நிகழ்வில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பைப் பெற்றிருந்தனர். இவ்வாண்டு நிகழ்வின் தொனிப் பொருளாக '(அபி எக்கட்) - நாம் ஒன்றாக' என்பது அமைந்திருந்தது.

2013 ஆம் ஆண்டுக்கான சிறந்த டயர் விநியோகஸ்தருக்கான விருதை கம்பஹா காமினி டயர் டிரேடர்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் காமினி எலாகுபாலசூரிய பெற்றிருந்தார். இரண்டாம் மற்றும் மூன்றாமிடங்களை முறையே கண்டி, சுபிரி டயர் ஹவுஸ், கித்சிறி பண்டார மற்றும் வீரகெட்டிய ஷானிகா டயர் ஹவுஸ், ஷாந்த பிரேமதிலக ஆகியோர் பெற்றிருந்தனர்.

இவர்கள் பெறுமதி வாய்ந்த அன்பளிப்புகள், பணப் பரிசுகள் மற்றும் வெளிநாட்டு சுற்றுப்பயணங்கள் போன்றவை வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

ஏ.எம்.டபிள்யூ விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவின் சிரேஷ்ட முகாமையாளர் நிமல் எஸ்.ரத்நாயக்க வெற்றியாளர்கள் மத்தியில் உரையாற்றுகையில், 2013 ஆம் ஆண்டு என்பது நிறுவனத்துக்கு பல்வேறு காரணங்களுக்காக விசேடத்துவம் வாய்ந்ததாக அமைந்திருந்தது என குறிப்பிட்டார்.

'எமது டயர் ரிடிரெடிங் பிரிவு கடந்த ஆண்டில் குறிப்பிடத்தக்க அளவு விற்பனை வளர்ச்சியை பதிவு செய்திருந்தது.

எனவே, எமது சந்தைப் பங்கும் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்திருந்தது. 2013 இல், புனினி நிறுவனத்தின் மூலம், புதிய தயாரிப்புகள் சந்தையில் அறிமுகம் செய்யப்பட்டிருந் தன.

மேலும், புதிய விற்பனை ஊக்குவிப்பு பிரசார செயற்றிட்டத்தையும் எம்மால் கடந்த ஆண்டில் அறிமுகம் செய்ய முடிந்திருந்தது. இதுவும் எமது டயர் ரிடிரெடிங் பிரிவின் விற்பனை அதிகரிப்புக்கு கூடுதல் பங்களிப்பை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தமை' என்றார். (த)

# ஏப்ரல் மாதத்தில் மொத்த ஏற்றுமதி 1.67 பில்லியன் டொலர்களாக பதிவு

மார்ச் மாதத்தில் மொத்த ஏற்றுமதி 1.67 பில்லியன் டொலர்களாக பதிவாகியிருந்ததுடன், இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 28.6 வீத அதிகரிப்பாகும். முதலாவது காலாண்டில் மொத்த ஏற்றுமதிப் பெறுமதி என்பது 19.1 வீதத்தால் அதிகரித்து 2.8 பில்லியன் டொலர்களாக பதிவாகியிருந்தது.

இதேவேளை மார்ச் மாதத்தில் இறக்குமதி மீதான செலவீனம் 8.2 வீத அதிகரிப்பைப் பதிவு செய்து 1,672 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியிருந்தது.

ஏற்றுமதி அதிகரிப்பில் அதிகளவு பங்களிப்பு தொழிற்றுறைசார் ஏற்றுமதிகளின் மூலம் வழங்கப்பட்டிருந்தன. ஆடைத் தயாரிப்புகள் மற்றும் துணி வகைகள் போன்றவற்றின் ஏற்றுமதி 32.6 வீதத்தால் அதிகரித்து 457 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியிருந்தது. இறப்பர் உற்பத்திகளான டயர்களின் ஏற்றுமதியிலும் இந்தக் காலப்பகுதியில் அதிகரிப்பு பதிவாகியிருந்தது. (த)

# 2014 மில்லியன் டொலர் வட்டமேசைக்கு செலிங்கோ லைப் 20 அதிகாரிகள் தகுதி

உலகின் முன்னணி தரம் மிக்க காப்புறுதி விற்பனைப் பிரதிநிதிகள் பங்கேற்கும் மாநாடான மில்லியன் டொலர் வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்ள செலிங்கோ லைஃப்பின் 20 விற்பனை அதிகாரிகள் தகுதி பெற்றுள்ளனர். இந்த அமைப்பு அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு செயற்படுகின்றது.

இந்த சாதனை குறித்து அறிவித்துள்ள கம்பனி, தெரிவு செய்யப்பட்டுள்ள அதிகாரிகளுள் இரண்டு அதிகாரிகளான திருமதி. ஆர்.எஸ். பனாகொட, மற்றும் பி.ஸ்ரீதரன் ஆகியோர் மில்லியன் டொலர் வட்டமேசை மாநாட்டின் கோர்ட் ஒப் த டேபிள் உறுப்புரிமைக்கும் தகுதி பெற்றுள்ளனர் என்றும், அம்பலாந்தோட்டையைச் சேர்ந்த ஏ.ஜ.பி.மஞ்சுல என்பவர் மில்லியன் டொலர் வட்டமேசை மாநாட்டின் ஆயுள் கால உறுப்புரிமையைப் பெற்றுள்ளார் என்றும் அறிவித்துள்ளது.

மில்லியன் டொலர் வட்ட மேசை மாநாட்டின் 2014ஆம் ஆண்டுக்கான வருடாந்த மாநாடு ஜூன் மாதம் 8ம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை கனடாவின் டொரன்டோ நகரில் இடம்பெறவுள்ளது.

உலகம் முழுவதும் உள்ள காப்புறுதித் துறைசார் நிபுணர்கள் சுமார் 4,000 பேர் இதில் பங்கேற்கவுள்ளனர்.

இம்முறை மில்லியன் டொலர் வட்டமேசை மாநாட்டுக்கு தகுதி பெற்றுள்ளவர்களுள் கொழும்பு, அம்பலாந்தோட்டை, மட்டக்களப்பு, பண்டாரவளை, நெல்லியடி ஆகிய பகுதிகள் உட்பட நாட்டின் பல பகுதிகளைச் சேர்ந்தவர்களும் அடங்குவர்.

1993இல் செலிங்கோ லைஃப் தான் நாட்டின் முதலாவது மில்லியன் டொலர் வட்ட மேசை மாநாட்டுக்குத் தகுதி பெற்ற காப்புறுதி விற்பனை அதிகாரியை உருவாக்கியது.

அதேபோல் இலங்கையில் இருந்து முதலாவது லைஃப் அன்ட் ஆனுசுவு டொப் ஒப் த டேபிள் உறுப்பினர்களை உருவாக்கியதும் செலிங்கோ லைஃப் தான்.



உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தீர்வில் அக்கறையா, அல்லது அவசரமா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குழுவினருக்கும் இன்றைய மஹிந்த ராஜபக்ஷ அரசு பிரதிநிதிகளுக்கும் இடையில் இனப்பிரச்சினை தொடர்பாக மிக ஆரவாரமாக இல்லாவிட்டாலும் மிக நேசபான்மையுடன் ஆரம்பமாகி நடைபெற்று வந்த பேச்சுவார்த்தைகள் இடைநடுவில் முறிந்து போனமை-அரசு தரப்பு முறித்துக் கொண்டமை பகிரங்க இரகசியம்.

அந்தப் பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெற்று அதன் மூலம் ஏற்படும் உடன்பாட்டின் மீதே நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் பங்கேற்க முடியும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிலைப்பாடு ஒன்றில் இருந்து வருகின்றது. அவ்வாறு உடன்பாட்டினை ஏனைய கட்சிகளின் ஆலோசனைக்கு விடலாம் என்பது தமிழ்த் தரப்பினரின் கூற்று.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் மூலம்தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்று அடம்பிடித்துக் கூறிவரும் அரசு அந்த நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் தான் என்ன மாதிரியாக தீர்வுத் திட்டத்தை முன்னெடுக்கவிருக்கிறது அல்லது ஆலோசனைக்கு வைக்கப் போகிறது என்பது பற்றி இது வரைக்கும் இம்மியளவும் கசிய விட்டதும்கூட இல்லை.

இருந்தாலும் தெரிவுக் குழுவில் உள்ள அரசு சார்பு அல்லது பங்காளிக் கட்சிகளின் நிலைப்பாடுகள் ஏற்கனவே வெளியாகியுள்ளன. தமிழ்த் தரப்பினரை எதிராளிகள் போலவே கருதுகின்ற அல்லது அவர்கள் கேட்கும் எதுவுமே நாட்டுக்கு உகந்ததாக இல்லை என்ற வகையிலான கொள்கைகளைக் கொண்டுள்ள சில கட்சிகள் அரசு தருவதற்கு முன் வரும் உரிமைகளைக்கூட அடித்து நொறுக்கிவிடத் தயாராய் இருப்பதை அவர்களின்அவ்வப்போதைய பேச்சு வெளிப்பாடுகள் காட்டி நிற்கின்றன.

உரிமை கேட்கும் தமிழருக்கு முள்ளிவாய்க்கால் இறுதி நிலைமைதான் முடிவாகும் எனச் சாபம் இடுபவர்களும், 13ஆம் திருத்தம் எந்த வகையிலும் செயற்படுத்தப்படுவதை அனுமதிக்கப் போவதில்லை என்று கங்கணம் கட்டிக்கொண்டிருப்பவர்களும், அவர்களுடன் இணைந்து பாடுபடுபவர்களும் அரசு தரப்பில் இருக்கும்போது தமிழ்த் தரப்பு எந்த வகையில் நம்பிக்கையோடு தெரிவுக் குழுவுக்கு வருவார்கள்?

சர்வதேச மற்றும் இந்திய அரசின் நெருக்குதல் மீது மாகாண சபை தேர்தலை நடத்தி பகட்டுக் காட்டியவர்கள் அந்த சபைக்குரிய உரிமைகளைக்கூட இன்னமும் முறையாக வழங்காத நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நம்பிக்கையுடன் எங்ஙனம் தெரிவுக் குழுவுக்குள் வர முடியும்?

தெரிவுக் குழுவிலுள்ள இடது சாரியினர் என்னதான் தமிழ்த் தரப்புக்குச் சாதகமாக வெளியில் பேசினாலும் அரசு எடுக்கும் நிலைப்பாட்டை எதிர்த்து நிற்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

இந்த நிலையில்தான் இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தெரிவுக் குழுவில் கலந்துகொள்ளாவிட்டாலும் அவர்களின் நிலைப்பாட்டை அறிவிக்கும்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கேட்கப்படவிருப்பதாக உறுதிப்படுத்தப்படாத செய்தி ஒன்று கூறுகின்றது.

எதிர்த்தரப்பிலிருந்து முக்கிய கட்சிகளான ஐ.தே.கட்சி, ஜனதா விமுக்திப் பெரமுன மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியவை கலந்து கொள்ளாத நிலையிலும் அரசு தரப்பு கட்சிகளின் பிரதிநிதிகளுடன் தெரிவுக் குழுவின் அமர்வுகள் நடைபெற்று வந்து இடையில் நிறுத்தப்பட்டிருந்தன.

இப்பொழுது புதிய இந்தியப் பிரதமர் நல்லிணக்க முயற்சிகளை விரைவுபடுத்தும்படி வற்புறுத்தியிருப்பதையடுத்து தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் முனைப்புடன் இறங்கியிருப்பதாகக் காட்டிக் கொள்வது இதன் நோக்கமாக இருக்கலாம். 13ஆவது திருத்தத்தை முழுமையாகவும் அதற்கு அப்பாலும் சென்று நிறைவேற்றி தீர்வு காணும்படி இந்தியா இப்போது வற்புறுத்தியிருப்பதற்கு அது இந்தியாவின் அனுசரணையில் உருவாக்கப்பட்டது என்பதைவிட இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் பெற்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, சர்வதேசத்துக்கும் இந்தியாவுக்கும் அளித்துள்ள வாக்குறுதிகளே அடிப்படைக் காரணம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் நிலைப்பாட்டை அறிவிக்கும்படி கேட்கப்படவிருப்பது போல் குழுவில் கலந்து கொள்ளாமல் இருந்துவரும் ஏனைய கட்சிகளும் கேட்கப்படவிருப்பதாகத் தெரிகிறது. எதுவானாலும் இனப் பிரச்சினைக்கு விரைவாகவும் சகலரும் ஏற்றுக்கொள்ளும் வகையிலும் தீர்வொன்றைக் காண வேண்டிய நிலைக்கு அரசு வந்துள்ளது என்பது மட்டும் புரிகிறது. அதன் அவசரப் போக்கு இதையே காட்டுகிறது.

# டில்லிக்கும் - கொழும்புக்கும் மீண்டும் மோதல் நிலையா?

சண்டே ரைம்ஸ் கட்டுரையில் இருந்து
கோகுலன்

பலரும் நினைத்தார்கள் புதிய இந்தியபிரதமமந்திரிமுதலில்உள் விவகாரங்களைக் கவனிப்பார். வெளிநாட்டு மற்றும் அண்டை நாடுகளுடனான பிரச்சினைகள் பற்றி கவனம் எடுக்க பல மாதங்கள் ஆகும் என்று. ஆனால் நரேந்திரமோடிக்கு அவ்வளவு காலம் தேவைப்பட வில்லை. இலங்கை ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசிய போது அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக செயற்படுத்தும்படி கேட்டுக்கொண்ட அவர், ஐக்கியப்பட்ட இலங்கையில் தமிழ் சமூகத்தினர் சமத்துவம், நீதி மற்றும் கௌரவத்துடன் வாழ்வதற்குத் தேவையான அவர்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் தேசிய நல்லிணக்க செயற்பாடுகளை முன்னெடுங்கள் என்று கேட்டுக் கொண்டார்.

பாரதீய ஜனதாக்கட்சியின் அமோக வெற்றி மாநில அரசுகளின் ஆதரவை நாடாமல் மத்திய அரசு ஆட்சி நடத்தும். அதனால் இலங்கைக்கு பாதகமாகாது என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணித் தலைவர்கள் பலரும் எண்ணி மகிழ்ந்திருந்தார்கள். இப்போது வந்துள்ள செய்தியின்படி தமிழ்நாடு அ.இ.அ. தி.மு.க. கழகத்தையும் அரசுடன் சேர்த்துக் கொள்வார் என்பது மட்டுமல்ல அந்தக் கட்சியினருக்கும் அமைச்சரவையில் இடம்கொடுப்பார் என்றும் தெரிகிறது. இம்மாதம் 3 ஆம் திகதி (இன்று) அந்தக் கட்சியின் தலைவியும் தமிழ்நாடு முதல்வருமான செல்வி ஜெயலலிதா பிரதமர் நரேந்திரமோடியைச் சந்தித்துப் பேச விருக்கிறார்.

### வெளிநாட்டுக் கொள்கை

இந்திய வெளிநாட்டுக் கொள்கையைப் பொறுத்தவரை பாரதீய ஜனதா கட்சியின் கொள்கைகள், காங்கிரஸ் கொள்கைகளுக்கு எந்த வகையிலும் வித்தியாசமாக இருக்காது என்பது அரசில் உள்ள அனேகருக்கு தெரிந்திருக்கவில்லை. சிலர் இந்தியப் பிரதமரும் இலங்கை ஜனாதிபதியும் ஒரே மாதிரியானவர்கள். அதனால் நிலைமைகள் நல்ல மாதிரியாக மாறும் என்றெல்லாம் கூட கூறியிருந்தார்கள். கொழும்புக்கும் புதுடில்லிக்குமிடையிலான மோதல்கள் பழைய கதைகளாகி விடும் என்றும் கூடச் சிலர் கூறினார்கள். இவர்களின் மனப்போக்கை இந்தியத் தலைவரின் செயற்பாடுமாற்றிக்கொள்ளச் செய்துள்ளது.

ஜனாதிபதி ராஜபக்ஷவுடன் நடத்திய பேச்சுக்களின் போது பிரதமர் மோடி காட்டிய அதே நிலைப்பாட்டை இந்திய வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜ் எதிர்க் கட்சித் தலைவராக 2012 ஏப்ரல் 21ஆம் திகதி இங்கு வந்திருந்த போதும் வெளிப்படுத்தியிருந்தார். தாஜ் ஹோட்டலில் நடைபெற்ற பத்திரிகையாளர் பெருமளவில் கூடியிருந்த மாநாடு ஒன்றில் அவர் பேசிய போது 13 ஆவது திருத்தத்தை மட்டுமல்ல அதற்கு மேலாகவும் சென்று நிறைவேற்றுவார் என்று ஜனாதிபதி தமக்கு வாக்குறுதியளித்திருப்பதாகக் கூறினார். அவ்வேளை சில பத்திரிகையாளர்கள் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா இவ்வாறு ஜனவரியில் கூறியதை இலங்கை அரசின் அமைச்சர்கள் சிலர் மறுத்திருந்தார்கள் என்று எடுத்துக் காட்டினார்கள். அதற்கு சுஷ்மா சுவராஜ் பதில் தருகையில்; அமைச்சர்கள் என்ன சொல்கிறார்கள். எதை மறுக்கிறார்கள் என்பது கேள்வியல்ல. ஜனாதிபதியே 13 ஆவது திருத்தம் மற்றும் அதற்கு மேலாகவும் நிறைவேற்றுவதாகக் கூறியிருக்கிறார் என்று பதிலளித்திருந்தார். இந்தியப் பிரதமரின் பதவி ஏற்பு வைபவத்தையடுத்து இலங்கை அதிபரும் அவரது பரிவாரமும் தமது விருந்தினர் மாளிகைக்கு திரும்பியதன் பின்னர் பிரதமர் மோடி நள்ளிரவு வரை விழித்திருந்து வெளியுறவு செயலாளர் சுஜாத்தா சிங் மற்றும் அதிகாரிகளைக் கொண்டு இலங்கை விவகாரம் தொடர்பாக விவரங்களைக் கேட்டு தன்னை ஆயத்தம் செய்து கொண்டார் என்று அதிகாரிகள் தெரிவித் தனர். அடுத்த நாள் இலங்கை அதிபரும் பரிவாரங்களும் அவரைச் சந்தித்தபோது மோடி அந்த 20 நிமிட உரையாடலுக்கு தயாராய் இருந்தார். 13 ஆவது திருத்தம் மற்றும் அதற்கு அப்பாலும் சென்று நிறைவேற்றும்படி மோடி வற்புறுத்திய போது ராஜபக்ஷ தரப்பில் இம்மாதிரி விடயங்களை ஒரே இரவில் நிறை வேற்றி விடமுடியாது என்று விளக்க மளிக்கப்பட்டதாகவும் அதற்கு மோடி போர் முடிந்து இப்போது ஐந்து வருடங் களுக்கு மேல் ஆகிவிட்டது என்று சுட்டிக் காட்டியதாகவும் தெரியவந்துள்ளது. ஒரு கட்டத்தில் வெளியுறவு செயலாளர் சுஜாதா சிங் பக்கம் திரும்பி, முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு என்னென்ன வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டிருந்தன என்று கேட்டுள்ளார். 13 ஆவது திருத்தம் முழுமையாக அதற்கு மேலாகவும் நிறைவேற்றப்படும் என்று உறுதியளிக்கப்பட்டிருந்ததாக சுஜாதா பதிலளித்தார். இலங்கை விவகாரம் குறித்து அவர் முழுமையாக ஆயத்தமாகியிருந்தார் என்பது 500 மெகாவாட் சம்பூர் அனல் மின்நிலையம் தொடர்பான ஒப்பந்தம் விரைவாகசெயற்பட ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று கூறிய போது வெளிப்பட்டது. கடந்த வாரம் சுஷ்மா சுவராஜ் புதிய இந்திய வெளியுறவு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார் என்பது பற்றி இலங்கை வெளியுறவு அமைச்சர் பீரிஸ் அவரைப் பாராட்டி இருந்ததோடு "இது எமக்கு பெரும் பலமளிப்பதாகும். எமது பாரம்பரிய நட்பு ரீதியிலான உறவுகளை மேலும் பலப்படுத்துவதாகும்" என்றெல்லாம் கூறியிருந்தார். 13 ஆவது திருத்தம் மற்றும் அதற்கு அப்பாலும் செயற்படுத்தப்படும் என்று ஜனாதிபதி கூறியிருந்ததாக அமைச்சர் கிருஷ் ணாவுக்கு கூறியிருந்தவரும் பீரிஸ் தான். அதை வெளிப்படுத்த வேண்டாம் என்று கிருஷ்ணாவிடம் பீரிஸ் கூறியிருந்தால் அந்த விடயம் வெளிவந் திருக்கமாட்டது.

### யாழ். மேயரின் தடுமாற்றம்

பேச்சுவார்த்தைகள் முடிவுற்றதன் பின்னர் அது பற்றி இலங்கைத் தரப்பில் வெளியிடப்பட்டிருந்த அறிக்கை குறித்து இந்திய அதிகாரிகள் கோபமுற்றிருந்ததாகத் தெரிகிறது. இலங்கை அறிக்கையின் 13 ஆவது திருத்தம் தொடர்பாக மோடி எழுப்பிய கேள்வி மற்றும் அதனை செயற்படுத்துமாறு கொடுத்த அழுத்தம் பற்றி இலங்கை மக்களுக்கு எதுவும் தெரிவிக்கப்படாமல் மறைக்கப்பட்டிருந்தது. பொதுவில் இம்மாதிரி சந்தர்ப்பங்களில் இரு தரப்பும் சேர்ந்தே கூட்டறிக்கை விடுப்பது வழக்கம். அதனால்தான் ஊடகங்களுக்கு இந்திய தரப்பு பேச்சாளர் வழங்கிய விளக்கத்தின் போது வெளியுறவு செயலாளர் சுஜாத்தா சிங் தாமும் கலந்து கொண்டு இந்தியாவுக்கு இலங்கை வழங்கியுள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றும்படி பிரதமர் மோடி இலங்கை ஜனாதிபதியைக் கேட்டுக்கொண்டார் என்பதை கூற வேண்டியிருந்தது. 13 ஆவது திருத் தம் பற்றி எதுவும் கூறாமல் மறைத் திருந்த இலங்கைத் தரப்புக்கு இது பெரும் தர்ம சங்கடமாகவே இருந்துள்ளது. இலங்கைத் தரப்பிலான அறிக்கை விடும் ராஜதந்திரம் தொழில் ரீதியிலான நிபுணத்துவத்துடன் செய்யப்படாமல் அவசரத் தன்மையைக் காட்டியுள்ளமை இலங்கைக்கு பாதகமான விடயம் என்பது ஒரு புறமிருக்க இன்னும் அதிக பாதகமான இன்னொருசம்பவம் நிகழ்ந் துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ராஜபக்ஷவின் பரிபவாரங்களில் ஒருவராக சென்றிருந்தவர் யாழ்ப்பாண நகர மேயர் யோகேஸ்வரி பற்குணராஜா. புதுடில்லி தொலைக்காட்சிக்கு (NDTV) அவர் அளித்த செவ்வியின் போது பிரதமர் மோடியுடன் நடத்திய பேச்சுக்களின் போது ஜனாதிபதி மாகாண சபைகளுக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை வழங்க ஒப்புக்கொண்டுள்ளார் என்று தெரிவித்திருந்தார். தடுமாற்றமான ஆங்கிலத்தில் தெரிவிக்கப்பட்ட இந்தக் கருத்து மீண்டும் இலங்கைத் தரப்புக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்துவதாக இருந்தது. பற்குணராஜா, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வின் ஈழ மக்கள் ஜனநாயக் கட்சியின் பிரதி நிதியாக இருக்கிறார். அவ்வாறான வாக்குறுதி எதுவும் வழங்கப்படாத நிலையில் ராஜபக்ஷவின் பேராளர் குழு தொடர்பாக பேச்சாளராகச் செயற்படுவதற்கு யார் அவருக்கு அனு மதியளித்தார்கள்? எவரும் அளிக்கவில்லை என்றால் அவ்வாறான குழுக்களில் செல்பவர்களுக்கு போதிய விளக்கம் அளிக்கப்படுவதில்லை என்பது புலனாகின்றது. அவர்கள் கட்டவிழ்த்துவிடப்பட்டு விடுகிறார்கள். தளர்த்தப்பட்ட பீரங்கிகள் போல ஜெனிவாவில் பலதரப்பட்டவர்களும் இலங்கை சார்பில் பேசுவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது போல - ராஜபக்ஷ அரசை இலங்கைத் தமிழர்கள் ஆதரிக்கிறார் என்பதைக் காட்டுவதற்காகவே பற்குணராஜா புதுடில்லிக்கு அழைத்துச் செல்லப்பட்டார். ஆக அவர் இந்திய வானொலிக்கு செவ்வி வழங்கிய போது என்ன கூற வேண்டும் என்பதை அவர் அறிந்திருந்திருக்க வேண்டும். இந்தியாவில் இருந்து இலங்கை திரும்பிய ஜனாதிபதி ராஜபக்ஷ பத்திரிகையாளர் மாநாடு ஒன்றைக்கூட்டி 13 ஆவது திருத்தம் மற்றும் அதற்குமேலும் செல்வது தொடர்பான இலங்கை அரசின் நிலைப் பாட்டை அறிவிக்கும்படி அமைச்சர் சிறி பால டி சில்வாவிடம் கேட்டிருந்தார். அமைச்சர் பத்திரிகையாளர்களிடம் பேசிய போது, "13 ஆவது திருத்தம் எங்கள் மீது திணிக்கப்பட்ட ஒன்று. நாங்கள் பெரும் பாடுபட்டு இதுவரை சமாளித்திருக்கிறோம். அதை செயற்படுத்துவது தொடர்பாக இப்போது விவாதம் ஒன்று ஆரம்பமாகி யுள்ளது. முன்னர் வடக்கு மாகாண சபையை நிறுவுவது தொடர்பாக அது இருந்தது. நாங்கள் வடக்கில் தேர்தலை நடத்த மாட்டோம் என்று சிலர் கூறிவந் தார்கள். இப்போது வடமாகாண சபை நிதர்சனமாகியிருக்கிறது. இப்பொழுது 13 ஆவது திருத்தத்தை முழுமையாக செயற் படுத்துமாறு சிலர் கூறுகிறார்கள். அதன் சில விதிகளை செயற்படுத்துவதில் நடை முறைப் பிரச்சினைகள் உண்டு - என்றார் அமைச்சர். மேலும் கூறுகையில்:

இந்தியா நமது மிக அண்மையிலுள்ள நாடு. ஆனால் எவரும் எமக்கு நிபந்தனைகளை, கட்டளைகளையிட முடியாது. நாம் அவர்கள் சொல்வதை கேட்க தயாராய் இருக்கிறோம். ராஜபக்ஷ பொறுப்பெடுத்ததன் பின்னர் பல பிரயாணங்களும் விவாதங்களும் இடம்பெற்றுள்ளன. பேச்சுக்கள் தொடர்கின்றன. நாம் என்ன சொல்கின்றோம் என்றால் ஒரு தீர்வு பற்றி இலங்கை மக்களும் நாடாளுமன்றமும் தான் முடிவு செய்ய வேண்டும். வெளியார் தீர்வு குறித்து எமக்கு கட்டளையிட முடியாது..." என்று தெரிவித்தார். அமைச்சர் சில்வாவின் கருத்து இரண்டு விடயங்களை எழுப்புகின்றன.

நல்லிணக்கம் தொடர்பாக வெளியார் கட்டளையிட முடியாது என்கிறார் ஒருபக்கம். அதே சமயம் இலங்கையின் அமைதி மற்றும் நல்லிணக்க செயற்பாட்டில் உதவி புரியுமாறு இலங்கை அரசு கோரி உள்ளதாகத் தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் சூமா கடந்த வருடம் அந்த நாட்டின் நாடாளுமன்றத்தில் அறி வித்திருந்தார். அதனால் இது சம்பந்தமாக செயற்படுவதற்கு சிறப்புத் தூதுவராக சிரில் ரம்போசாவை நியமித்திருப்பதாகவும் அறிவித்திருந்தார். அமைச்சர் சில்வாவின் கருத்துப்படி 13 ஆவது திருத்தத்தை செயற் படுத்தும்படியான மோடியின் கோரிக்கை கைவிடப்பட்டுவிட்டது என்று கொள்ள வேண்டும். இந்த நிலைப்ப ாடானது இலங் கையை புதுடில்லியுடனான ஒரு மோதல் நிலைக்கு இட்டுச் செல்வதாக உள்ளது.

கந்தப்பு பரமேஸ்வரன்,
ஆசிரியர் கிளி/கண்ணகை
அம்மன் வித்தியாலயம்.

# தட்டுவன்கொட்டி கண்ணகை அம்மன் ஆலயமும்

## வருடாந்த வைகாசி உத்தரப் பொங்கல் விழாவும்

பழைமையும் பெருமையும் வாய்ந்த ஓர் ஆலயமாகத் தட்டுவன்கொட்டி கண்ணகை அம்மன் ஆலயம் விளங்குகின்றது. இற்றைக்கு 400 வருடங்களுக்கு முன்னர் (கி.பி. 16 ஆம் நூற்றாண்டு) கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேசத்தின் ஓர் எல்லைக் கிராமமாகவும், யாழ். கண்டி ஏ-9 வீதியில் இருந்து வடக்காக 5 கிலோ மீற்றர் தூரத்தில் மூன்று புறமும் கடல் நீரேரி யினால் சூழப்பட்டு சுண்டிக்குள கடல் நீரேரியை அண் மித்து இயற்கை எழில் நிறைந்த இடமுமாகிய தட்டுவன் கொட்டியில் கண்ணகை அம்பாள் வீற்றி ருந்து அருள் பாலிக்கின்றாள்.

இந்த ஆலயத்தின் தோற்றம் தொடர்பாக ஆராயும் போது யாழ்ப்பாணத்திலிருந்து கண்டி செல்லும் பழைய கண்டி வீதியிலும், வன்னியிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் கொம்படிப் பாதையின் மத்தியிலும் இந்தக் கிராமம் அமைந்துள்ளதால் அந்தக் காலத்தில் நடைபாதையூடாக யாத்திரிகர்களும் மக்களும் பயணம் செய்து வந்தனர். இவ்வாறு கரையோர வழியாக இளம் குடும்ப யாத்திரிகர் இருவர் பயணம் செய்து கொண்டிருந்தபோது களைப்பினால் சோர் வடைந்து மாவிலங்கை மரத்தின் கீழ் அமர்ந்தி ருந்தனர். அவர்கள் தாகத்தினால் உடல் சோர்வடைந் தனர். அந்தவேளை தொலைவிலே காணப்பட்ட கடல் நீரேரியில் நீரை எடுப்பதற்கு கணவன் சென்றிருந்த வேளையில் மனைவி மரத்தின் கீழே காணப்பட்ட இலை குழை சருகுகளை அகற்றி உறங்குவதற்கு முற்பட்ட வேளையில் சருகுகளின் மத்தியில் ஒரு முளை வடிவான உயிரிலிருந்து இரத்தம் கசிந்து வருவதைக் கண்டாள். இந்த அதிசயத்தை நீர் எடுத்து வந்த கணவனிடம் கூற இருவரும் அச்சத்தினால் உறைந்து விட்டனர். இருந்தும் அந்த இடத்தை அங்கு காணப்பட்ட மண் பாத்திரத்தினால் மூடிவிட்டு மாலைப் பொழுதாகி விட்டதால் அன்றிரவு அந்த இடத்திலேயே உறங்கி விட்டனர். நள்ளிரவு வேளையில் அம்பிகை கனவிலே தோன்றி இந்த இடத்திலே தனக்கு ஓர் ஆலயம் அமைத்து பூசை வழிபாடுகளைச் செய்யும்படி அருட்காட்சி கொடுத்தாள். மறுநாள்முதல் தம்பதியினர் இருவரும் அங்கு சிறிய கொட்டகை அமைத்து பூசைகளைச் செய்து வந்தனர். இவர்களின் வழித் தோன்றல்களான தட்டுவன் கொட்டி மக்கள் இந்தக் கிராமத்திலே வாழ்ந்து வருவதாக வரலாற்று ரீதியாக அறிய முடிகின்றது. காலப்போக்கில் மீன்பிடி, விவசாயம், மந்தை வளர்ப்புபோன்ற தொழில்களில் இருந்து கிடைக்கும் வருமானத்தில் ஒரு பகுதியை அம்பிகைக்கு ஒதுக்கி நிரந்தரமாகக் கல்லினாலும், சிமெந்து, மணல் கொண்ட நான்கு மண்டபங்களையும் கொண்ட அழகிய வடிவிலான கோயிலையும் அன்ன தான மண்டபத்தினையும் அமைத்து ஆகமம் சாராத முறையிலமைந்த பூசைகளை பூசாரியைக் கொண்டு நடத்தி வந்தனர். இதைவிட வருடாந்த வைகாசி உத் தரப் பொங்கல் விழா மிக விமரிசையாகக் கொண் டாடப்பட்டும் வந்தது. 1990 களில் போர்ச் சூழல் காரண மாக ஆலயம் சேதமடைந்ததால் இடம்பெயர்ந்து கண்ணகி நகரிலுள்ள ஓர் இடத்தில் மூலஸ்தான விக்கிரகத்தை எடுத்துச் சென்று அங்கேயே வைத்து வழிபட்டுவந்தனர். 2009 ஆம் ஆண்டு போர் முடிவுற்ற பின்னர் தற்போது மீளவும் பழைய இடத்தில் ஆலய புதுப்பொலிவுடன் புனரமைக்கப்பட்டு அடியார் களுக்கு வேண்டிய அருளை அன்னையவள் வழங்குகின்றாள்.

### வருடாந்த உத்தரப் பொங்கல் உற்சவம்

வைகாசி மாதத்தில் வருகின்ற தேய்பிறையை அண்டிய இரண்டாம் திங்கள் ஆண்டு உற்சவம் ஆரம்பமாகி தொடர்ந்து எட்டு நாள்கள் நடைபெறுகின்றது. இந்த உற் சவத்திலே பாக்குத் தெண்டல், கும்ப வைப்பு, கோவலனார் கண்ணகை வரலாற்றுப் பதிக படிப்பு, மடை மாற்றுதல், பண்டமெடுத்தல், கொடித்தம்பம் நடுதல், வழுந்து கட்டுதல், வழி வெட்டுதல், கொடித் தம்பம் இறக்குதல் போன்ற விசேட வழிபாடுகள் நடைபெறுகின்றன.

### பாக்குத் தெண்டல் சடங்குடன் ஆரம்பமாகும் இந்த உற்சவம்

ஆலயத்தின் நிர்வாக உறுப்பினர்களாக இருக்கும் 12 பேர் வீடுகளிலும், முதலாம் நாள் பூசை உபயகாரா வீட்டிலும் ஆலய பூசகர் மற்றும் உரித்துடையோர் வீடுகளிலும், வாசலில் கும்பம் வைத்து மஞ்சள் தோய்த்த வெள்ளைத் துணியினுள் மஞ்சள் துண்டு பாக்கு காணிக்கைக் கட்டி வாயைத் துணியி னால் கட்டிக்கொண்டு தண்டலுக்கு வருபவர் தண்டத்தைப் பெற்றுச் செல்வார்.

மறுநாள் அதிகாலை 3 மணியளவில் கண் ணகை அம்மனுக்கு கும்பம் வைத்து கோவ லனார் கண்ணகை அம்மன் வரலாற்றைப் படிக்கும் நிகழ்வு நடைபெறும். தொடர்ந்து மடை மாற்றுதல் நிகழ்வு நடைபெறும். இதில் காய், பழங்கள் பரவி பூசை செய்து பின்னர் பூசையின் முடிவில் அடியவர் களுக்குப் பிரசாதமும் அன்னதானமும் வழங்கப்படுகின்றது. இந்த நிகழ்வு தொடர்ந்து வெள்ளிக்கிழமை வரையான 5 நாள்களுக்கு நடைபெறும். வெள்ளி யிரவு 7 மணிக்கு பண்டமெடுக்கும் நிகழ்வுக்கு முதற்படியாக வெள்ளையில் காசு இடுதல் நடைபெறும். அது பூசாரி யினால் மாலைப் பூசையில் அம்பாளின் மூலஸ்தானத்தில் வைக்கப்பட்டிருக்கும் வெள் ளைத்துணி, வெள்ளைப் பிரம்பு, வேப்பிலை என் பனவற்றை எடுத்து வந்து ஆலய வாசலில் வெள்ளைத் துணியை விரித்து பிரம்பு, வேப்பிலையை வைப்பார்.

இந்தச் சடங்கு இறுதிநாள் விழா நிகழ்வுக்கான பணத்தை ஆலய நிர்வாக உறுப் பினர்கள் தத்தமது குடும்ப அங்கத் தவர்களிடமிருந்து பெறப்பட்ட பணத்தை துணியினுள் போடுவார்கள். அத்துடன் ஏனைய அடியவர்களும் பங்களிப்புச் செய்வார்கள். மறுநாள் காலை 6 மணிக்கு பண்டப் பொருள்கள் கொள்வனவுக்கு கோயிலிலிருந்து வண்டிலில் வெள்ளை கட்டி வேப்பிலையும் பிரம்புடனும், சாவகச்சேரிக்கு எடுத்துச் சென்று பண்டத்துக்குத் தேவையான பொருள்கள் உரித்துக்காரர்களி னால் வாங்கப்பட்டு சனிக் கிழமை மாலையில் கோயிலை வந்த டைந்து அருகிலுள்ள பண்ட மரவடி என்ற இடத்தில் வைக்கப்பட்டு மாலைப் பூசையுடன் அன்ன தானம் வழங் கப் படும். மறுநாள் ஞாயிற்றுக் கிழமை வழமை யான பூசை வழி பாடுகளுடன் மாலை 7 மணிக்கு ஆலயத்தின் பண் டைக்கால முறைப் படியான பண்டம் ஏற்கும் வைபவம் இடம்பெறும் பறை மேளம், உடுக்கு என் பன முழங்க



தொழிலிலிருந்து கிடைக்கும் வருமானத்தில் ஒரு பகுதியை அம்பிகைக்கு ஒதுக்கி நிரந்தரமாகக் கல்லினாலும், சிமெந்து, மணல் கொண்ட நான்கு மண்டபங் களையும் கொண்ட அழகிய வடிவிலான கோயிலையும் அன்னதான மண்டபத்தினையும் அமைத்து ஆகமம் சாராத முறையிலமைந்த பூசைகளை பூசாரியைக் கொண்டு நடத்தி வந்தனர். இதைவிட வருடாந்த வைகாசி உத்தரப் பொங்கல் விழா மிக விமரிசையாகக் கொண்டாடப் பட்டும் வந்தது. 1990 களில் போர்ச் சூழல் காரணமாக ஆலயம் சேத மடைந்ததால் இடம்பெயர்ந்து கண்ணகி நகரிலுள்ள ஓர் இடத்தில் மூலஸ்தான விக்கிரகத்தை எடுத்துச் சென்று வைத்து அங்கேயே வழிபட்டு வந்தனர். 2009 ஆம் ஆண்டு போர் முடிவுற்ற பின்னர் தற்போது மீளவும் பழைய இடத்தில் ஆலயம் புதுப் பொலிவுடன் புனரமைக்கப்பட்டு அடியார் களுக்கு வேண்டிய அருளை அன்னையவள் வழங்குகின்றாள்.

வெள்ளை விரிப்பது, மோளப்பு பிடிப்பது என்ப பக்தர்கள் புடை சூழ இந்தச் சடங்கு நிறைவேறு பின்னர் விசேட பூசை ஆராதனைகளுடன் கொடி தம்பம் நிறுத்தும் நிகழ்வு நடைபெறும். கொடி தம்பமானது வேப்பிலை தெற்பை புற்களினா சுற்றப்பட்டு ஆலய முன் வாசலில் நிறுத்தப்படு அன்றைய தினமே நள்ளிரவு "ஒன்றுபாதி" பூ எனப்படும் மகேஸ்வர பூசை நடைபெறும். மறுநா திங்கட்கிழமை காலை விசேட பூசை ஆராதன களுடன் பொது மக்கள் அம்மனுக்கு நேர்த்தி வை உமையாள்புரம், முரசுமோட்டை, பரந்தன், இ கச்சி, கண்ணகிநகர், புளியம் பொக்கணை கிரா களிலிருந்து பறவைக் காவடிகள், தூக்குக்காவடி ஆனந்தக் காவடிகள், கரகம், பாற்செம்பு ஏந்தி த நேர்த்திகளை நிறைவேற்றுவர்கள். இதிலும் வ வேறுபாடின்றி நூற்றுக் கணக்கான பெண்கள் கர ஆடி அம்மனின் புகழ்பாடி வருவார்கள். மாலை மணிக்கு ஆலயத்தின் முன்றலில் வைக்கப்ப ருக்கும் பண்டப் பொருள்கள் பண்டமாற்று முறை எடுத்து வந்து பரவி விசேட பூசைகளுடன் அம்ம காப்பு படிக்கப்பட்டு அன்னதானம் வழங்கப்படு அன்றிரவு கண்ணகி வரலாற்றை சித்திரிக் சிலம்பின் செல்வி என்று கூறப்படும் கோவல கண்ணகி மற்றும் காத்தவராயன் என்ற சி நடைக் கூத்தும் இடம்பெறும். மறுநாள் அதிகா 3 மணிக்கு அம்மனுக்கும் பரிவார மூர்த்திகளுக் வழுந்து கட்டி பொங்கல் இடம்பெறும். காலை மணிக்கு வழிவெட்டுதல் சடங்கின் ஆரம்பமாக ஆ பூசகருடன் கம்பிளியன், ஐயன், அட்டாசுட்டிய ஆ மூவர் வேடம் தரித்து ஆலய உரித்துக்காரர்களுட சுண்டிக்குள கடல் நீரேரிக்கு அண்மையில் செ வழிவெட்டி விட்டு ஆலயம் திரும்புவார்கள். பின் கொடித்தம்ப பூசை நடைபெற்று கொடித்தம் இறக்குதல் நடைபெறும். இவ்வேளை 23 நீளமான கொடித்தம்ப மரத்தை அடியவர் ஏந்தியவாறு ஆலயத்தைச் சுற்றிவந்து இற விடுவார்கள். தொடர்ந்து அம்மனுக்கான கும் குளிர்த்தி பாடல்கள் பாடப்பட்டு இறுதிப் பூ நடைபெற்று அடியவர்களுக்கு பிரசாதமும், அன் தானமும் வழங்கி உத்தரப் பொங்கல் உற்வ இனிது நிறைவுபெறும். இந்தப் பொங்கல் உ வத்தை அடுத்துவரும் திங்கள் வற்றாப்பளை க ணகி அம்மன் பொங்கல் உற்சவம் நடை பெறு குறிப்பிடத்தக்கதாகும்.

## ீனவர் ைகதுக்கு ாசன் ண்டனம்

ம்பூர், ஜூன் 3
ிழக மீனவர்கள் இலங் க்கடற்படையினரால் கைது ய்யப்பட்டமைக்குக் கடும் ண்டனம் தெரிவித்துள்ளார் ன்னாள் அமைச்சர் ஜி.கே. ாசன். இதுகுறித்து அவர் ிவித்திருப்பதாவது:-
ா.ஜ.க. அரசு பெற்றோல், ல் விலை உயர்வை திரும்ப ற வேண்டும். நரேந்திர ாடி பதவியேற்பு விழாவில் ங்கை ஜனாதிபதி பங்கேற் வருத்தமளிக்கிறது.
லங்கை கடற்படையினர் ிழக மீனவர்கள் 33 பேரை ற பிடித்துள்ளனர். அவர் ள விடுதலை செய்ய மத் ாநில அரசுகள் நட க்கை எடுக்க வேண்டும்"- ்று தெரிவித்துள்ளார். (ற)

# சார்க் தலைவர்களை அழைத்தமை சரியே

## இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவிப்பு

புதுடில்லி, ஜூன் 3
எனது பதவியேற்பு விழாவுக்கு சார்க் நாட்டுத் தலைவர்களை அழைத்தது சரியான நேரத்தில் எடுக்கப்பட்ட சரியான முடிவு தான் என்று தெரிவித்துள்ளார் பிரதமர் நரேந்திர மோடி.
பிரதமராகப் பதவியேற்ற பின்னர் முதன்முதலாக புதுடில்லியில் உள்ள பாரதிய ஜனதா கட்சி அலுவலகத்துக்கு வருகை தந்த நரேந்திர மோடி அங்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:-
"வெளியுறவுக்கொள்கை தொடர்பாக நாம் எடுத்த முதல் முடிவு, இந்தியாவின் வலிமையை உலகத்துக்கு பறைசாற்றியிருக்கின்றது. இந்திய ஜனநாயகத்தின் வலிமையை உலக நாடுகள் உணர்ந்து அதற்கான மரியாதையையும், அந்தஸ்தையும் அளிக்க வேண்டும். நாட்டு மக்கள் எமது அரசு மீது அதிக நம்பிக்கை கொண்டிருக்கின்றது. அவர்களது எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற எமது அரசு பாடுபடும்.



நரேந்திர மோடி.

பாரதிய ஜனதா கட்சித் தொண்டர்களின் கடும் உழைப்பால் தான் நாடாளுமன்ற தேர்தலில் கட்சிக்கு அமோக வெற்றி கிடைத்துள்ளது.
தனது பதவியேற்பு விழாவுக்கு சார்க் நாட்டுத் தலைவர்களை அழைத்தது சரியான நேரத்தில் எடுக்கப்பட்ட சரியான முடிவு"- என்று தெரிவித்துள்ளார். (ற)

## ருணாநிதியை வாழ்த்திய சேகர்



ன்னை, ஜூன் 3
ு.க. தலைவர் கருாநிதி தனது 91 வது பிறந்த ளை கொண்டாட ள்ள நிலையில், வருக்குப் பிரபல கர் எஸ்.வி. சேகர் ற்று நேரில் சந் து வாழ்த்து தெரி த்தார்.
ஜனதா, அ.தி.மு.க. ன கட்சி மாறிய ு.வி.சேகர், கடந்த ு.க. ஆட்சியில் ணாநிதி மற்றும் மு.க. அழகிரியிடம் நெருக்கம் காட்டினார். ந்நிலையில் அவர் தி.மு.கவில் சேரலாம் என்ற எதிர்பார்ப்பும் பட்டது. ஆனால் அவர் அவ்வாறு சேரவில்லை. இருப்பினும் ணாநிதியுடனான நட்புணர்வை தொடர்ந்து வந்தார்.
ந்நிலையில் இன்று கருணாநிதியின் 91ஆவது பிறந்த நாள் கும். இவ்விழாவை வழக்கமான உற்சாகத்தோடு கொண்டாட டன்பிறப்புகள் தயாராகி வருகிறார்கள். முந்தைய பிறந்த நாள் ழாக்களை போன்றே, அவர் இந்த ஆண்டும் பொதுமேடை ல் தி.மு.கவினர் மற்றும் இதர அமைப்புகள், பொதுமக்களின் ாழ்த்துக்களை ஏற்றுக்கொள்கிறார். நாளை கூட்டம் அதிகமாக க்கும் என்று கருதியதாலோ என்னவோ, நடிகர் எஸ்.வி. சேகர் ற்று கருணாநிதியை அவரது இல்லத்தில் நேரில் சந்தித்து ாழ்த்து ஓவியம் ஒன்றை பரிசளித்து வாழ்த்தினார். (ற)

# உதயமானது தெலுங்கானா; பதவியேற்றார் முதலமைச்சர்

ஹைதராபாத், ஜூன் 3
தெலுங்கானா மாநிலத்தின் முதலாவது முதலமைச்சராக சந்திரசேகர ராவ் நேற்றுப் பதவி ஏற்றுக் கொண்டார்.
1969 ஆம் ஆண்டு தெலுங்கானா தனி மாநிலக் கோரிக்கை அந்தப் பகுதி மக்களால் எழுப்பப்பட்டது. அதற்கு ராயலசீமா பகுதி மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். அதன்பின்னர் தனித்தெலுங்கானா கோரிக்கை விஸ்வரூப மெடுத்தது.
அந்தப்பகுதி மக்க்ள் பல்வேறு போராட்டங்களை நடத்தினர். அதனையடுத்து 2009 ஆம் ஆண்டு டிசெம்பர் 9 ஆம் திகதி தனி தெலுங்கானா மாநிலம் அமைப்பதாக உறுதியளித்தது அப்போதைய காங்கிரஸ் அரசு.
இதை தொடர்ந்து, நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலுடன் இணைத்து நடத்தப்பட்ட சட்டமன்றத் தேர்தலில், தெலுங்கானா பகுதியில் தெலுங்கானா ராஷ்டிரிய சமிதி கட்சி அமோக வெற்றி பெற்றது.
இந்தநிலையில், இந்தியாவின் 29ஆவது மாநிலமாக தெலுங்கானா நேற்று உதயமானது.
தெலுங்கானா மாநிலத்தின் முதல் முதலமைச்சராக தெலுங்கானா ராஷ்ட்ரிய சமிதி கட்சியின் தலைவர் சந்திரசேகர ராவ் நேற்றுக் காலை 8.15 மணிக்குப் பொறுப்பேற்றுக் கொண்டார்.
சந்திரசேகரராவுக்கு தெலுங்கானா ஆளுநர் நரசிம்மன் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். சந்திரசேகர ராவுடன் தெலுங்கானாவின் அமைச்சர்களாக முகமது அலி, ராஜையா, நரசிம்ம ரெட்டி, ராஜேந்திரன், சீனிவாச ரெட்டி, ஹரீஷ் ராவ், பத்மா ராவ் பதவி ஏற்றுக் கொண்டனர்.



*சந்திரசேகர ராவின் பதவியேற்பை அடுத்து அவரது ஆதரவாளர்கள் மகிழ்ச்சிக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர்.*

தெலுங்கானாவின் முதல்வராக சந்திரசேகர ராவ் பதவி ஏற்றதை அடுத்து அங்கு அமலில் இருந்த குடியரசுத் தலைவர் ஆட்சி இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.
ஆயினும் சீமாந்திரா பகுதியில் குடியரசுத் தலைவர் ஆட்சி தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)



ாதிர்வரும் 5ஆம் திகதி உலக சுற்றுச் சூழல் தினமாகும். அதையொட்டி சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மரம் வளர்ப்பு மற்றும் மோட்டார் வாகனங்களால் ஏற்படும் மாசு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சென்னையில் நேற்றுமுன்தினம் சைக்கிள் பேரணியை நடத்தப்பட்டது. அதில் இயற்கை ஆர்வலர்கள், பெண்கள், குழந்தைகள் என பலதரப்பு மக்களும் கலந்துகொண்டனர். (ற)

## மோடிக்கு கடிதம் எழுதிவிட்டு உயிரை மாய்த்த வியாபாரி

புதுடில்லி, ஜூன் 3
இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதிவிட்டு வியாபாரி ஒருவர் தற்கொலை செய்துகொண்டுள்ளார்.
டெல்லி பூராலி பகுதியில் உள்ள தரம்வீர் காலனியில் வசித்தவர் ரதேஷியாம் பிரசாத். வியாபாரியான இவருக்கு மனைவியும், 3 மகன்களும், 2 மகள்களும் உள்ள னர்.
இந்த நிலையில் பிரசாத் வீட்டில் இருந்த மின்விசிறியில் தூக்குப் போட்டு தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து பொலிஸார் விசாரணை நடத்தியதில் அவரது சட்டைப்பையில் கடிதம் ஒன்று இருந்தது. அந்தக் கடிதம் நரேந்திர மோடிக்கு எழுதப்பட்டிருந்தது.
தனது இந்த தற்கொலைக்கு குடும்பத்தினர்தான் காரணம் என்று கடிதத்தில் குற்றஞ்சாட்டி இருந்தார். தனது மனைவி பணம் முழுவதையும் அவரது பெற்றோர்களுக்கும், அவரது சகோதரர்களுக்கும் கொடுப்பதாகக் குறிப்பிட்டு இருந்தார்.
அத்துடன் அந்தக் கடிதத்தில் பிரதமர் நரேந்திர மோடியை அவர் பாராட்டி இருந்தார். காங்கிரஸின் குடும்ப ஆட்சியை தோற்கடித்ததற்காக மோடியைப் புகழ்ந்து கடிதத்தில் குறிப்பிட்டுள்ளாராம். (ற)

# ுகையிலையே பயன்படுத்தாத நாகாலாந்து கிராமம்

ுடில்லி, ஜூன் 3
காலாந்து மாநிலத்தில் உள்ள ிபெமா, நாட்டிலேயே புகை லை பொருள்களை முற்றிலு கப் பயன்படுத்தாத முதல் கிரா ் என்ற பெயர் பெற்றுள்ளது.
லக புகையிலை ஒழிப்பு ாத்தையொட்டி, கரிபெமா ாம சபை அரங்கில் கடந்த ாிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் இதுதொடர்பான அறிவிப்பை மாநில முதன்மைச் செயலாளர் ஆர்.பென்சிலோ தாங் வெளியிட்டார்.
கரிபெமா கிராம சபை, கிராம தொலைநோக்குப் பிரிவு மற்றும் கிராம மாணவர்கள் சங்கம் ஆகியவை மேற்கொண்ட முயற்சியின் பயனாக அந்த கிராமம் புகையிலையில்லா கிராமமாக உருவெடுத்துள்ளதாக தாங் தெரிவித்தார்.
மது, புகையிலை பொருள்களை விற்பவர்கள், பயன்படுத்துபவர்களுக்கு ரூ.1,000 அபராதம் விதிக்கப்படும் என கிராம சபை தீர்மானம் நிறைவேற்றி உள்ளது. இது போல், பொது இடங்களில் பீடி பிடிப்பவர்கள், பான் பராக் மற்றும் வெற்றிலை போடுபவர்கள், புகையில்லா புகையிலை பயன்படுத்துவோருக்கு ரூ.500 அபராதம் விதிக்கப்படும் என்றும் அந்தத் தீர் மானத்தில் கூறப்பட்டுள்ளது.
நாகாலாந்தில் உள்ள கிராமங்களுக்கு மட்டுமல்லாமல் நாடு முழுவதும் உள்ள அனைத்து பகுதிகளுக்குமே சிறந்த முன்னுதாரணமாக கரிபெமா கிராமம் விளங்குகிறது எனத் தாங் தெரிவித்தார்.
நாகாலாந்தில் உள்ள ஆண்களில் 67.9 சதவீதத்தினரும் பெண்களில் 28 சதவீதத்தினரும் புகையிலையைப் பயன்படுத்துவதாக, இந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற தேசிய புகையிலை கட்டுப்பாடு திட்ட துணை இயக்குநர் எம்.சி. லொங்கை தெரிவித்தார்.
புகையிலை தொடர்பான நோய் காரணமாக இந்தியாவில் நாளொன்றுக்கு 2,200 பேர் உயிரிழக்கிறார்கள். மேலும் புற்றுநோய் ஏற்படுவதற்கு புகையிலை பொருள்களே 40 சதவீதம் காரணமாக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ற)



## சீனாவில் நிலநடுக்கம்

### 43 பேர் காயம்

பீஜிங், ஜூன் 3
சீனாவின் தென்மேற்குப் பகுதியில் அமைந்துள்ள யுனான் மாகாணத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 43 பேர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர். 35 ஆயிரம் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப் பட்டுள்ளனர்.
6.1 ரிச்டர் அலகில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தால், 15 நகரங்களைச் சேர்ந்த ஒரு லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 25 ஆயிரம் வீடுகள் பாதிப்புக்குள்ளாகியுள்ளன.
மீட்புப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. மீட்புப் பணிகளுக்காக 3,500 இராணுவ வீரர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். சில பகுதிகளில் நிலநடுக்கம் காரணமாக மின்சாரம் மற்றும் தகவல் தொடர்பு இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. (ற)

# சீனாவின் செயலால் அமைதி சீர்குலையும்

## எச்சரிக்கின்றது அமெரிக்கா

கிழக்காசியப் பிராந்தியத்தில் ஜப்பான், தென் கொரியா ஆகிய நாடுகளின் கடற்பரப்பில் புதிய வான் எல்லையை தன்னிச்சையாக அறிவித்துக் கொண்ட சீனா, தற்போது வியட்நாம் கடல் எல்லைக்குள் அந்நாட்டின் அனுமதியின்றி எண்ணெய்க் கிணறு தோண்டத் திட்டமிட்டிருக்கின்றது என்றும் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

வொஷிங்டன், ஜூன் 3
சர்வதேச விதிகளை மதிக்காது தென்கிழக்கு ஆசியாவின் கடற்பரப்பில் உரிமை கொண்டாட முயற்சிக்கும் சீனாவின் செயலால் பிராந்தியத்தின் அமைதி சீர்குலையும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளது அமெரிக்கா.
சிங்கப்பூரில் நடைபெற்ற 13ஆவது ஆசிய பாதுகாப்பு மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அமெரிக்க பாதுகாப்புத்துறை அமைச்சர் சக் ஹெகல் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
"சீனாவைப் போல அமெரிக்கா ஒருபோதும் சர்வதேச விதிகளைப் புறக்கணித்து குறுக்கு வழி பற்றி சிந்திக்காது. தெற்குச் சீனக் கடற்பகுதியில் எல்லைக்கு உரிமை கொண்டாடும் சீனாவின் நடவடிக்கையால் பிராந்திய அமைதி சீர்குலையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.
சீனாவுடன் இணையத்தள உளவு விவகாரம் குறித்து அமெரிக்கா தொடர்ந்து பிரச்சினை எழுப்பும். ஏனெனில், இது குறித்த பேச்சு, இணையத்தள குற்றம் அதிகரிப்பு மற்றும் அதுபற்றிய தவறான கணிப்புகள் ஆகியவற்றைக் குறைக்க உதவும். பிராந்திய எல்லை உரிமை கோரி மிரட்டுதல் அல்லது படையால் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் எந்த ஒரு நாடாக இருந்தாலும் அமெரிக்கா எதிர்க்கும்," - என்று தெரிவித்துள்ளார். (ற)


## ஓராண்டுக்கு தேர்தல் நடத்தப்படமாட்டாது

### தாய்லாந்து இராணுவ ஆட்சியாளர் அறிவிப்பு

பாங்கொக், ஜூன் 3
தாய்லாந்தில் இன்னமும் ஓராண்டுக்குத் தேர்தலை நடத்த முடியாது என்று தெரிவித்துள்ளார் தற்போதைய இராணுவ ஆட்சியாளர் பிரயுத் சன்- ஓச்சா.
தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் கருத்து வெளியிட்டபோது, அமைதியான சூழல் ஏற்ப போராட்டங்கள் நடத்துவதை அரசியல் கட்சிகள் தவிர்ப் வேண்டும் என்று கேட்டு கொண்டார்.
கடந்த 22ஆம் திகதி தாய்லா தின் ஆட்சியை இராணுவ கைப்பற்றியது. இராணுவ ஆ சிக்கு அந்நாட்டு மன்னரு ஒப்புதல் அளித்துள்ளார். (ற)

## தத்தளித்த சிரிய அகதிகளை மீட்டது இத்தாலிய கடற்படை

ரோம், ஜூன் 3
நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த 300க்கும் அதிகமான சிரிய அகதிகள் இத்தாலி கட்லோரக் காவற் படையினரால் மீட்கப்பட்டுள்ளனர். மீட்கப்பட்ட அனைவரும் தற்போது



சிசிலியில் உள்ள தீவுகளுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.
சிறிய படகில் அதிகளவான சிரிய அகதிகள் தத்தளித்துக் கொண்டிருப்பதாகக் கிடைத்த தகவலை அடுத்தே இத்தாலிய கடற்படையினர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டனர்.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள இத்தாலிய கடற்படை அதிகாரிகள்,
"இன்னமும் ஓரிரு நாள்களி சுமார் மூவாயிரத்து 500க்கு அதிகமானவர்கள் இவ்வா வரக் கூடும் என்று எதிர் பார் கின்றோம்.
கடந்த 5 மாதங்களில் மட்டு இவ்வாறு 43 ஆயிரம் பே அகதிகளாக வந்துள்ளனர் என்று தெரிவித்துள்ளனர். (ற)

## உனக்கு 113 எனக்கு 70

### அசத்தும் சீனத் தம்பதிகள்



பீஜிங், ஜூன் 3
சீனாவில் 113 வயது மூதாட்டி ஒருவரும் 70 வயது முதியவர் ஒருவரும் திருமண பந்தத்தில் இணைந்துள்ளனர்.
ஜின்ஜியாங் பிராந்தியத்தில் பாச்சு கவுன்டியில் இருக்கும் முதியோர் இல்லத்தில் 70 வயதான அசாத்திஹானும், 113 வயதான அய்மதியும் கடந்த டிசெம்பர் மாதம் சந்தித்துள்ளனர்.
அதன் பின்னர் இருவரும் 6 மாதமாக ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு வாழ ஆரம்பித்தனர். ஆனாலும் இப்போதுதான் முறைப்படி திருமணம் செய்து கொண்டுள்ளனர்.
திருமணத்தின் பின்னர் தங்களது திருமண புகைப்படங்களை சீன பத்திரிகைகளுக்கு விநியோகித்துள்ள அசாத்ஹான் இது குறித்துத் தெரிவிக்கையில்,
"நாங்கள் இருவரும் மகிழ்ச்சியாக இருக்கிறோம். என்னை விட வயதில் மூத்த பெண்ணை திருமணம் செய்து கொண்டதற்காக கவலைப்படவில்லை. சாப்பாட்டின் போது எனக்கு கறி சமைத்து போட்டு, என்னை அன்பாகக் கவனித்து கொள்கிறாள். ஒருவரை ஒருவர் கவனித்துக் கொள்வதால், இன்றும் நாங்கள் இளமையாக இருப்பதாக நினைக்கிறோம்" - என்று தெரிவித்துள்ளார். (ற)

## மெக்சிக்கோவில் நிலநடுக்கம்

வொஷிங்டன், ஜூன் 3
மெக்சிக்கோ கடற்பகுதியில் சக்தி வாய்ந்த பூகம்பம் உணரப்பட்டுள்ளது. ரிச்டர் அளவுகோலில் 6.2 என பதிவாகியுள்ள இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதங்கள் குறித்த தகவல்கள் வெளியாகவில்லை. (ற)



நைஜீரியாவில் 4 கிராமங்கள் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 14 பேர் உயிரிழந்துள்ளனர். இராணுவ உடையணிந்து வந்த தீவிரவாதிகளே தாக்குதல் நடத்தியுள்ளனர். கிராமங்களுக்குள் புகுந்தவர்கள் கண்ணில் தென்பட்டவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது. நைஜீரியாவின் வடக்குப் பகுதியில் இஸ்லாமிய அரசை நிறுவும் நோக்கில் அரசுக்கு எதிராகப் போராடி வரும் போகோ ஹராம் தீவிரவாதிகளால் இந்த ஆண்டில் மட்டும் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். (ற)

## சேர்ச்சிலின் மகள் காலமானார்

லண்டன், ஜூன் 3
பிரிட்டனின் முன்னாள் பிர மர் சேர் வின்ஸ்டன் சேர்ச் லின் மகளான மேரி சோமெ நேற்றுமுன்தினம் காலமான சேர்ச்சில் - கிளெமெண் டைன் சேர்ச்சில் தம்பதியரி 5 ஆவது மகளான இ இரண்டாம் உலகப் போரி போது 17 வயதுடையவர் இருந்தார். கடந்த சில நாள் ளாக உடல் நலம் பாதிக்கப் டிருந்த மேரி சோமஸ் தனது ஆவது வயதில் நேற்றுமு தினம் காலமானார். (



மேரி சோமெ

## விமான விபத்தில் 7 பேர் சாவு

நியூயோர்க், ஜூன் 3
அமெரிக்காவில் சிறிய ரக ஜெட் விமானமொன்று விபத்துக்குள்ளானதில் 7 பேர் உயிரிழந்துள்ளனர்.
மாசசூஸட்ஸ் மாகாண தலைநகர் பாஸ்டனில் ஹன்ஸ்கோம் விமான நிலையத்திலிருந்து பறப்பை மேற்கொண்ட தனியாருக்குச் சொந்தமான சிறிய ரக விமானமும் ஒன்றே விபத்துக்குள்ளாகியுள்ளது.
விபத்து தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (ற)



கட்டாருக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்ட ஜேர்மன் வெளியுறவுத்துறை அமைச்சர் பிராங்க் வால்ட்டர் ஸ்டெய்ன்மியர் தலைநகர் தோகாவில் அந்நாட்டின் வெளியுறவுத் துறை அமைச்சர் கலீத் அல் அட்டியாவைச் சந்தித்தார். (ற)

## 100 வயதுப் பிச்சைக்காரரை கொண்டாடும் பல்கேரியர்கள்

சோபியா, ஜூன் 3
100 வயதாகும் டோப்ரி டோப்ரேவ் என்ற பிச்சைக்காரரை பல்கேரிய மக்கள் துறவியாகக் கொண்டாடி வருகின்றனர்.
அவர் தமக்குக் கிடைக்கும் சொற்ப வருமானத்திலும் செய்யும் தானமே அவர் இவ்வாறு போற்றப்படுவதற்குக் காரணமாக அமைந்துள்ளது.
கடந்த ஏழு வருடங்களுக்கு முன்னர் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்த பல்கேரியா இன்னமும் பொருளாதார மேம்பாடின்றி ஏழை நாடாகவே



டோப்ரி டோப்ரேவ்

இருந்து வருகிறது. இங்கு சராசரி மாத வருமானம் 420 யூரோக்கள் என்ற அளவிலேயே உள்ளது.
இந்தநிலையில், 100 வயதாகும் டோப்ரி டோப்ரேவ் என்பவர் கடந்த 20 வருடங்களுக்கும் மேலாக பல்கேரியாவின் தலைநகரான சோபியாவில் பிச்சை எடுத்து வாழ்ந்து வருகின்றார். இவர் துறவி போன்ற எளிய வாழ்க்கை நடத்திக் கொண்டு தனக்கு மற்றவர்கள் அளிக்கும் பணத்தை எல்லாம் அங்குள்ள அலெக்சாண்டர் நெவ்ஸ்கி தேவாலயத்திற்குக் கொடுத்துள்ளார்.
2009ஆம் ஆண்டு அந்த நாட்டு நாணயத்தின் மதிப்பின்படி 35,700 லெவாவை (24,900 அமெரிக்க டாலர்கள்) அவர் நன்கொடையாக வழங்கியுள்ளார் என்று அந்தத் தேவாலயத்தின் அறங்காவலர்கள் குழுவி தலைவர் பிஷப் டிகோன் கூ கின்றார்.
அதுபோன்று 2,500 முத 10,000 யூரோவரை டோப்ரி த களுக்கும் நன்கொடை அ துள்ளார் என்று பல மடாலய கள் தெரிவிக்கின்றன. வறுமை மற்றும் ஊழலால் சூறையா பட்டுவரும் அந்த நாட்டில் தன குக் கிடைக்கும் பணத்தை த மம் செய்யும் டோப்ரியை அ குள்ள மக்கள் ஒரு துறவி கவே தற்போது கொண்ட வருகின்றனர். (



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: அவசரமாக எதையும் செய்ய தோன்றும். துணிச்சலுடன் எதிலும் ஈடுபடுவீர்கள். சாமர்த்தியமான பேச்சின் மூலம் எல்லா அனுகூலமும் கிடைக்கப்பெறும். ஆனால் வீண்வாக்குவாதத்தால் பகையை வளர்த்துக் கொள்ளாமல் இருப்பது நல்லது.

**இடபம்**: வாடிக்கையாளர்களிடம் சாதுரியமாகப்பேச வேண்டி இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு துணிச்சல் அதிகரிக்கும். எதைப் பற்றியும் கவலைப்படாமல் வேலையில் வேகம் காட்டுவீர்கள். முக்கிய முடிவுகள் எடுக்கும் போது அவசரப்படாமல் இருப்பது நல்லது.

**மிதுனம்**: நிதானமாகச் செய்தால் வெற்றி நிச்சயம். வீண் வாக்குவாதத்தைத் தவிர்ப்பது நல்லது. மற்றவர்களிடம் நிதானமாகப் பேசுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு பணவரவு குறையலாம். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சலும் கூடுதலாக பணிச் சுமையும் இருக்கக்கூடும்.

**கடகம்**: குடும்பத்தில் இருப்பவர்களுடன் அனுசரித்து செல்வது நல்லது. பிள்ளைகளிடம் அன்பாக நடந்து கொள்வது நன்மையைத் தரும். வாழ்க்கை துணைக்கு மருத்துவ செலவு செய்ய நேரலாம். வீட்டில் உள்ள பொருள்களை கவனமாக வைப்பது அவசியம்.

**சிங்கம்**: மனதுக்கு பிடித்த விசேட நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எல்லோரிடமும் அனுசரித்துச் செல்வது நல்லது. உயர் பதவிக்கான உதவிகள் கிடைக்கும். இடமாற்றம் உண்டாகலாம். திடீர் கோபம் வரும். வீண் செலவும், அலைச்சலும் உண்டாகலாம். எதிர்பாராத இடமாற்றம் ஏற்படலாம்.

**கன்னி**: தேவையற்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகலாம். எனவே எதிலும் மிகவும் கவனத்துடன் ஈடுபடுவது நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பான பணிகளில் தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அடுத்தவர்களுக்கான பொறுப்புகளை ஏற்கும் போது எச்சரிக்கை தேவை.

**துலாம்**: வாழ்க்கை துணையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. மற்றவர்களுக்கு உதவி செய்யப்போய் தேவையற்ற குற்றச்சாட்டுக்கு ஆள்க நேரலாம். கவனம் தேவை. மாணவர்களுக்கு கல்வியில் எதிர்பாராத தடை, தாமதம் உண்டாகலாம்.

**விருச்சிகம்**: தொழில் வியாபாரத்தில் இருந்த வேகம் குறையும். தொழில் தொடர்பான புதிய முயற்சிகள் சாதகமான பலன் தரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் உழைப்புக்கு ஏற்ற பலனைப் பெறுவார்கள். சுபகாரிய நிகழ்ச்சியில் கலந்துகொள்ள நேரலாம்.

**தனுசு**: மற்றவர்களுக்கு உதவி செய்யும்போது கவனம் தேவை. திடீர் கோபம் ஏற்படலாம் குறைத்துக்கொள்வது நல்லது. கோபத்தைக் கட்டுப்படுத்திக்கொள்வது நன்மை தரும். பணவரத்து திருப்தி தரும். தொழிலில் எல்லாவிதமான முன்னேற்றம் உண்டாகும்.

**மகரம்**: மனதில் இருந்த குழப்பம் நீங்கும். புதிய நண்பர்களின் நட்பு கிடைக்கும். நீண்ட தூரத்தில் இருந்து வரும் தகவல்கள் நல்ல தகவல்களாக இருக்கும். தொழில் வியாபாரம் முன்னேற்றம் அடையும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு செயற்றிறன் அதிகரிக்கும்.

**கும்பம்**: குடும்ப உறுப்பினர்கள் மத்தியில் மகிழ்ச்சி நிலவும். மனக்குழப்பம் நீங்கி தைரியம் உண்டாகும். தொலைதூர தகவல்கள் நல்ல தகவல்களாக வரும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் காண்பீர்கள். கடினமான காரியங்களையும் எளிதாகச் செய்து முடிப்பீர்கள்.

**மீனம்**: மற்றவர்களின் கருத்துக்கு மாற்று கருத்துக் கூறாமல் அனுசரித்துச் செல்வது நல்லது. தொழில் தொடர்பான காரியங்களில் வெற்றி உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு சக ஊழியர்களின் உதவிகள் கிடைக்கும்.

## நாளை

**வைகாசி-21 புதன்கிழமை | 04.06.2014**

திதி: ஷஷ்டி மு.ப.09.25 வரை
நட்சத்திரம்: ஆயிலியம்
கா.06.46 வரை

சுபநேரம்: 04.22-05,52 வரை
இராகுகாலம்: 11.52-01.22 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....




### செயல்முறை வேதாந்தம்-1

வேதாந்த தத்துவத்தின் செயல்முறைப் பகுதியைப் பற்றிச் சில வார்த்தைகள் பேசும்படி என்னை நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். நான் முன்பே கூறியது போல, இந்தக் கருத்துக்கள் மிகவும் சிறப்பானவைதான், ஆனால் அவற்றை எப்படிச் செயல்முறையில்பயன்படுத்துவது? செயல்முறையில் பயன்படுத்த முடியாத கருத்துக்கள் எல்லாம்வெறும் அறிவு வளர்ச்சிக்கான பயிற்சியாக இருக்குமேதவிர,வேறுவகையான சிறப்பு அவற்றுக்கு இருக்காது. வேதாந்தம் என்ற சமயம் முற்றிலும் செயல்முறையைப் பற்றியதாகத்தான் உள்ளது. நமது வாழ்க்கையின் எல்லாத்துறைகளிலும் அதை நாம் பயன்படுத்த வேண்டும். அது மட்டுமன்றி, சமயத்துக்கும் உலக வாழ்க்கைக்கும் இடையில் கற்பிக்கப்பட்ட போலி வேறுபாடுகள் எல்லாம் மறைய வேண்டும் ஏனெனில் வேதாந்தம் ஒருமைப்பாட்டையும் எல்லாம் ஒரே உயிர் என்ற தத்துவத்தையும்தான் உபதேசிக்கிறது.

சமயக் கொள்கைகள் எல்லாம் நமது வாழ்க்கைத்துறை முழுவதையும் பற்றியதாக இருக்க வேண்டும். அவை நமது எண்ணங்களை எல்லாம் ஊடுருவி நிற்க வேண்டும், நம்முடைய செயல்முறையில் மிக அதிகமாக அவை இருந்தாக வேண்டும். நடைமுறைப் போக்கைப் பற்றிப் போகப் போக உங்களுக்கு நான் விரிவாகச் சொல்வேன். அதற்கு அடிப்படை போலத்தான் இந்தச் சொற்பொழிவு அமைகிறது. ஆகவே, நாம் முதலில் கொள்கைகளை ஆராய்வோம். பிறகு அவை எப்படி காட்டுக் குகைகளிலிருந்து பரபரப்பான தெருக்களுக்கும் நகரங்களுக்கும் கொண்டு வரப்பட்டன என்பதைத் தெரிந்து கொள்வோம். இவற்றில் நாம் காணும் சிறப்பு என்னவென்றால் இந்தக் கருத்துக்கள் எல்லாம் காட்டைந்து ஓய்வாகத் தவம் செய்ததால் கிடைத்தவை அல்ல என்பதே. மாறாக, பரபரப்பான வாழ்க்கை நடத்துபவர்கள் என்று நாம் நினைக்கும் மனிதர்களிடமிருந்தும் மன்னர்களிடமிருந்துமே இவை தோன்றியிருக்கின்றன.

## மனிதர்களை விண்வெளிக்கு கொண்டு செல்லும் நவீன விண்ணோடம்



கலிபோர்னியாவை தளமாகக் கொண்டியங்கும் ஸ்பேஸ்- எக்ஸ் என்ற நிறுவனம், மீளப் பயன்படுத்தக்கூடிய விண்ணோடம் ஒன்றைத் தயாரித்துள்ளது. சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு மனிதர்களை கொண்டு செல்லக்கூடிய இந்த விண்ணோடம், அங்கிருந்து திரும்பி வந்து பூமியில் எந்தவொரு இடத்திலும் மீண்டும் தரையிறங்கக்கூடியது என்று அதன் தயாரிப்பாளர்கள் கூறுகின்றனர்.

ட்ராகன் வி-2 என்ற இந்த விண்ணோடம் தரையிறங்குவதற்கு ஓடுபாதை எதுவும் தேவையில்லை. பக்கவாட்டில் பொருத்தப்பட்ட உந்துகருவிகளுடன் தரையிறங்குவதற்கான கால்களும் இதற்கு உண்டு.

ஏற்கனவே விண்வெளிக்கு பொருள்களைக் கொண்டு செல்வதற்காக பயன்படுத்தப்பட்ட விண்ணோடத்தின் நவீன ரகமே இந்த ட்ராகன் வி-2. விண்வெளி வீரர்கள் 7 பேரை இந்த வாகனத்தில் கொண்டு செல்லமுடியும். நாசா மூன்று ஆண்டுகளுக்கு முன்னர், அதன் விண்ணோட அணிக்கு ஓய்வுகொடுத்திருந்தது. விண்வெளிவீரர்களை விண்வெளிக்கு கொண்டுசேர்ப்பதில் அந்த நிறுவனம் ரஷ்ய விண்ணோடத்திலேயே தங்கியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் போட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவவைக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 9 | | 4 | 2 | | | | 6 |
| | 7 | | 3 | | 5 | | | |
| | | 4 | | | 9 | | 3 | |
| 9 | 5 | | | 6 | 4 | | | |
| 4 | 3 | | | 9 | | | 5 | 7 |
| | | | 2 | 5 | | | 4 | 9 |
| | 8 | | 1 | | | 7 | | |
| | | | 5 | | 2 | | 6 | |
| 6 | | | | 3 | 7 | | 8 | 4 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 9 | 4 | 1 | 8 | 7 | 5 | 6 | 2 |
| 8 | 6 | 7 | 2 | 9 | 5 | 1 | 3 | 4 |
| 1 | 5 | 2 | 6 | 3 | 4 | 7 | 9 | 8 |
| 5 | 7 | 3 | 4 | 2 | 9 | 8 | 1 | 6 |
| 2 | 1 | 8 | 3 | 7 | 6 | 4 | 5 | 9 |
| 9 | 4 | 6 | 8 | 5 | 1 | 3 | 2 | 7 |
| 4 | 2 | 5 | 7 | 6 | 3 | 9 | 8 | 1 |
| 7 | 8 | 9 | 5 | 1 | 2 | 6 | 4 | 3 |
| 6 | 3 | 1 | 9 | 4 | 8 | 2 | 7 | 5 |

## சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம்



புலோலி தெற்கு, சாரையடியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சிவகுமாரன் சமாதான நீதிவானாகப் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி ஜே.கஜநிதிபாலன் முன்னிலையில் அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். பருத்தித்துறை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தராக இவர் பணி யாற்றி வருகிறார். (ஒ-173)

# சர்வதேசப் பாடசாலைகளில் மூன்று பாடங்கள் கட்டாயம்

## கல்வி அமைச்சு தீர்மானம்

கொழும்பு, ஜூன் 3
அடுத்த ஆண்டிலிருந்துஅனைத்துச் சர்வதேச பாடசாலைகளிலும் தாய்மொழி, சமயம், வரலாறு ஆகிய பாடங்கள் கட்டாயம் கற்பிக்கப்பட வேண்டுமென கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.
சர்வதேசப் பாடசாலைகளில் கல்வி கற்போரில் அதிகளவானோர் இலங்கைப் பிள்ளைகளே என்பதால் அவர்களுக்கு தாய் மொழி, சமயம், வரலாறு ஆகிய பாடங்களில் தெளிவான அறிவு ஞானம் இருக்க வேண்டும் என்பதால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.
இலங்கையில் தற்போது அறுநூறு வரையான சர்வதேசப் பாடசாலைகள் இயங்கி வருகின்றன. அவை அனைத்தும் முதலீட்டுச் சபைகளின் கீழாகவோ அல்லது தனியார் நிறுவனங்களின் கீழாகவோ பதிவு செய்யப்பட்டுள்ள பாடசாலைகளாகும் என்று கல்வி அமைச்சர் தெரிவித்தார்.
இந்தப் பாடசாலைகளின் தரம் சம்பந்தமாக கடந்த காலத்தில் பலதரப்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.
அவற்றைக் கவனத்தில்கொண்டு சர்வதேசப் பாடசாலைகளைக் கண்காணிப்பதற்குக் கல்வி அமைச்சில் தனியான பிரிவு ஒன்று நிறுவப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-22)




ஈரவிழிகளுடன்
பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி
கனகம்மா ஆறுமுகம்
(இளைப்பாறிய ஆசிரியர்)
தோற்றம் 30*01*1931 மறைவு 25*05*2004

பாசத்தின் உறைவிடமாய் எம்மை வளர்த்த அம்மாவே
பத்தாண்டுகள் சென்றதம்மா
உங்கள் அன்புமுகம் கண்டு அம்மா
உங்களைப் பார்க்க எங்கள் மனம் ஏங்குகின்றது அம்மா
உங்கள் பாசத்திற்காக தவித்து நிற்கின்றோம் அம்மா
பத்தாண்டுகள் சென்றாலும் அம்மா
அன்பாய் அரவணைத்து நீங்கள் தந்தபாசம் அம்மா
இப்பாரினில் நாம் வாழும் வரை அம்மா
என்றுமே அழியாது எம் நெஞ்சங்களில் அம்மா
என்றுமே நிலைத்திருக்கும் அம்மா
நீங்கள் எம்குல தெய்வமாக அம்மா
எம்முடன் வாழ்ந்து கொண்டிருப்பீர்கள் அம்மா
ஈடற்ற உங்கள் இழப்பு அம்மா
ஆறாது எம்துயரம் அம்மா
மாறாது உங்கள் நினைவுகள் அம்மா
என்றுமே எம்முடன் நிறைந்து இருக்கும் அம்மா! அம்மா! அம்மா!

ஜெயபதி, தாமோதரம் பிள்ளை வீதி, சாவகச்சேரி.
ஜெயபதி குடும்பம்
(சி/13965)(4.3.6)

## யானைப் பாதுகாப்புக்கு முதலாவது மையம்

### இந்த மாதம் திறப்பு





கொழும்பு, ஜூன் 3
யானைகளுக்குப் புகலிடம் அளித்து அவற்றைப் பாதுகாக்கும் முதலாவது மையம் இந்த மாதம் திறந்து வைக்கப்படும் என்றுவனஜீவராசிகள்திணைக்களம் தெரிவித்துள்ளது.
யானைகளைப் பாதுகாக்கும் இந்த மையத்தின் நிர்மாணப் பணிகள் தற்போது ஹொரவப்பொத்தானை பிரதேசத்தில் நடைபெற்று வருகின்றன என்று திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.
1000 ஹெக்ரெயர்கள் விஸ்தீரணம் கொண்ட நிலப்பிரதேசமொன்றில் நிர்மாணிக்கப்பட்டு வரும் இந்த மையத்தில் யானைகளுக்கு அவசியமான உணவு மற்றும் தண்ணீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.
இவ்வாறு நாட்டின் வெவ்வேறு பிரதேசங்களில் நான்கு யானைகள் பாதுகாப்பு மையங்களை நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.
யானைகளால் மனிதர்களுக்கு ஏற்படுத்தப்படும் இடையூறுகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த மையம் நிறுவப்படவுள்ளது என்று திணைக்களம் அறிவித்துள்ளது. (ச-22)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

## அமரர் அகஸ்ரின் வேதானந்தம்

(A.V.ஆனந்தன்)



தோற்றம் 23.08.1944 மறைவு 03.06.2013

(ஈழத்தின் புகழ்பூத்த சிற்பக்கலைஞரும், பிரபல தொழிலதிபரும், தெல்லிப்பழை, ஆனந்தி & கோ நிறுவனத்தின் உரிமையாளரும், தெல்லிப்பழை சிற்பாலயத்தின் நிறுவுநரும், யாழ். திருமறைக் கலாமன்றத்தின் மூத்த உறுப்பினரும், மல்லாகம்/தெல்லிப்பழை லயன்ஸ் கழகத்தின் முன்னாள் தலைவரும், சமூக சேவகரும்)

ஆண்டொன்று ஆனாலும் ஆறவில்லை நம் துயரம்
ஈரவிழிகளிலே காயாத கண்ணீர் துளிகளாய்
உங்களின் அன்பு முகம் என்றும் - எம் மனதில் நீங்காத நிழல்களாய்
சிறகொடிந்த பறவைபோல் சிதறியே தவிக்கின்றோம்
நிலையில்லா இவ்வுலகில் நிலைத்துவிட்ட உம் அன்பிற்காய்
கலைக்காக தன்னை அர்ப்பணித்த அற்புதச் சிற்பியே!
உளிகொண்டு உயிர் தந்த உம் வரவிற்காய் ஏங்குகின்றன உம் சிற்பங்கள்
ஆண்டுகள் கடந்தாலும் - உங்களின் புகழும் கலைப்படைப்புக்களும் - என்றுமே
காலத்தால் அழியாத கலைச் சின்னங்களே.
பண்பின் சிகரமாய், பாசத்தின் உறைவிடமாய் உழைப்பில் உயர்ந்தவனாய்
எங்களுக்கெல்லாம் நல்ல வழிகாட்டியாய் திகழ்ந்தீரே
எங்கள் விழிநீரும் ஓயவில்லை உங்களின் நினைவுகளில்.......

உங்களின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்,
என்றும் நீங்கா நினைவில் - குடும்பத்தினர்.
"சிற்பாலயம்" துர்க்காபுரம், தெல்லிப்பழை.

(C/13939) (7.6.3)

# மரண அறிவித்தல்



## திருமதி இந்திராவதி (கலா) வசந்தகுமார்

கேணியடி, குப்பிளானைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இந்திராவதி (கலா) வசந்தகுமார் நேற்று (02.06.2014) திங்கட்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் குப்பிளானைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா (ஆழிஎல வர்த்தகர்) மற்றும் சிதம்பரம் (நல்லபிள்ளை) தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான நயினாதீவைச் சேர்ந்த பரமலிங்கம்-இராசரத்தினம் தம்பதியரின் பாசமிகு மருமகளும், பரமலிங்கம் வசந்தகுமாரின் (ஓய்வுநிலை - கிராம உத்தியோகத்தரும், நல்லூர் பிரதேசசபை தவிசாளரும்) பாசமிகு மனைவியும், வஜிந் (உயிரியல் ஆசிரியர், விஸ்வமடு மகா வித்தியாலயம்), நிருஷா (கனடா), வசந்துசா (ஆசிரியர், பற்றிமா றோ.க.த.க.பாடசாலை, உருத்திரபுரம்), வனோசன், வவீசன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயபிரகாஷின் (கனடா) பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற கனகசபை மற்றும் பரமேஸ்வரி (லண்டன்), நகுலேஸ்வரி, காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் அருணகிரிநாதன் (பிரான்ஸ்), கிருஸ்ணவேணி, பரமகுருநாதன், சரோஜினிதேவி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.06.2014) செவ்வாய்க்கிழமை மு.ப.11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ப.வசந்தகுமார் - கணவர்
(நல்லூர் பிரதேசசபை தவிசாளர், ஓய்வுநிலை கிராம உத்தியோகத்தர்)

இராமகிருஸ்ண பாடசாலை ஒழுங்கை,
கோயில் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(48695)
(12.3.6)

# தேசியக் கல்வியியற் கல்லூரி நடத்தும் கல்விக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரி நடத்தும் மாபெரும் கல்விக் கண்காட்சி நாளை மறுதினம் வியாழக்கிழமை முதல் 3 தினங்கள் தேசிய கல்வியியற்கல்லூரியில் இடம்பெறவுள்ளது. கல்லூரியின் பீடாதிபதி ச.அமிர்தலிங்கம் தலைமையில் இடம்பெறும் கல்விக் கண்காட்சியில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புக்கள் பீடாதிபதி பேராசிரியர் ச.சத்தியசீலனும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக கல்வியியற்றுறை முதுநிலை விரிவுரையாளர் த.கலாமணி, யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட ஆலோசனைச் சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி லயன் வை.தியாகராசா ஆகியோரும் கலந்து கொள்வர்.

கண்காட்சி முன்பள்ளி ஆரம்பக் கல்வி இடைநிலைக்கல்வி மற்றும் ஆசிரிய வாண்மைத்துவ அம்சங்களை உள்ளடக்கியதாக அமையவுள்ளது. முன்பள்ளி மகிழ்ச்சிகரமான கற்பித்தல் செயலொழுங்கு, பொழுதுபோக்கு அம்சங்கள், சிறுவர்களுக்கான விளையாட்டுக்கள், நாடக ஆற்றுகைகள் என்பனவும்-

ஆரம்பக் கல்வியில் தமிழ், கணிதம், சுற்றாடல் சார் செயற்பாடுகள், நாடக ஆற்றுகைகள், சித்திரம், ஆக்கச் செயற்பாடுகள், விசேட கல்விச் செயற்பாடுகள் என்பனவும் -

இடை நிலைக் கல்வியில் தமிழ், கணிதம், விஞ்ஞானம், இசை, நடனம், நாடகமும் அரங்கியலும், விளையாட்டு விஞ்ஞானம், ஆங்கிலம், சித்திரம், சாரணியம், இடர் முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் என்பனவும்-

ஆசிரிய வாண்மைத்துவம் என்பதில் உளவியல், ஆலோசனை வழிகாட்டல், சமூகவியல், கல்வித் தத்துவம், பாடசாலை முகாமைத்துவம், கற்பித்தல் சாதனங்கள் என்பனவும் மற்றும் பல விடயங்கள் தொடர்பாகவும் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படவுள்ளன. இந்தக் கண்காட்சியைப் பார்வையிட விரும்பும் பாடசாலைகள், நிர்வாக ஒழுங்கமைப்புக்காக முன்கூட்டியே அதிபர்கள் ஊடாக பதிவு செய்து கொள்ளுமாறு பீடாதிபதி ச.அமிர்தலிங்கம் கேட்டுள்ளார். (வ-108)

# மரண அறிவித்தல்

## திருமதி சிவகாம்பிகை பஞ்சலிங்கம்



சுன்னாகம் முத்துக்கிருஷ்ணர் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவகாம்பிகை பஞ்சலிங்கம் 30.05.2014 வெள்ளிக்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா பஞ்சலிங்கம் (ஓய்வுபெற்ற கடற்படை அதிகாரி) அவர்களின் அன்பு மனைவியும், சுன்னாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பூதப்பிள்ளை- நாகம்மா தம்பதியினரின் பாசமிகு மகளும், மானிப்பாய் டச்சு வீதியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான செல்லையா-தங்கம்மா தம்பதியினரின் மூத்த மருமகளும், கமலேந்திரன், விஜிஜேந்திரா, சுகந்தி, மாலதி, அம்பிகை ஆகியோரின் பாசமிகு தாயாரும், அருள்ராசா, சிவா, குமரன், புவனேஸ்வரி, மயூரி ஆகியோரின் அருமை மாமியாரும், காலஞ்சென்றவர்களான மகாதேவன், அன்னதேவன், மகாலிங்கம், சிவலிங்கம் மற்றும் சற்குணலிங்கம், ஐயுகம், தருமலிங்கம், மகாதேவன், ராஜதேவி ஆகியோரின் அருமைச் சகோதரியும், நாகராசா, இராசலிங்கம், அருமைத்துரை, இராசலெட்சுமி, தவமணிதேவி, பூமலர், பாக்கியலெட்சுமி ஆகியோரின் அருமை மைத்துனியும், கஜப்பிரியன், வத்சலாயினி, நிஷாந்தன், லவாஞ்சலி, நிஷாஞ்சலி, ஆரணி, ஆதவன், நிவேதா, கஜந்தன், நிகித்தா, மதிப்பிரதயன், துரன்யா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.06.2014) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சுன்னாகம் கொதியாலடி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


(48693)
(7.6.3)

முத்துக்கிருஷ்ணர் வீதி,
சுன்னாகம்.
T.P : 077 374 5832

தகவல் :
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி இராசம்மா சபாரத்தினம்



நீர்வேலி வடக்கு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா சபாரத்தினம் 01.06.2014 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சபாரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னப்பு - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை, சின்னத்துரை, வைத்திலிங்கம், தங்கம்மா, செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராசதுரை (உரிமையாளர் - அற்புதவிநாயகர் மரக்காலை), சண்முகலிங்கம், பாலசுந்தரம், மனோன்மணி, அன்னலட்சுமி (பிரான்ஸ்), அருந்தவமணி, சிவகுருநாதன் (பிரான்ஸ்), குணபாலசிங்கம், காலஞ்சென்ற பாலகிருஷ்ணன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற அருந்தவநாதன் மற்றும் கயிலைநாதன் (பிரான்ஸ்), துரைசிங்கம், நீலாம்பிகை, சீதாலட்சுமி, கமலேஸ்வரி, இந்துமதி (பிரான்ஸ்), அன்னலட்சுமி, தயாழினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், சசீலா - சுவேந்திரன், சுகிந்தன் - விஜிதா, சுபேஜினி - விஜயகுமாரன், தசிந்தன் - ரேகா, தாரணி - சந்துரு, மயூரன் - தீபா, தர்சா, மதன்ராஜ் - துவாரகா, மதனியா - சிவராமலிங்கம், மர்சிகா - முருகானந்தன், மதனரூபன், யசோதா - சேரழகன், மகிந்தன் - தீபா, சகிந்தன் - துளசிதா, வினோதா, ரமணன் - நிந்துஜா, யதீஸ் - சிவகௌரி, வசந், சுபேர்தன் - சாரகா, காயத்திரி - நிரஞ்சன், சுரேஸ்காந்தன், சுதர்சன், நதலி - இளங்கீரன், லக்கியா, நிலானி, ஜெயந்தா - ஜெகதீஸ்வரன், திவ்வியா, திவ்வியன், திவ்வியாபாலா, திருஷா ஆகியோரின் பேர்த்தியும், மதுசன், யானுஜன், சரண்ணியா, சாருகா, ஜனனி, அக்சயன், அமிழ்தன், தீபிகா, அர்ச்சனா, அபிநயா, நிக்ஷன், நிதுனன், நிசோதன், ராகவி, ராகவன், ராதுஜன், ராகுல், அகிஷன், அகிலாஷ், கர்ணிகா, கயானிகா, கயானன், நிலான், நீலவன், அதர்வன், ஜெனிஸ்கா, வினித், வரூண், நேத்திரா, கபிலன், கனனியா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.06.2014) செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நீர்வேலி சீயாக்காடு இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

**021 321 0047/021 753 8720/077 235 6281**

(48690)(12.3.6)

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கம்மா முத்துக்குமாரு



புங்குடுதீவு,7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா முத்துக்குமாரு 01.06.2014 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துக்குமாருவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொன்னையா-இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும்,காலஞ்சென்றவர்களான குமாரசாமி-சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், யோகராணி,குமாரகுலசிங்கம்,தர்மகுலசிங்கம், நந்தகுலசிங்கம்,நித்தியகுலசிங்கம்,கலைராணி,வசந்தகுலசிங்கம் ஆகியோரின் பாசமிகு தாயாரும், இராசலிங்கம், யோகேஸ்வரி, காலஞ்சென்ற சகுந்தலாதேவி மற்றும் சந்திரவதனி, யோகநாதன், தர்சினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான அமிர்தம்மா, திருமேனிப்பிள்ளை, மனோன்மணி மற்றும் குமாரசாமி, தம்பிராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான நல்லம்மா, அமிர்தம்மா மற்றும் ஞானம்மா, மாசிலாமணி, குணரட்ணம் ஆகியோரின் மைத்துனியும், அஜந்தன், கஜந்தன், லிகிர்தன்,தர்சிகா,சகிந்தன், நிரோஜன், நிசாலினி, நிரோஜா, கஜிதா, ரமியா, அக்ஷானா, அபிஷேக், அபிஷனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.06.2014) செவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கேரதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஊரதீவு,புங்குடுதீவு-07 (48690)(5.6) தகவல்: குடும்பத்தினர்.





## செயலமர்வு

தென்மராட்சி, ஜுன் 3

விளைவுசார் மற்றும் இலக்கு நோக்கிய திட்டமிடல் தொடர்பான செயலமர்வு நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் தென்மராட்சி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேசத்தில் பொருத்தமான பொறுப்பு வாய்ந்த துறைகள் மற்றும் குறிகாட்டிகள் ஆகியவை தொடர்பாக ஆராயப்பட வேண்டியிருப்பதுடன் அவற்றினை முன்னுரிமைப்படுத்தவும் செயலமர்வில் ஆராயப்படவுள்ளது.

இந்தச் செயலமர்வில் திணைக்களத் தலைவர் அல்லது அவரது பிரதிநிதியை கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜுன் 3

யாழ்.பல்கலைக்கழகம் நடத்தும் மனைப் பொருளியல் தொடர்பான கண்காட்சி நாளையும், நாளை மறுதினமும் யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் மனைப் பொருளியல் நிர்வாகம், மனித வள விருத்தி, புடைவையும் ஆடைத் தயாரிப்பு, உணவுப் போசனையும், மனைப் பொருள் தொடர்பான தொழில் வழிகாட்டல் என்பன தொடர்பான கண்காட்சிகள் இடம்பெறவுள்ளன. (வ-108)

## நயினாதீவில் கலந்துரையாடல்

நயினாதீவில் இன்று செவ்வாய்க்கிழமை பௌத்த விகாரையிலும் நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்திலும் கலந்துரையாடல்கள் நடைபெறவுள்ளன.

பொசன் பண்டிகை மற்றும் வைகாசி விசாகத்தை முன்னிட்டு அம்பாள் ஆலய உற்சவம் ஆகியவற்றுக்கு தென் பகுதியில் இருந்தும் யாழ்.குடாநாட்டில் இருந்தும் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதனைக் கருத்தில் கொண்டு அந்த நாள்களில் வரும் பக்தர் களின் வசதி கருதி எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயவே இந்தக் கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளன.

வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி தலைமையில் இந்தக் கலந்துரையாடல்களில் பிரதேச சபைத் தவிசாளர் எஸ்.சிவராசா மற் றும் அதிகாரிகள்பலர்கலந்து கொள்வர். (ஒ-7)

## தென்மராட்சி மூதாட்டி கைதடி இல்லத்தில்

தென்மராட்சியைச் சேர்ந்த மூதாட்டி அண்மையில் கைதடி சாந்தி நிலையத்தில்இணைக்கப்பட்டுள்ளார். கணவனை இழந்த இந்த மூதாட்டி தனது அக்காவுடன் அவரது மகளின் பரா மரிப்பில் இருந்து வந்துள்ளார். சகோதரிகளுக்கிடையே அடிக்கடி மோதலைச் சமாளிக்க முடியாத அக்காவின் மகள் அந்தப்பகுதிகிராமஅலுவலருடன் தொடர்பு கொண்டுள்ளார்.

கிராம அலுவலர் பிரதேச செயலர், சமூக சேவைகள் பிரிவு ஆகியோருடன்தொடர்பு கொண்டுகுறித்தமூதாட்டியை சாந்தி நிலையத்தில் இணைப்பதற்கான ஏற்பாடுகளை மேற் கொண்டு அண்மையில் ஒப்படைக்கப்பட்டது. (வ-9)


Regd No.NAL/DS/1220/PH/181

Health Is Wealth

## Van West Clinic & Nursing Home
## வண்மேற்கு வைத்தியசாலை

(அரச அங்கீகாரம் பெற்றுள்ள வைத்தியசாலை)

### 4ஆவது ஆண்டு நிறைவு

எமது வளர்ச்சியின் பாதையில்.....

01) வெளிநோயாளர் பிரிவு (பகல், இரவு)
02) சகல வைத்திய நிபுணர் சேவைகள்
03) அவசர சிகிச்சை பிரிவு (ICU)
04) சகல சத்திர சிகிச்சைகள் (சத்திர சிகிச்சை கூடம்)
05) 24 மணித்தியால வைத்திய சேவைகள்
06) விடுதி வசதிகள் (குறைந்த கட்டணம்)
07) ஸ்கானிங் ECG
08) இரத்த, சலம் ஆய்வுகூட பரிசோதனை
09) பகல் நேர (அம்புலன்ஸ் சேவை)
10) அன்பான தாதியர் சேவை
11) அவசர நோயாளரை வீடு வந்து பார்க்கும் வசதி

விசேட குறிப்பு:

* பயிலுனர் தாதியர்க்கான பயிற்சி நெறிகள் ஆரம்பம் 15.06.2014 மாலை 4 p.m

தொடர்புகள் - 021 222 1697, 021 320 3298,077 978 9210

இல. 60, ஐயனார் கோயில் வீதி, வண்ணார்பண்ணை,
(குட்டாதெரு கே.கே.எஸ் வீதி)
யாழ்ப்பாணம்.

(48694)(7.6.3)

## கண்ணீர் அஞ்சலி



எமது சபையின் தவிசாளர்
ப.வசந்தகுமார்
அவர்களின் அன்பு மனைவி
திருமதி
**இந்திராவதி வசந்தகுமார்**
அவர்களின் மறைவிற்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களை
குடும்பத்தினருக்கு தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆன்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

செயலாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்
நல்லூர் பிரதேசசபை. (48697)

## பெயர் மாற்றம்

புதுக்குடியிருப்பைச் சேர்ந்த **சுகுமார் ஈஸ்வரி** ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து **சுகுமார் விஜயகுமாரி** என பெயர்மாற்றம் செய்வதோடு சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என்று அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

(சி/13904)(5.6) சு..விஜயகுமாரி

## இந்தியாவில் உயர்கல்வி
## STUDY IN INDIA

University Grant Commission, Sri Lanka (UGC) இனால் அங்கிகரிக்கப்பட்ட ANNA UNIVERSITY மற்றும் PERIYAR UNIVERSITY ஆகிய பல்கலைக்கழகங்களில் பட்டதாரியாக வாய்ப்பு.

A/L'S 3 சாதாரண சித்தி + A/L English போதுமானது

**SSM COLLEGE OF ENGINEERING - ANNA UNIVERSITY DEGREE**

- B.E. Computer Science & Engineering
- B.E. Electronics & Communication Engineering
- B.E. Electrical & Electronics Engineering
- B.E. Mechanical Engineering
- B.Tech. Information Technology
- B.Tech. Textile Technology
- B.Tech. Textile Chemistry

சேலம் தமிழ்நாடு

**SSM COLLEGE OF ARTS & SCIENCE - PERIYAR UNIVERSITY DEGREE**

- B.Sc. Computer Science
- B.Sc. Bio-Technology
- B.Sc. Textile & Fashion Designing
- B.Sc. Hotel Management & Catering Science
- B.Sc. Maths / B.C.A. / B.Com. / B.Com (CA), B.B.A. / B.A. English

100க்கு மேற்பட்ட இலங்கை மாணவர்கள் கல்விகற்ற நிறுவனம்.

**International Hostel.**

மேற்கூறிய Degree முடிப்பவர்களுக்கு எதிர்காலத்தில் Canada, Australia, New Zealand, European Union ஆகிய நாடுகளில் PR (Permanent Residency) பெறுவதற்கான வாய்ப்பு.

**Call : 0777 - 767 818** (தமிழில்)
www.ssmce.ac.in

**SIC** No. 01, Veverset Place, Wellawatte, Colombo 06.

## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் குலசேகரம்



கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் உசன் மிருசுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் குலசேகரம் 01.06.2014 ஞாயிற்றுக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் கமலாதேவியின் அன்புக் கணவரும், வினோபாவின் (சிலிங்கோலைப்) பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.06.2014) செவ்வாய்க் கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொடிகாமம் பாலாவித்தாழ் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உசன்,
மிருசுவில்.

(C/13967) (10)

தகவல்:
கு.கமலாதேவி (மனைவி),
கு.வினோபா (மகள்).

## J.C.B விற்பனைக்கு

England model Jcb மலிவான விலையில் உடனடி விற்பனைக்கு விலை பேசித் தீர்மானித்து கொள்ளலாம்

தொடர்பு:
(48706)(10) 077 5384992, 077 4115605

## தவறிவிட்டது

இ.நிரோகுலன் ஆகிய எனது அடையாள அட்டை (852293594V) 05.05.2014 அன்று யாழ். பஸ்தரிப்பிடத்தில் தவறிவிட்டது.

(48704)(10) தொலைபேசி: 077 921 7264

## விற்பனைக்கு

45 நாள்கள் நிரம்பிய **Germen Sherpherd** நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

(48706) தொலைபேசி: 0771141518

## மரண அறிவித்தல்

### இராஜரத்தினம் (சக்திவேல்) புஸ்பராணி (சின்னபிள்ளை) (நாதஸ்வரம்)



ஹற்றலனைப் பிறப்பிடமாவும்.யாழ்ப்பாணம் முத்திரைச் சந்தி நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பராணி - சக்திவேல் நேற்றுமுன்தினம் (01.06.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சக்திவேலின் (நாதஸ்வரம்) அன்பு மனைவியும். சுந்தரராஜன். சுவர்ணியா. ஜனனி ஆகியோரின் தாயாரும். ரூபா.கருணா.பாலன் ஆகியோரின் மாமியும்.துஷாந்திகா (வேம்படி மகளிர் கல்லூரி). நாகதீஷன் (யாழ். இந்துக் கல்லூரி). வர்தினி.தருண். தரன். ரிஷிகேஷன் ஆகியோரின் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுக்கிரியைகள் இன்று (03.06.2014) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு " தேவிவாசா", ஆடியபாதம் வீதி. கொக்குவிலில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்.உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தற்காலிக முகவரி:- ஆடியபாதம் வீதி,
கொக்குவில், யாழ்ப்பாணம்.
T.P 0770872835
நிரந்தர முகவரி:- 1 ஆம் வட்டாரம் நயினாதீவு.

தகவல்: குடும்பத்தினர்.
இ.சுந்தரராஜன்(மகன் -தவில்)

## மரண அறிவித்தல்

### மானார் சிதம்பரநாதன்

(மகுடம் மாஸ்டர்-ஓய்வுபெற்ற அதிபர் கணபதிப்பிள்ளை வித்தியாலயம்-வரணி



கிளிநொச்சி கண்டாவளையைப் பிறப்பிடமாகவும், அல்லாரை வடக்கு கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மானார் சிதம்பரநாதன் 29-05-2014 வியாழக் கிழமை பிரான்சில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் மானார் கதிராசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், வேலுப்பிள்ளை நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற லீலாவதி (லீலா) அவர்களின் அன்புக் கணவரும், யோகேந்திரா(இந்திரன்- பிரான்ஸ்), சந்திரமலர் (சந்திரா- லண்டன்), காலஞ்சென்ற இறஞ்சிதமலர் (இறஞ்சி), ஜெயந்திமலர் (ராசாத்தி-பிரான்ஸ்), யோகசுகிர்தமலர் (சுகி-பிரான்ஸ்), சிறிகஜேந்திரா (சிறி- பிரான்ஸ்), சிறிரவீந்திரா (ரவி- பிரான்ஸ்), சிறிசுவேந்திரா(சுதன்- பிரான்ஸ்), மேகேந்திரா(லதன்- பிரான்ஸ்), பவளேந்திரா (றஞ்சன்- பிரான்ஸ்), சர்மிளா (கீதா- ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற செல்லமுத்து அவர்களின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், அருணாசலம்(ராசா) மற்றும் திருநாவுக்கரசு (கிளி- ஆஸ்திரேலியா), செல்வராசா (செல்வம்- கனடா), கமலாதேவி (கமலா- ஜெர்மனி), சின்னத்தங்கம் (குஞ்சா- ஜெர்மனி), செல்வராணி(ராணி- ஜெர்மனி), காலஞ்சென்ற சிவநேசச்செல்வன் (செல்வம்), குணசேகரன்(குணம்- பிரான்ஸ்), காலஞ்சென்ற புவிராஜசிங்கம்(புவி- பிரான்ஸ்), செந்தூரன் (ஆஸ்திரேலியா), லோமா(லோமதி-பிரான்ஸ்), இன்பராணி (பாமினி- பிரான்ஸ்), சுஜாதா(ராஜி- பிரான்ஸ்), அனுசியா(பிரான்ஸ்), யோகேஸ்வரி(யோகா- பிரான்ஸ்), தாரணி(பிரான்ஸ்), காலஞ்சென்ற சதீஸ்குமார், தீபா(ஆஸ்திரேலியா), பிறிமிளா(பிரான்ஸ்), சங்கீதா(லண்டன்), சீமா(நோர்வே), சோபா, ஆர்த்தி, சிந்துஜா ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் 11.06.2014 பிரான்சில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.


தொடர்புகளுக்கு:
**இந்திரன்** - பிரான்ஸ் : +33626888865,
**ரவி** - பிரான்ஸ் : +33951599980,
**சுதன்** - பிரான்ஸ் : +33601841623,
**சிறி** -பிரான்ஸ் : +33652243776
**ரஞ்சன்** -பிரான்ஸ் : +33778195718
**லதன்** - பிரான்ஸ் : +33652776080

தகவல்:
குடும்பத்தினர்.

(48703)(10)

## மரண அறிவித்தல்

### செல்லையா சங்கரலிங்கம்



ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சங்கரலிங்கம் நேற்று (01.06.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற முத்தையா - மீனாட்சி தம்பதியரின் மருமகனும் யோகாம்பிகையின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிவலிங்கம் அவர்களின் சகோதரனும் காலஞ்சென்ற மகேஸ்வரி அவர்களின் மைத்துனரும். சச்சிதானந்தசிவம். ஜெகதாம்பிகை காலஞ்சென்றவர்களான தசாவதாரம். கைலாம்பிகை மற்றும் அருட்சிவம் ஞானாம்பிகை. ஜெகதீஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் சிவசங்கரன் காலஞ்சென்ற சிவகுமாரி மற்றும் கௌரிசங்கரன், ஜெயசங்கரன், சிவசெல்லம். உமாசங்கரன்.யோகசங்கரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாந்தசொரூபி. அட்சயன். சத்தியரூபி. கலைச்செல்வி. திருஞானம். தலதா ஆகியோரின் மாமனாரும். சுவர்ணி. கரிணி. கிம்அயனா, கஜாவித்யா,சாயின்,அபிநயா. கிசானா. திவ்யா. சௌம்யா. சரண்யா. சகானா.கேசிகா. துசிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03.06.2014) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணி முதல் மு.ப 11.00 மணி வரையும் அஞ்சலிக்காக கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு பின்னர் மு.ப 11.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று பி.ப ஒரு மணிக்கு கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :
011 - 2363967,0776068693

(C/14434)

தகவல் :
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## இராமநாதர் மகாலிங்கம்



புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், தற்போது கனடாவில் வசித்தவருமாகிய இராமநாதர் மகாலிங்கம் கடந்த (31.05.2014) சனிக்கிழமை புங்குடுதீவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமநாதர்-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-பெரிய தங்கச்சி தம்பதியரின் அன்பு மருமகனும், புவனேஸ்வரி (குணம்) அவர்களின் அன்புக் கணவரும், கேதாரகௌரி (கனடா) மகேஸ்வரன் (ஜேர்மனி) சத்தியபவானி, சுசீலாதேவி (கனடா) ஜெகதீஸ்வரன் (திலகா மல்ரி சென்ரர், பொற்பதி, கொக்குவில்) சிவனேஸ்வரன் (கனடா) ஞானேஸ்வரன் (சுவிஸ்) காலஞ்சென்ற சதீஸ்வரன் மற்றும் வசந்தகுமாரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவநேசன் (நேசன் புடைவையகம், புங்குடுதீவு-2) லதா (ஜேர்மனி) முத்துலிங்கம், சிவநேசன் (கனடா) திலகவதி,வசந்தமலர் (கனடா) ரூபிகா (சுவிஸ்) ஸ்ரீகாந்தன் (வேலணை பிரதேச சபை உப அலுவலகம் - புங்குடுதீவு) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம், முத்தையா, நாகம்மா மற்றும் சின்னம்மா (யாழ்ப்பாணம்) அன்னம்மா (வேலணை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான துரைச்சாமி, சுப்பிரமணியம் மற்றும் தியாகராசா (ஜேர்மனி) பூரணம் காலஞ்சென்ற அன்னம்மா மற்றும் சபாரெத்தினம் (முழங்காவில்) ஆகியோரின் மைத்துனரும், மேகநாதன் (சுவிஸ்), சாந்தகுமார் வனிசியா (நோர்வே) தமிழ்செல்வி சுமந்திரன் (கனடா) கௌசி ராகுலன் (கனடா) லவனியா, லவன், சரனியா, சர்மிளா, லவநேசன், யதார்த்தன் (நோர்வே) மதுரா, அஜந்தன், அஜந்தினி, சியான், யசிந், அபிஷா, டிலீப்காந், ஜஸ்னிகா ஆகியோரின் பேரனும், பிரியங்கா, சதுர்சிகன், மயூரி ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (04.06.2014) புதன்கிழமை மு.ப. 10.00 மணியளவில் புங்குடுதீவு 02ஆம் வட்டார இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக புங்குடுதீவு மணற்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**2 ஆம் வட்டாரம், புங்குடுதீவு.**

தொலைபேசி இலக்கம்:
077 809 4462, 077 546 8525, 077 284 5396

(48707)(10)

தகவல் :
**மனைவி, மக்கள், மருமக்கள்.**

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### பொலிஸ்

அரசு இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டையே எடுத்துள்ளது. இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள அமைச்சர் ரம்புக்வெல, 'மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரம் ஒரு போதும் வழங்கப்படமாட்டாது. ஆனால் 13 ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று அமைச்சரவையில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது' என்று குறிப்பிட்டுள்ளார்.

சில அமைச்சர்கள் மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்று தெரிவிப்பதானது அது அவர்களது தனிப்பட்ட கருத்து என்றும் இலங்கை அரசின் நிலைப்பாடு இல்லை என்றும் அவர்சுட்டிக்காட்டியுள்ளார். (ந-5)

### அரசியல்

நியமனம் என அனைத்திலும் அரசியல் தலையீடு மேலோங்கியுள்ளது. அதனால் பல்கலைக் கழகங்களது சுயாதீனம் மற்றும் கல்வித் தகைமையைப் பேண முடியாதுள்ளது. எனவே அரசியல் தலையீடுகளை நிறுத்த வேண்டும். அதுதவிர கல்விக்கு 6 வீத நிதியை ஒதுக்குமாறும் ஆசிரியர்களுக்கு அடிப்படைச் சம்பளத்தை அதிகரித்தல் வேண்டும் என்பன உட்பட பல கோரிக்கைகளையும் நிறைவேற்ற வேண்டும் என்பற்றை வலியுறுத்தியே இந்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள சம்மேளனம், ஆசிரியர்களுக்கு அடிப்படைச் சம்பளத்தை அதிகரிக்காது அவர்களின் ஆய்வுக்கான கொடுப்பனவை அடிப்படைச் சம்பளத்தின் 25 வீதத்தால் அதிகரிக்கின்றோம் என்று கூறுகின்றனர். அதனைவிடுத்து சம்பளத்தை அதிகரித்தல் வேண்டும். எமது கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்று 2012 ஆம் ஆண்டிலும் நீண்ட நாள் பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டோம். எமது கோரிக்கைகள் படிப்படியாக நிறைவேற்றப்படும் என்று கூறியிருந்தனர். ஆனால் எதுவும் நடக்கவில்லை"- என்று தெரிவித்துள்ளது.

(ந-4)

### தொடர்கிறது

விடுக்கப்பட்டுள்ள அறிவித்தல்களை மீளப்பெறுவதுடன், இனிமேல் இவ்வாறான சுவீகரிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படக் கூடாதென்று கடந்த ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத் தீர்மானத்தின் பின்னரும் பிரதேச செயலாளர்களால் காணி சுவீகரிப்பு அறிவித்தல்கள் ஒட்டப் பட்டிருந்தமையால், கடந்த மே மாதம் 26 ஆம் திகதி இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் மீளவும் கேள்வி எழுப்பப்பட்டிருந்தது. அதன் போது யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் இது தொடர்பில் தனக்கு எதுவுமே தெரியாது என்று பதிலளித்திருந்தார்.

அதையடுத்து இனிமேலாவது காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளைநிறுத்துமாறுஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனாலும் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளை இடைநிறுத்துவதற்கான உத்தரவு எதுவும் யாழ். மாவட்ட அரச அதிபரால் பிரதேச செயலகங்களுக்கோ சம்பந்தப்பட்ட ஏனைய திணைக்களங்களுங்கோ அனுப்பப்படவில்லை. இதனால் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் பிரதேச செயலர்களால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதனடிப்படையிலேயே அச்சுவேலியிலும், நுணாவிலிலும் காணி சுவீகரிப்புக்கு நில அளவைத் திணைக்களத்தினர் நேற்றுச் சென்றுள்ளனர் என்று தெரியவருகின்றது.

(ந-5)

### கடற்றொழில்

பிரதேசத்துக்கு அதிகளவான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படுகின்றன என்று மத்திய அரசின் அமைச்சர்கள் தொடர்ச்சியாகத் தெரிவித்து வருகின்றனர். இருப்பினும் கடந்த ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட மேற்படி அபிவிருத்தித் திட்டத்துக்கு இதுவரையில் அமைச்சால் எந்தவொரு நிதியும் விடுவிக்கப்படவில்லை என்று யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின்போது கடற்தொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

யாழ். மாவட்டத்திலுள்ள குருநகர், மாதகல், பருத்தித்துறை துறைமுகங்களைப் புனரமைத்தல் உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்காகவே 2 ஆயிரத்து 233 மில்லியன் ரூபா தேவை என்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இருப்பினும் இதற்குரிய நிதி ஒதுக்கீடுகள் இதுவரையில் கடற்தொழில் நீரியல் வளத் திணைக்களத்துக்கு கிடைக்கப்பெறவில்லை.

2013 ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்துக்கு 400 உயிர் காப்பு அங்கிகளும் 3 வெளிச்ச விளக்குகளுமே கடற்தொழில் நீரியல் வளத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளன. இன்னமும் 4 ஆயிரம் உயிர் காப்பு அங்கிகள் மீனவர்களுக்கு தேவையென்று கடற்தொழில் நீரியல் வளத் திணைக்களம் அமைச்சிடம் விண்ணப்பித்துள்ளபோதும் அவையும் இதுவரையில் வழங்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ந-5)

### எமது

முதலமைச்சர் பல பகுதிகளுக்கும் சென்று மக்களுடன் கலந்துரையாடினார். அதன்போது கொக்கிளாயில் மீள்குடியமர்ந்த மக்களைச் சந்தித்து அவர்களின் தேவைகள் மற்றும் வாழ்வாதாரம் தொடர்பில் ஆராய்ந்த போதே அவர்கள் கண்ணீர் மல்க இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

"1984ஆம் ஆண்டு 24 மணி நேர அவகாசத்தில் இராணுவத்தினரால் வெளியேற்றப்பட்ட நாம் மீண்டும் 2012ஆம் ஆண்டுதான் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டோம். அதிலும் அனுமதிக்கப்பட்ட பிரதேசம் தமது வாழ்விடம் மட்டுமே. எமது வாழ்வாதாரமான விவசாயநிலங்களை ஒப்படைக்கவில்லை. அந்த நிலங்களின் காணி அனுமதிப் பத்திரங்கள் எம்மிடம் உள்ளபோதும் அந்த நிலங்கள் தற்போது தென்னிலங்கை சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டு அவர்களுக்கும் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. அதனால் வாழ்வாதாரத்திற்கு வழியின்றித் நாம் தவிக்கின்றோம்.

கடல்தொழில் செய்ய க்கூடியவர்களுக்கும் கடல்தொழில் செய்யமுடியாத நிலை. ஏனெனில் நாம் தொழில் செய்த பிரதேசங்களில் 83ஆம் ஆண்டுக்கு முன் தொழில்செய்த சிங்கள மக்கள் என முதலில் 32பேருக்கு அனுமதி வழங்கப்பட்டது. பின்னர் மறைமுகமாக 72பேராக உயர்த்தப்பட்டது. ஆனால் தற்போது அங்கு 450ற்கும் மேற்பட்ட சிங்கள மக்கள் வாடி அமைத்து தொழில் செய்கின்றனர்.

அவர்களை கடல்தொழில் நீரியல் வளஅமைச்சோ அல்லது மாவட்ட அரச அதிபரோ சம்பந்தப்பட்ட எவருமே கேட்பதில்லை. இரண்டே இரண்டு சிங்களக் குடும்பம் உள்ள ஊருக்குள் தமிழ் மக்களின் ஆலயம் ஒன்றை அடாத்தாகப் பிடித்து அதில் விகாரை அமைத்துள்ளனர். இதை உடன் தடுக்க வேண்டும்"- என்று அந்த மக்கள் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

இவற்றைக் கவனமாகக் கேட்டறிந்து கொண்ட முதலமைச்சர், "உங்களின் பிரச்சனைகளுக்கு என்னால் முடிந்த தீர்வு பெற்றுத்தரப்படும். இதேவேளை உங்களது அநேக பிரச்சினைகளின் காரணம் இராணுவப் பரம்பலே. இராணுவத்தை வெளியேற்றுவதன் மூலமே விமோசனம் கிடைக்கும்" - என்று தெரிவித்தார். (ந-101)

### தமிழக

நீதிவான் ஆனந்தி கனகரட்ணம்.

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டார்கள் என்று தெரிவித்து இலங்கைக் கடற்படையால் 29 மீனவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் நேற்று மன்னார் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோதே நீதவான் அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இந்தியா ராமநாதபுரத்தைச் சேர்ந்த 29 மீனவர்களும் 6 படகுகளில் கடந்த சனிக்கிழமை இரவு இலங்கை கடற் பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது சனிக்கிழமை இரவு 11 மணியளவில் தலைமன்னார் கடற் பரப்பில் வைத்து கடற்படையால் கைது செய்யப்பட்டனர்.

குறித்த 29 மீனவர்களும் நேற்றுமுன்தினம் மாலை மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் குறித்த மீனவர் களின் படகுகளில் உள்ள வலைத்தொகுதியினை கடற்படையினர் நேற்று கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

அதையடுத்து மன்னார் மாவட்ட கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் வி.ஸ்.மெராண்டா தலைமையிலான கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் நேற்று மதியம் 12 மணியளவில் மீனவர்களை மன்னார் நீதிமன்றத்தில் முற்படுத்தியதோடு, குறித்த வலைத்தொகுதிகளையும் மன்றில் ஒப்படைத்தனர்.

விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்ணம் குறித்த மீனவர்களை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டதோடு, குறித்த மீனவர்களின் படகுகள் மற்றும் வலைத்தொகுதிகளை கடற்படையூடாக பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு கடற்தொழில் திணைக்கள அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

அதேவேளை, இலங்கைக்கான இந்திய துணை தூதரக அதிகாரிகள் கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவாகளுக்கு மாற்றுடைகளாக புதிய உடைகளும் காலை உணவும் வழங்க முற்பட்டபோது அதை ஏற்க மீனவர்கள் மறுத்து விட்டனர்

இதுகுறித்து அவர்கள் கூறும்போது, நாங்கள் அப்பாவி மீனவர்கள் எங்களை கைது செய்வதை விடுத்து இரு நாடுகளும் பேசி தீர்கமான முடிவை எடுக்கவேண்டும்"- என்று தெரிவித்தனர்.

அதன் பின்னர் சுமார் ஒரு மணி நேரத்தின் பின்னரே மீனவர்கள் புதிய உடைகளை அணிந்து நீதிமன்றம் செல்வதற்கு சம்மதித்தனர். (ந-56)

### கல்வி

அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன், "தற்போது வடமாகாண கல்வி அமைச்சு இயங்கிவரும் அதேகாணியினுள் கல்வி அமைச்சுக் கட்டடத்தின் முன்பாக புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நேற்று முற்பகல் நடப்பட்டது. மூன்று மாடிகளைக் கொண்டதாக சுமார் 55 மில்லியன் செலவில் புதிய கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது. முதற்கட்டமாக 20 மில்லியன் ரூபா செலவில் முதற்கட்டமைப்பு நிர்மாணிக்கப்படவுள்ளது.

அதில் வடக்கு மாகாண கல்வி அமைச்சு இயங்கவுள்ளது. கட்டடம் முழுமையாகப் பூர்த்தியானதன் பின்னர் மாகாணக் கல்வித் திணைக்களமும் புதிய கட்டடத்துக்கு மாற்றப்படும்"- என்று தெரிவித்தார்.

அடிக்கல் நடும் நிகழ்வில் வடக்கு மாகாணசபை அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு அடிக்கல்லை நட்டார். வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், பணியாளர்கள் உட்பட பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (ந-4)

### காணி

அறவழிப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் கட்சி வேறுபாடுகளைக் கடந்து நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டிருந்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர், எஸ். ஸ்ரீதரன், வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடக்கு மாகாண சபையின் தலைவர் சீ.வி.கே. சிவஞானம், மாகாணசபை உறுப்பினர்கள் அ.பரஞ்சோதி, எஸ். சுகிர்தன், எஸ். சிவாஜிலிங்கம், தமிழ்த் தேசியமுன்னணி செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ். கஜேந்திரன், ஈ.பி.டி.பி. அச்சுவேலி பிரதேச அமைப்பாளர் எஸ். தர்மராசா என பல அரசியல் பிரமுகர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

நில அளவை செய்தல், காணி சுவீகரிப்பு நிலைமை தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள் அச்சுவேலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.ஏ.எஸ்.கே. ஜெயசிங்கவிடம் விரிவாக எடுத்துக்கூறி விளக்கினர். அத்துடன் நில அளவையாளர் எஸ். கலாநிதியிடம் ஏடுத்து கூறினர். நிலைமையை அவதானித்த நில அளவையாளர் குழு நில அளவை செய்யாமல் திரும்பிச் சென்றது.

அதேவேளை, நுணாவிலில் 11 ஏக்கர் தனியார் காணியை கையகப்படுத்த அவற்றை அளவீடு செய்வதற்காக நேற்றுக் காலை சென்றிருந்த அதிகாரிகள் குழு மக்களின் எதிர்ப்பை அடுத்து அந்தப் பணிகளைக் கைவிட்டுத் திரும்பியுள்ளது. அங்கு திரண்ட காணி உரிமையாளர்கள் நீண்ட காலமாக இராணுவத்தினரின் பிடியிருந்த தமது காணிகளை மீட்பதற்கு நடவடிக்கை எடுக்கக் கோரி மனித உரிமை ஆணைக்குழுவில் தாம் முறைப்பாடு செய்துள்ளனர் என்று தெரிவித்துள்ளனர்.

(ந-11-9)

### ஜனாதிபதி

கடந்த மார்ச் மாதமும் மட்டக்களப்புக்கு பயணம் மேற்கொண்டிருந்த ஆணைக்குழு, தற்போது இரண்டாவது தடவையாகவும் அங்கு பயணம் மேற்கொண்டு குருக்கள்மடத்தில் முஸ்லிம் மக்கள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் விசேட அமர்வை நடத்தவுள்ளது.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஆணைக்குழு கடந்த ஜனவரி மாதத்திலிருந்து பகிரங்க அமர்வுகளை நடத்தி வருகின்றது. கிளிநொச்சி, யாழ்ப்பாணத்தில் அமர்வுகளை மேற்கொண்ட ஆணைக்குழு தொடர்ந்து மட்டக்களப்பில் கடந்த மார்ச் மாதம் அமர்வுகளை நடத்தியிருந்தது.

அதன்போது காத்தான்குடியைச் சேர்ந்த முஸ்லிம் மக்கள், தமது உறவினர்கள் குருக்கள் மடம் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டனர் என்றும், அவர்களது எலும்புக் கூடுகளை தோண்டி எடுத்து தருமாறும் ஆணைக்குழுவிடம் விசாரணையில் கோரிக்கை விடுத்திருந்தனர். அதற்கமைய முஸ்லிம் மக்கள் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட பிரதேசத்தை ஆணைக்குழுவினரும் நேரில் சென்று பார்வையிட்டிருந்தனர்.

இந்த நிலையில் இது தொடர்பில் விசேட அமர்வு நடத்துவதற்காகமட்டக்களப்புக்குஆணைக்குழு மீளவும் செல்லவுள்ளது. எதிர்வரும் 6 ஆம், 7 ஆம் திகதிகளில் காத்தான்குடி பிரதேச செயலகத்தில் அமர்வுகள் நடைபெறவுள்ளன. அதன்போது 105 பேர் சாட்சியமளிக்கவுள்ளனர். 8 ஆம், 9 ஆம் திகதிகளில் மண்முனைப் பற்று பிரதேச செயலகத்தில் அமர்வுகள் நடைபெறவுள்ளன. இதன் போது 72 பேர் சாட்சியமளிக்கவுள்ளனர். (ந-5)

### வீட்டுக்குள்

கொலை செய்து தலைமறைவாகியுள்ளார். இந்தக் கொடூர சம்பவம் முல்லைத்தீவு கேப்பாபிலவு மாதிரிக் கிராமத்தில் நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணியளவில் நடந்துள்ளது. இந்தச் சம்பவத்தில் 37வயதுடைய நாகதேவன் குமார் என்பவரே உயிரிழந்தவராவார்.

உயிரிழந்தவருக்கும், போரில் ஒருகால் ஊனமடைந்த அவரது மனைவிக்கும் இடையே அடிக்கடி சண்டை ஏற்படுவது வழமை. நேற்றுமுன்தினமும் இருவருக்கும் இடையே சண்டை மூண்டுள்ளது. அப்போது வீதியால் சென்று கொண்டிருந்த உறவுக்காரப் பெண்மணி இருவரையும் சமாதானப்படுத்த முயன்றுள்ளார். அதன்போது அவரைத் தரக்குறைவான வார்த்தைகளால் பேசினாராம் குமார்.

இந்தத் தகவல் குறித்த உறவுக்காரப் பெண்ணின் மகனுக்குத் தெரியவந்துள்ளது. அதனால் ஆவேசமடைந்த அவர், குமாரின் வீட்டுக்குள் புகுந்து அவரைச் சரமாரியாகக் கத்தியால் குத்தியுள்ளார். அதைக் கண்டு தடுக்க முயன்ற மற்றொரு இளைஞர் ஒருவரும் காயங்களுக்குள்ளானார். குத்தப்பட்டவர் இரத்த வெள்ளத்தில் விழுந்தவுடன் அவர் அங்கிருந்து தப்பித்து ஓடித் தலைமறைவாகியுள்ளார்.

தாய்க்கும் தந்தைக்கும் இடையே நேற்றுமுன்தினம் நடந்த சண்டையால் தாயை பிள்ளைகள் அறையொன்றுக்குள் வைத்துப் பூட்டியிருந்தமையால் கணவர் கத்தியால் குத்தப்பட்டதை மனைவி அறியவில்லை.

23 வயதுடைய தங்கவேலாயுதம் புகழ்ராஜ் என்ற இளைஞரே கத்தியால் குத்திவிட்டுத் தலைமறைவாகியுள்ளார். இவர் இராணுவத்தில் இணைவதற்கான நேர்முகத் தேர்வில் தோற்றியிருந்ததுடன், முல்லைத்தீவு இராணுவ விமானப் படைத்தலைமையகத்தில் உதவியாளராகப் பணிபுரிந்தும் வந்துள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

தற்போது உயிரிழந்தவரின் உடல் பிரேத பரிசோதனைகளுக்காக முல்லைத்தீவு மாஞ்சோலை மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. காயமடைந்த 23 வயதுடைய கந்தையா வசீகரன் சிகிச்சைகளுக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ந-02-55)

### அராலி ஏ.எல். உதைபந்தாட்டச் சுற்றுத் தொடர்

# கிண்ணத்தைச் சுவீகரித்தது இளவாலை யங்ஹென்றிஸ்

யாழ்ப்பாணம், ஜூன் 3

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அராலி ஏ.எல். விளையாட்டுக்கழகம் மற்றும் அராலி ஏ.எல். இளைஞர் கழகம் என்பன இணைந்து நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டத்தில் இவைவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அராலி ஏ.ஏல். விளையாட்டுக்கழக மைதானத்தில் தொடரின் இறுதியாட்டம் நடைபெற்றது.

அதில் இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணியும் தெல்லிப்பழை நாமகள் விளை யாட்டுக்கழக 'ஏ' அணியும் களமிறங்கின.

**மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் 5:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று, கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.**

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் 5:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று, கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

சிறந்த வீரர்களாக இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணி வீரன் கனிஸ்ரனும், தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழக அணி வீரன் பரணிதரனும் தெரிவு செய்யப்பட்டனர். (ற-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அரியாலை சனசமூக நிலையத்தின் 65 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ். மாவட்டத் தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகம் லீக் முறையில் மின்னொளியில் நடத்தும் தாச்சிச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மடத்தடி வைகறை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ற-23)

## ஹொக்கி நடுவர்களை தெரிவு செய்ய பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூன் 3


இலங்கை ஹொக்கிச் சம்மேளனம் யாழ். மாவட்ட ஹொக்கிச் சங்கத்துடன் இணைந்து நடத்தும் தேசிய ஹொக்கி நடுவர்களைத் தெரிவு செய்வதற்காக முதன்முறையாகத் தமிழ் மொழி மூலமான பரீட்சையும், கருத்தரங்கும் எதிர்வரும் 7ஆம், 8ஆம் திகதிகளில் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெறவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பரீட்சையில் பங்கு பற்ற விரும்புவோர் எதிர்வரும் 6ஆம் திகதிக்கு முன்னார் யாழ்ப்பாணம் மாவட்ட ஹொக்கிச் சங்கத்தின் உப தலைவர் டானியல் மதியழகனிடம் தொடர்பு கொள்ளுமாறும், பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களைப் பெற்றவர்கள் அதனை ஒப்படைக்குமாறு யாழ்.மாவட்ட ஹொக்கிச் சங்கத்தின் தலைவர் இளம்பிறையன் கேட்டுக்கொண்டுள்ளார். (ற-23)



கொழும்புத்துறை எழிலூர் சனசமூக நிலையத்தில் 35 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு ஆண், பெண் இருபாலாருக்குமான மரதன் ஓட்டப் போட்டி மற்றும் சைக்கிள் ஓட்டப் போட்டி என்பன நடத்தப்பட்டன. அதில் வெற்றி பெற்றவர்களின் விவரம் வருமாறு:- 15 கிலோ மீற்றர் சைக்கிளோட்டப் போட்டியில் கிருஷாந்தன் முதலாமிடத்தையும், அரியம் இரண்டாம் இடத்தையும், மனோகர் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர். 10 கிலோமீற்றர் மரதன் ஓட்டப் போட்டியில் நிரோஷன் முதலாம் இடத்தையும், டிலக்ஷன் இரண்டாம் இடத்தையும், தர்ஷன் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர். பெண்களுக்கான 5 கிலோமீற்றர் மரதன் ஓட்டப் போட்டியில் ஜே.நிஷாந்தின் முதலாம் இடத்தையும், அரிஞ்ஞா இரண்டாம் இடத்தையும், நிஷாந்தினி மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர். (படம்: பெண்களுக்கான மரதன் ஓட்டத்தில் ஒரு காட்சி)

## மானிப்பாய் இந்துவை வீழ்த்தியது நெல்லியடி மத்தி.



கரவெட்டி, ஜூன் 3

இலங்கை துடுப்பாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையே நடத்தப்படும் கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி 8 இலக்குகளால் வெற்றியீட்டியது.

நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணியும், மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் மோதிக் கொண்டன.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நெல்லியடி மத்திய கல்லூரி அணி முதலில் களத் தடுப்பைத் தேர்வு செய்தது. அதனை அடுத்து முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி ஓட்டங்களைப் பெற்றுக் கொள்ள முடியாது திணறியது. நெல்லியடி மத்திய கல்லூரி அணி வீரர்களின் நேர்த்தியான பந்து வீச்சில் ஓட்டங்களைப் பெற முடியாது 23.2 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 70 ஓட்டங்களையே இந்த அணியால் பெற முடிந்தது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி சார்பில் பிரசாந் 11 ஓட்டங்களையும், துசிந்தன் 9 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் அபாரமாகப் பந்து வீசிய தர்சிகன் 4 இலக்குகளையும், சிந்துஜன் 3 இலக்குகளையும், நிலவன், விஜிதன் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

71 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய நெல்லியடி மத்திய கல்லூரி அணி 12.3 பந்துப் பரிமாற்றங்களில் 2 இலக்குகளை மட்டும் இழந்து 72 ஓட்டங்களைப் பெற்று எட்டு இலக்குகளால் வெற்றியீட்டியது.

துடுப்பாட்டத்தில் தர்சிகன், எஸ்.சிந்துஜன் ஆகியோர் ஆட்டமிழக்காது முறையே 20, 17 ஓட்டங்களைப் பெற்றதுடன், எஸ்.சிந்துஜன் 17 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் லக்ஷானந் 2 இலக்குகளைக் கைப்பற்றினார். (ற-108)

## சம்பியனானது மின்னொளி

யாழ்ப்பாணம், ஜூன் 3

கைதடி மேற்கு பாரதி சனசமூக நிலையத்தின் 56 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கைதடி வலயத்திற்கு உட்பட்ட 16வயதுப் பிரிவுக்குட்டபட்ட வீரர்கள் பங்கு பற்றிய மென் பந்துக் கிரிகெட் தொடரின் இறுதியாட்டத்தில் கைதடி மின்னொளி விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

இறுதியாட்டத்தில் கைதடி மின்னொளி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கைதடி நவபுரம் நவா விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மின்னொளி விளையாட்டுக் கழக அணியினர் 6.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 63 ஓட்டங்களைப் பெற்றது.

அதில் டிலேஷெண் 42 ஓட்டங்களையும், முகிலன், சஞ்வன் ஆகியோர் 5 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் கைதடி நவபுரம் நவா விளையாட்டுக்கழக அணி சார்பில் கனிஸ்ரன், தேஜுஷென் ஆகியோர் தலா 2 இலக்குகளையும், யசிந்தன் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

64 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கைதடி மின்னொளி விளையாட்டுக் கழக அணியினர் 3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 17 ஓட்டங்களை மட்டுமே பெற்றுத் தோல்வியைத் தழுவியது.

இதில் நிலோசன் 4 ஓட்டங்களையும், கனிஸ்ரன் 2 ஓட்டங்களையும், யசிந்தன் 3 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் தைகடி மின்னொளி விளையாட்டுக் கழக அணி சார்பில் நிலேசன், முகிலன் ஆகியோர் முறையே தலா 3 இலக்குகளை வீழ்த்தினர். (ற-23)

### இளைஞர் கழகங்களுக்கிடையேயான வலைப்பந்தாட்டம்

# இரு பிரிவுகளிலும் கிண்ணம் வென்றது நல்லூர் இளைஞர் சம்மேளன அணிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ். மாவட்ட இளைஞர் கழக சம்மேளனங்களுக்கு இடையே நடத்தப்படும் மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டியில் ஓர் அங்கமான ஆண், பெண் இருபாலாருக்குமான வலைப்பந்தாட்டப் போட்டிகளில், இரு பிரிவுகளிலும் நல்லூர் பிரதேச இளைஞர் சம்மேளன அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.



நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இராமநாதன் கல்லூரியில் இந்த இறுதியாட்டங்கள் நடைபெற்றன.

முதலில் இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் நல்லூர் பிரதேச இளைஞர் சம்மேளன அணியை எதிர்த்து தெல்லிப்பழை பிரதேச இளைஞர் சம்மேளன அணி களமிறங்கியது.

விறுவிறுப்பாக நடைபெற்ற அந்த ஆட்டத்தில் நல்லூர் பிரதேச இளைஞர் சம்மேளன அணி 46:16 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது.

தொடர்ந்து இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் நல்லூர் பிரதேச இளைஞர் சம்மேளன அணியை எதிர்த்து தெல்லிப்பழை பிரதேச இளைஞர் சம்மேளன அணி மோதியது.

ஆட்டத்தின் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய நல்லூர் பிரதேச இளைஞர் சம்மேளன அணியினர் 44:17 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது. (ற-23)

# விமர்சித்தவர்களுக்கு பதிலடி



கம்பீர்

ஐ.பி.எல். கிண்ணத்தைக் கைப்பற்றியதற்கு வீரர்களின் கூட்டு முயற்சிதான் காரணம் என்று கொல்கத்தா அணித்தலைவர் கம்பீர் கூறியுள்ளார்.

2012ஆம் ஆண்டு ஐ.பி.எல். கிண்ணத்தை வென்றிருந்த கொல்கத்தா அணி தற்போது பஞ்சாப்பை வீழ்த்தி 2ஆவது முறையாக சம்பியன் பட்டம் பெற்றது.

டோனி தலைமையிலான சென்னை அணி தான் இதுவரை இரண்டு ஐ.பி.எல். கிண்ணத்தை வென்றிருந்தது. ஆனால் தற்போது அந்த வரிசையில் கொல்கத்தா அணி இணைந்து கொண்டது.

இந்த வெற்றி குறித்து கம்பீர் கூறுகையில், முதல் 7 ஆட்டத்தில் 5 தோல்வி பெற்றிருந்தோம். இதைத் தொடர்ந்து கொல்கத்தா அணியின் கதை முடிந்து விட்டது என்று சொல்லப் பட்டது.

ஆனால் தற்போது எங்களை விமர்சித்தவர்களுக்கு நாங்கள் சரியான பதிலடி கொடுத்து திறமையை நிரூபித்திருக்கிறோம். வீரர்களின் கூட்டு முயற்சியால் ஐ.பி.எல். கிண்ணத்தை 2 ஆவது முறையாக கைப்பற்றியுள்ளோம்.

நெருக்கடியில எங்கள் வீரர்கள் மிகவும் சிறப்பாக விளையாடினார்கள். மனீஷ் பாண்டேயின் ஆட்டம் மிகவும் அபாரமாக இருந்தது.

மேலும் யூசுப் பதான் தனக்குரிய பாணியில் நன்றாக ஆடினார்.

இதேபோல கடைசியில் வெற்றிக்கு பங்கு வகித்த பியூஸ் சாவ்லாவும் சிறப்பாக ஆடினார் என்று கூறியுள்ளார். (த)



கேதர் ஜாதவ்

## வேதனையில் கேதர் ஜாதவ்

பங்களாதேஷ் அணிக்கெதிரான இந்திய அணியில் தெரிவு செய்யப்பட்டுள்ள கேதர் ஜாதவ் பயிற்சி செய்ய மாதம் ரூபா 18,000 செலுத்தும் அவல நிலையை வேதனையுடன் கூறியுள்ளார்.

குறுகிய காலமான ஒரு நாள் தொடரில் பங்கேற்பதற்காக இந்திய அணி பங்களாதேஷ் கிளம்புகிறது. இந்த அணியில் டெல்லி அணியைச் சேர்ந்த கேதர் ஜாதவ் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இது பற்றி அவர் கூறுகையில், நான் கடந்த 14 ஆண்டுகளாக புனேயின் டெக்கான் ஜிம்கானா அணியில் இருந்து வருகிறேன், ஆனாலும் எனக்கு வலைப்பயிற்சி செய்ய போதிய வசதிகள் செய்து தரப்படுவதில்லை. இந்நிலையில் இந்திய அணியில் தெரிவு செய்யப்பட்டுள்ளேன். இந்தியா ஏ அணிக்கு விளையாடியுள்ளேன், ஐ.பி.எல். அணியில் ஆடி வருகிறேன். நான் இவ்வளவு தூரம் வளர்ந்து வந்தது அவர்களுக்கு மகிழ்ச்சி அளிக்கவில்லை என நினைக்கிறேன். மேலும் நான் பயிற்சி செய்ய மாதம் ரூபா 18,000 கட்டணம் செலுத்தி வருகிறேன். இந்தியாவுக்காக விளையாடும் எத்தனை வீரர்கள் தங்கள் சொந்த மாநிலத்தில் இந்த அவல நிலையைச் சந்தித்து வருகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை என்று வருத்தத்துடன் தெரிவித்துள்ளார். (கு)



## கொல்கத்தாவுக்கு வாழ்த்து தெரிவித்தார் மம்தா பானர்ஜி

ஐ.பி.எல். சம்பியனான கொல்கத்தா அணிக்கு மேற்கு வங்க முதல்வரும், திரிணாமுல் காங்கிரஸ் தலைவருமான மம்தா பானர்ஜி வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் நடந்த ஐ.பி.எல். இறுதிப்போட்டியில் பஞ்சாப்-கொல்கத்தா அணிகள் மோதின. இதில் அசத்தலாக விளையாடிய கொல்கத்தா, பஞ்சாப் அணியை வீழ்த்தி 2 ஆவது முறையாக ஐ.பி.எல். சம்பியன் பட்டம் வென்றது. இதற்கு வாழ்த்து தெரிவித்திருந்த மம்தா பானர்ஜி தனது வலைத்தளத்தில், 'வாழ்த்துக்கள்..கே.கே.ஆர்... வாழ்த்துக்கள்..சாரூக்..' என்று எழுதியுள்ளார்.

மேலும், பெங்கால் இலக்குக் காப்பாளரும், துடுப்பாட்டக்காரருமான கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியைச் சேர்ந்த சாஹா சதமடித்ததற்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார். (த)

# மக்ஸ்வெல்லுக்கு அறிவுரை



ஷேவாக் - மக்ஸ்வெல்லு

சென்னை அணிக்கெதிரான ஆட்டத்தில் அதிரடியால் அனைவரையும் உறைய வைத்த ஷேவாக் சக வீரரான மக்ஸ் வெல்லுக்கு அறிவுரை வழங்கியுள்ளார்.


பிளே-ஓப் சுற்றின் கடைசி ஆட்டத்தில் சென்னை- பஞ்சாப் அணிகள் மோதின. இதில் திடீர் அவதாரம் எடுத்த ஷேவாக் சென்னை அணி வீரர்களின் பந்து வீச்சுகளை சிக்சரும், பவுண்டரிகளுமாக பறக்கவிட்டு பஞ்சாப் அணியை இறுதிப்போட்டிக்குள் அழைத்துச் சென்றார்.

இந்நிலையில் பஞ்சாப் அணியின் சக வீரரான அதிரடி மன்னன் மக்ஸ்வெல்லுக்கு ஷேவாக் அறிவுரை வழங்கியுள்ளார். இது பற்றி அவர் கூறுகையில், நான் மக்ஸ்வெல்லிடம் டெஸ்ட் கிரிக்கெட்டே சிறந்தது என்று கூறினேன்.

பெயர் வர வேண்டுமென்றால் டெஸ்ட் கிரிக்கெட் விளையாடுவது அவசியம். அவரும் இதனை கவனத்தில் எடுத்துக் கொண்டுள்ளார்.

ஆகவே ஆஸ்திரேலியா சென்று சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் வாய்ப்பு கிடைக்கும்போது மக்ஸ்வெல் நன்றாக ஆடுவார் என்று நம்புகிறேன் என்று கூறியுள்ளார். (கு)

# பெரடர் அதிர்ச்சித் தோல்வி



ரோஜர் பெடரர்

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் போட்டி பாரிஸ் நகரில் நடந்து வருகிறது. இதில் 8 ஆவது நாளான நேற்று நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டம் ஒன்றில் 6ஆம் நிலை வீரர் தாமஸ் பெர்டிச் (செக் குடியரசு) 6-4, 6-4, 6-4 என்ற நேர்செட்டில் அமெரிக்காவின் ஜோன் இஸ்னரை தோற்கடித்து கால் இறுதிக்குள் நுழைந்தார்.

மற்றொரு ஆட்டத்தில் உலகின் 4 ஆம் நிலை வீரர் ரோஜர் பெடரர் 7-6 (7-5), 6-7 (3-7), 2-6, 6-4, 3-6 என்ற செற் கணக்கில் போராடி 18ஆம் நிலை வீரர் எர்னெஸ்ட் குல்பிஸ்சிடம் (லாத்வியா) தோல்வி கண்டு வெளியேறினார்.

மற்றைய ஆட்டங்களில் நோவாக் ஜோகோவிச் (செர்பியா), மிலோஸ் ரானிச் (கனடா) ஆகியோர் வெற்றி பெற்று கால் இறுதிக்கு முன்னேறினார்கள். மழையால் 2 நாள்கள் நீடித்த 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் விம்பிள்டன் சம்பியன் அன்டி முர்ரே (இங்கிலாந்து) 3-6, 6-3, 6-3, 4-6, 12-10 என்ற கணக்கில் ஜேர்மனியின் பிலிப்பை சாய்த்து 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

இதேபோல் மழை காரணமாக 2ஆவது நாளாக நடந்த மற்றொரு 3ஆவது சுற்று ஆட்டத்தில் ஸ்பெயின் வீரர் பெர்னாண்டோ வெர்டாஸ்கோ 6-3, 6-2, 6-3 என்ற நேர்செட்டில் பிரான்ஸ் வீரர் ரிச்சர்ட் காஸ்குயட்டை தோற்கடித்து 4ஆவது சுற்றுக்குள் அடியெடுத்து வைத்தார்.

பெண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடந்த 4ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் 18ஆம் நிலை வீராங்கனையான கனடாவின் இஜெனி பவுச்சர்ட் 6-1, 6-2 என்ற நேர்செற்றில் 8ஆம் நிலை வீராங்கனை ஏஞ்சலிக் கெர்பெரை (ஜெர்மனி) வீழ்த்தி கால் இறுதிக்கு தகுதி பெற்றார்.

மற்றொரு ஆட்டத்தில் ஸ்பெயின் வீராங்கனை கார்லா சாரெஸ் நவரோவா 6-3, 6-3 என்ற நேர்செற்றில் குரோஷியா வீராங்கனை அஜ்லா டாம்ஜானோவிச்சை தோற்கடித்து கால் இறுதிக்குள் நுழைந்தார்.

பெண்கள் இரட்டையர் பிரிவில் 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் சானியா மிர்சா (இந்தியா)-காரா பிளாக் (சிம்பாப்வே) ஜோடி 6-3, 6-3 என்ற நேர்செற்றில் ஜெலீனா ஜோன்கோவிச் (செர்பியா)-அலிசா கெய்பானோவோ ஜோடியை தோற்கடித்து கால் இறுதிக்கு தகுதி பெற்றது. கலப்பு இரட்டையர் பிரிவில் கால் இறுதி ஆட்டத்தில் ரோகன் போபண்ணா (இந்தியா)-காதரீனா செபோட்னிக் (சுலோவக்கியா) ஜோடி 6-2, 4-6, 5-10 என்ற கணக்கில் ஜூலியா ஜோர்ஜ் (ஜேர்மனி)-நினாட் ஜிமோன்ஜிச் (செர்பியா) ஜோடியிடம் தோல்வி கண்டு நடையைக் கட்டினார்கள். (த)



# மீன் வறுவலுடன் கொண்டாடிய ஷாருக்

ஐ.பி.எல் 7ஆவது தொடரில் கொல்கத்தா அணியின் வெற்றிக்கு முன் மம்தா பானர்ஜியை சந்தித்த ஷாருக்கான் அவரது வீட்டில் மீன் வறுவல் சாப்பிட்டுள்ளார்.

ஐ.பி.எல் தொடரில் கொல்கத்தா அணியின் உரிமையாளராக நடிகர் ஷாருக்கான் இருக்கிறார். இந்நிலையில் நேற்றுமுன்தினம் நடந்த இறுதிப்போட்டியில் பஞ்சாப் அணியை வீழ்த்தி கொல்கத்தா அணி வெற்றி பெற்றது.

இந்தப் போட்டிக்கு முன்பு ஷாருக். மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி வீட்டுக்கு சென்று அவரை சந்தித்து பேசினார். அப்போது ஷாருக்கானுக்கு இறுதிப்போட்டியில் கொல்கத்தா அணி வெற்றி பெற மம்தா வாழ்த்து கூறியுள்ளார்.

பிரத்தியேகமாக தயார் செய்யப்பட்ட வறுவல் மீனை சாப்பிடக் கொடுத்துள்ளார். இந்த விருந்து குறித்து ஷாருக்கான் டுவிட்டரில் கூறுகையில், மம்தா பானர்ஜி வீட்டில் மீன்வறுவல் சாப்பிட்டது இனிமையாக இருந்தது என்று கூறியுள்ளார்.(ற)

# முறையற்ற பந்து வீசுகின்றார் சச்சித்ர

## நடுவர்கள் குற்றச்சாட்டு

இலங்கை கிரிக்கெட் அணியின் சுழல் பந்துவீச்சாளர் சச்சித்ர சேனநாயக்க முறையற்ற பந்துவீச்சை மேற்கொண்டார் என்று முறையிடப்பட்டுள்ளது.

இறுதியாக இங்கிலாந்து அணியுடன் இடம்பெற்ற நான்காவது சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் முறையற்ற பந்துவீசப்பட்டுள்ளதாக நடுவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்தப்போட்டியில் இலங்கை அணி இங்கிலாந்து அணியை 7 ஓட்டங்களால் வெற்றிக்கொண்டது. இந்தநிலையில் சேனநாயக்க முறையற்ற பந்துவீச்சை மேற்கொண்டார் என்று நடுவர்கள் முறையிட்டுள்ளனர்.

மைதான நடுவர்களான மாரிஸ் எராஸ்மஸ், இயன் க்ளொவ்ட், தொலைக்காட்சி நடுவர் கிரிஸ் க்காப்னி மற்றும் போட்டி நடுவர் ஜெப் க்ரோவ் ஆகியோர் சேனநாயக்கவின் முறையற்ற பந்துவீச்சு தொடர்பில் அறிக்கை ஒன்றை இலங்கை அணியின் முகாமையாளருக்கு வழங்கியுள்ளனர்.

இதேவேளை நாளை நடைபெறவுள்ள இங்கிலாந்து அணியுடனான ஐந்தாவதும் இறுதியுமான போட்டியில் சேனாநாயக்க பங்கேற்பார் என்று ஸ்ரீலங்கா கிரிக்கட் அறிவித்துள்ளது. ஏற்கனவே முத்தையா முரளிதரனும் ஆஸ்திரேலியாவில் இவ்வாறான குற்றச்சாட்டுக்கு உள்ளாகி பின்னர் அதில் இருந்து விடுவிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)



# பல்துறை வித்தகராக அசத்தும் டிவில்லியர்ஸ்



தென்னாபிரிக்காவின் அதிரடி துடுப்பாட்டக்காரர் டிவில்லியர்ஸ் அனைவருக்கும் ஒரு கிரிக்கெட் வீரராக மட்டும் தான் தெரியும்.

இவர் கிரிக்கெட் மட்டுமல்லாது பல போட்டிகளில் கலந்து கொண்டு சாதனை பெற்றவர். கிரிக்கெட்டில் இவர் இதுவரை டெஸ்ட் போட்டிகளில் 7,168 ஓட்டங்களும், ஒருநாள் போட்டிகளில், 6,331 ஓட்டங்களும் எடுத்துள்ளார். ரி-20 மற்றும் ஒருநாள் அணியின் அணித்தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டார். பல்துறை வித்தகராக உள்ள இவர் கிரிக்கெட் தவிர பல்வேறு போட்டிகளிலும் அசத்தியுள்ளார். தென்னாபிரிக்க ஜூனியர் ஹொக்கி அணிக்கு தேர்வு செய்யப்பட்டார். தென்னாபிரிக்க தேசிய உதைபந்து, ஜூனியர் அணியில் இடம் பெற்றுள்ளார். தென்னாபிரிக்க ஜூனியர் ரக்பி அணித் தலைவராக இருந்துள்ளார். பாடசாலை அளவிலான நீச்சல் போட்டிகளில் ஆறு சாதனைகள் படைத்துள்ளார்.

தென்னாபிரிக்க ஜூனியர் தடகளத்தில், 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் வென்றுள்ளார். ஜூனியர் டேவிஸ் கிண்ண அணியிலும் இவர் இடம் பெற்றார்.

19 வயதுக்குட்பட்ட பட்மின்டன் தொடரில் தேசிய சம்பியன் பட்டம் வென்றார். அறிவியல் தொடர்பான இவரது ஆராய்ச்சிக் கட்டுரைக்கு, மறைந்த அதிபர் நெல்சன் மண்டேலாவிடம் இருந்து பதக்கம் பெற்றுள்ளார். (ற)

# கடினமான சூழ்நிலைகளை விரும்புபவன் -மனிஷ் பாண்டே



பஞ்சாப் அணிக்கெதிரான ஆட்டத்தில் அதிரடியாக விளையாடிய மனிஷ் பாண்டே, கொல்கத்தா அணி ஐ.பி.எல் கிண்ணத்தை வெல்ல காரணமாக இருந்தார்.

இவர் இந்தப் போட்டியில் 50 பந்துகளில் 94 ஓட்டங்கள் எடுத்து அசத்தினார். இதன் மூலம் கொல்கத்தா அணி கடினமான ஓட்ட இலக்கை அடைவது எளிதானது. கடைசியில் பஞ்சாப் அணியை வீழ்த்தி கொல்கத்தா 2வது முறையாக கிண்ணத்தைக் கைப் பற்றியது.

இதுகுறித்து அவர் குறிப்பிடுகையில்,

நான் கடினமான சூழ்நிலையில் விளையாடுவதை எப்பொழுதும் விரும்புபவன். ஆரம்பத்தில் இருந்த நிலையை தக்க வைத்து கொண்டால் நாங்கள் 200 ஓட்டங்களை எடுத்து விடுவோம் என்று அந்த சமயத்தில் நான் கருதினேன்.

மேலும், இதுவரை ரஞ்சி கிண்ணம், இராணி கிண்ணம் ஆகிய பட்டங்களை பெற்றுள்ளோம். ஐ.பி.எல். போட்டி மட்டும் வெற்றி பெறாத ஒன்றாக இருந்து வந்தது. ஆனால் தற்போது ஐ.பி.எல் கிண்ணத்தையும் வென்றுள்ளது அதிக மகிழ்ச்சி தரும் ஒன்றாக அமைந்துள்ளது என்று தெரிவித்துள்ளார். (ற)

ஷாம்சனின்
தேசிய ஆங்கில டிப்ளோமா
இங்கிலீஷ் பேசுறது இப்ப ரொம்ப ஈசி
வீட்டிலிருந்தபடியே ஷாம்சனின் 20 புத்தகங்களையும் கற்று ஒவ்வொன்றிலுமுள்ள 250 பயிற்சிகளை செய்து எம்மிடம் ஒப்படைத்தால் போதுமானது. பயிற்சியின் முடிவில் உங்களாலும் சுயமாகவும் சரளமாகவும் ஆங்கிலத்தில் பேசமுடியும்.
20 வருட ஆராய்ச்சியின் மூலம் உருவாக்கப்பட்ட இப் பயிற்சியில் பாடசாலை மாணவர்கள், தொழில் புரிவோர், மற்றும் வீட்டுப்பெண்கள் இணையமுடியும்
06.06.2014 இற்குமுன் பயிற்சியில் இணையும் அனைவருக்கும் பயிற்சிக் கட்டணம் ரூ.3000 என்பதுடன் 20 புத்தகங்களும் முற்றிலும் இலவசம்!
இலங்கையெங்கும் உள்ள எவரும் தபால் மூலம் இப்பயிற்சிநெறியை தொடரமுடியும். பயிற்சி நெறிமுடிவில் "Diploma in English" Certificate வழங்கப்படும்.
இலங்கையில் பல அரச,தனியார் நிறுவன ஊழியர்களுக்கு ஆங்கிலம் பயிற்றுவித்த நிறுவனம்
SAAMSON LANGUAGE SCHOOL
யாழ்நகர்.
021 320 3313
077 621 4567

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.06.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.